தமிழ்ச் செல்வம்

கி. ஆ. பெ. விசுவநாதம்

959
13593
13593

தமிழ்ச் செல்வம்

முத்தமிழ்க் காவலர், கலைமாமணி
டாக்டர். கி. ஆ. பெ. விசுவநாதம் டி. லிட்.

பாரி நிலையம்
184. பிராட்வே • சென்னை • 600108

முதற் பதிப்பு : ஜனவரி, 1955.
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல், 1956.
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர், 1959.
நான்காம் பதிப்பு : நவம்பர், 1963.
ஐந்தாம் பதிப்பு : ஜூன், 1968.
ஆறாம் பதிப்பு : 1973.
ஏழாம் பதிப்பு : அக்டோபர், 1977.
எட்டாம் பதிப்பு ஆகஸ்ட், 1980.
ஒன்பதாம் பதிப்பு : நவம்பர், 1982.
பத்தாம் பதிப்பு : டிசம்பர், 1985.

விலை ரூ. 10-00

நடிப்புரிமை :

டி. கே. எஸ். சகோதரர்கள்

பாடல்களை இயற்றியவர்கள் :

கவிஞர் பாரதிதாசன்
கு. சா. கிருஷ்ணமூர்த்தி
புத்தனேரி ரா. சுப்பிரமணியம்
எம். கே. ஆத்மநாதன்
கரந்தைக் கவி அரசு

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

முன்னுரை

[நாடகப் பேராசிரியர் - ராவ்பகதூர்-
திரு. ப. சம்பந்த முதலியார் B.A., B.L., அவர்கள்]

ஒரு நல்ல விஷயத்தைப் பலர் அறியும்படி செய்வதற்கு மூன்று வழிகள் உள்ளன. ஒன்று, அதைக் கவிதைகள் மூலமாகத் தெரிவிப்பது; அப்படித் தெரிவித்தால் சிலருக்கே அது பயன்படும். இரண்டாவது, கதையாக அவ்விஷயத்தை எடுத்துரைப்பது; அது இன்னும் சிலருக்குப் பயன்படும். மூன்றாவது, நாடகரூபமாகத் தெரிவிப்பது; இது கற்றவர், கல்லாதார், ஆண், பெண், குழந்தை முதலிய அனைவர்க்கும் பயனளிக்கும். இது என்னுடைய முடிவு.

இந் நாடகத்தில் நமது முன்னோர்களாகிய தமிழர்களுடைய பண்பாடுகளையும், அரும்பெருங் குணங்களையும், ஒன்றையும் விடாது திரட்டிப் பல காட்சிகளாக்கி, அக்காட்சிகளில் பேசும் நாடகப் பாத்திரங்களைக் கொண்டு அவைகளை விளக்கி, இக் காட்சிகளையெல்லாம் கோவையாக விலையுயர்ந்த மணிக்கோவையாக்கி, இதற்கு முதற் காட்சியென்னும் ஓர் மாணிக்கப் பதக்கத்தை அமைத்து, ஓர் பெரிய நாடகமாக்கி, அதற்குச் 'தமிழ்ச் செல்வம்' எனும் பெயரிட்டு, உலகிலுள்ள தமிழர்களுக்கெல்லாம் உதவியுள்ளார். என் நண்பர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்.

இதுவரையில் நம் தமிழ்நாட்டில் வாழ்ந்த முன்னோர்களின் அரிய பெரிய குணங்களை அறிந்தவர் சிலரே. அறியாதவர் பலர். அவர்களுள் நானும் ஒருவன். இத்தகைய நிலையில் நமது முன்னோர்களின் குணங்களை அறியுமாறு, நமது கண்களைத் திறந்து விளக்கியுள்ளது இத் தமிழ்ச் செல்வம்.

இந் நாடகத்தை ஒரே இரவில் நடிக்க முடியாதவர்கள், இரண்டு மூன்று பிரிவுகளாகப் பிரித்து நடிக்கலாம். பள்ளிகளில் படிக்கும் தமிழ் மாணவர்கள், தங்களுடைய சங்கங்

களின் வருடாந்திரக் கொண்டாட்டத்தில், ஆங்கிலம் முதலிய மொழிகளில் இருந்து ஏதாவது ஒரு காட்சியை எடுத்து நடிப்பதைவிட, நமது ஆசிரியருடைய நாடகத்தி லிருந்து ஒவ்வொரு பிரிவையும் நடத்தினால், அது அவர் களுக்கும் பயன்படும்; அதைப் பார்க்க வந்திருக்கும் பெரியோர்களுக்கும் பயனளிக்கும். இந் நாடகம் பேசும் படமாக வெளிவரவேண்டுமென்பது என் ஆசை. அப்படிச் செய்தால் கணக்கற்ற மக்களுக்கும் நல்ல போதனையாக இருந்து பெரிதும் பயன்படும்.

இத் 'தமிழ்ச் செல்வத்'தை நமக்குக் கொடுத்த நாடக ஆசிரியருக்கு நாம் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? இந்தச் செல்வம், ஏனைய செல்வத்தைப்போல் அன்றி, என்றும் குன்றாத செல்வமாகக் காட்சி அளிக்கிறது. படிக்கப் படிக்க மேலும் மேலும் பயன் தரும் செல்வம். இதை உதவிய ஆசிரியருக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றுண்டு. அது 'தமிழன்' என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவனும், தமிழ் நாட்டிலிருந்தாலும் சரி, வேறு எந்தக் கண்டத்தில் குடியேறியிருந்தாலும் சரி, அவன் இப் புத்தகத்தை வாங்கிப் படித்து, உணர்ந்து மகிழ்ந்து, நமது முன்னோர்களைப் போல் நாமும் ஏதாவது தமிழ் உலகிற்கு நன்மை செய்யவேண்டும் என்று எண்ணுவதேயாகும்.

எனக்கு ஈசன் அருளிய எண்பத்து இரண்டாவது வயதில், எனது நண்பர் விசுவநாதம் அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள இப்பேருதவியில், நானும் ஒரு தினையளவு பங்கெடுத்துக் கொள்ளுமாறு, எனக்கு இம் முன்னுரை எழுத இடங் கொடுத்ததற்காக, அவருக்கு எனது மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் நாடகக் கலை வாழ்க! தமிழ் அன்னையைப் போற்றுபவர்கள் வாழ்க! தமிழ் அன்னை என்றும் இளமை குன்றாது வாழ்க!

இங்ஙனம்,
தங்கள் ஊழியன்,
ப. சம்பந்தம்

சென்னை,
15-12-1954

பதிப்புரை

புகழ் பெற்ற நாடகக் கலைஞர்களாகிய டி. கே. எஸ். சகோதரர்கள், இத் "தமிழ்ச் செல்வ"த்தை தமிழகம் எங்கும் நடித்து வருகிறார் கள். தமிழகத்தைத் தாண்டி டில்லியிலும் பம்பா யிலும் கல்கத்தாவிலும் நடித்திருக்கிறார்கள். திருச்சி வானொலியும், சென்னை வானொலியும், டில்லி வானொலியும், மைசூர் வானொலியும் இதனை நடித்து ஒலிபரப்பி உள்ளன. டில்லி வானொலியிலிருந்து ஐரோப்பியருக்கான வெளி நாட்டு அஞ்சலிலும், தமிழ் மக்களுக்கான வெளி நாட்டு அஞ்சலிலும், இது ஒலி பரப்பப்பட்டுள்ளது. கன்னட மக்கள் கேட்டு மகிழ, இது கன்னட மொழி யிலும் ஒலிபரப்பப்பட்டுள்ளது.

இது இன்னும் பல இந்திய மொழிகளிலும், உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப் பெறும் என்ற நம்பிக்கையும், நமது உயர்ந்த பண் பாட்டைப் பிறர் கண்டு மகிழ இத் தமிழ்ச்செல்வம் உதவும் என்ற நம்பிக்கையும், எங்களுக்கு உண்டு.

"தமிழ்ச் செல்வம்" பெரும் வெற்றி அடைந்த தற்குக் காரணங்கள் மூன்று. முதல் காரணம், நாட கத்தின் பொருள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்வாங்கு வாழ்ந்த தமிழ்ப் பெருமக்களின் உயர்ந்த பண்பாட்டையும், நாகரிகத்தையும்,

தமிழ் இலக்கியங்களிலிருந்து எடுத்து விளக்கியிருப்பது. இரண்டாவது, ஒரு சிறந்த தமிழ் அறிஞர் தமிழின் இனிமையும் பெருமையும் தோன்ற இதனை நல்ல முறையில் வகுத்து நாடக உலகிற்கு ஒரு புதிய வழியைக் காட்டியிருப்பது.

திருச்சி விசுவநாதம் அவர்களைத் தமிழகம் இதுவரை சிறந்த வணிகராக, நாவன்மை மிக்க நாவலராக, மொழிப் போராட்ட வீரராக, தன்னலம் கருதாத அரசியல்வாதியாக, நுண் அறிவு மிகுந்த எழுத்தாளராக அறிந்திருக்கிறது. இன்று நாம் இத் 'தமிழ்ச் செல்வத்'தின் மூலம் தமிழகத்தின் சிறந்த நாடக ஆசிரியர்களில் ஒருவராகவும் அவர்களைக் காண்கிறோம்.

எங்கள் நிலைய வாயிலாக, இவ்வளவு சிறந்த நூல் ஒன்று வெளிவர வாய்ப்பளித்த திரு. விசுவநாதம் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது. இந் நூலில் வெளியிடப்பட்டிருக்கும் புகைப்படங்களை உதவிய திரு. டி. கே. எஸ். சகோதரர்களுக்கும், நாடகக் கலையின்பால் உள்ள காதலால் தமது முதிர்ந்த வயதிலும் இந் நாடகம் முழுவதையும் படித்துப் பார்த்து, அரிய முன்னுரை தந்துதவிய நாடகப் பேராசிரியர்—திரு. ப. சம்பந்த முதலியார் B A., B.L., அவர்களுக்கும், எங்கள் உள்ளங் கனிந்த நன்றி உரியது.

சென்னை-1
ஜனவரி, 1955

பாரி நிலையத்தார்

உள்ளுறை

			பக்கம்
1.	நாடகத் தொடக்கம்	...	9
2.	நாடு	...	17
3.	மக்கள்	...	23
4.	செல்வம்	...	33
5.	காதல்	...	50
6.	கொடை	...	61
7.	வீரம்	...	72
8.	இழிவு	...	87
9.	சிறப்பு	...	96
10.	கற்பு	...	104
11.	நாடக முடிபு	...	124

வணக்கம்

தன் நலங் கருதாது, தமிழ் நலங் கருதி
தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்து
தமிழகத்தை விட்டு மறைந்த
தமிழ்த் தலைவன்

திரு. வி. க. அவர்களின் திருவடிகளுக்கு

இந்நூல்

ஓர் அன்பு மலராக அளிக்கப்பெறுகிறது.

திருச்சி, *1-1-55.* கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ்ச் செல்வம்

நாடகத் தொடக்கம்

தமிழாசிரியர் வீடு

[ஒருபுறம் மேடையில் தமிழ்நாட்டுப் படம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியரும் மாணவனும் கரங் குவித்தபடி அதன்முன் நின்று பாடிக் கொண்டிருக்கின்றனர்.]

தேவி செந்தமிழ்த் தாயே பராவுதும்
ஆவி தந்தருள் வாளே பராவுதும்
தேரும் எம்பெரும் பேறே பராவுதும் —ஏற்பாயோ...

[ஓர் ஆங்கில நாகரிகரும், மற்றொரு இந்தி நாகரிகரும் வருகின்றனர்.]

ஆங். நா. : குட் ஈவினிங் சார்!......

இங். நா. : நமஸ்தே ஜீ...

தமி : வணக்கம், வாருங்கள்!...தம்பீ!...இரண்டு குறிச்சிகள் கொண்டுவந்து போடு...

ஆங். நா. : நோ...நோ...வேணும்...

[மாணவன் குறிச்சிகள் கொண்டுவர]

தமி : உட்காருங்கள்...

ஆங் : தாங்க்ஸ்...(உட்காருகிறார்)

தமி : என்னிடம் என்ன வேலையாக வந்தீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாமோ?

ஆங் : உங்களுக்கு ட்ரபில் குடுக்கிறதுக்காக ரொம்ப மன்னிக்கணும் சார். எக்ஸ்கியூஸ்மி.

தமி : அப்படியெல்லாம் ஒன்றுமில்லை; சொல்லுங்கள்.

இந் : படா சமாச்சார் ஒண்ணுமில்லே பாபு!

ஆங்: எஸ் சார்...ஒரு சின்ன மேட்டர்!...

இந் : மேட்டராவது! வாட்டராவது! விஷயமின்னு சொல்லுங்களேன் பாபு... உஸ்தாத் ஜீ! நீங்களே சொல்லுங்க. இங்க்லீஸ்வாலா நம்ம தேசத்தை விட்டுப் போயி எத்தனை வருஷமாச்சு? அந்த பாஷை நமக்கெதுக்கு?

ஆங் : சார், பிளீஸ் ஒன் மினிட்!...டீச்சர் சார்! இவரு இந்தி இந்தீன்னு உயிரை விடுகிறாரே! அந்த லாங்க் வேஜிலே என்ன சார் இருக்கு?

இந் ஹிந்தி நம்ம இந்தியாவின் தேசீய பாஷை!...

ஆங் : நோ...நோ... இங்க்லீஷ் வொர்ல்டு கிரேட் லாங்க்வேஜ்!

இந் : மை போல்தா பாபு...அதான் அடிமைப் புத்தீண்ணு.

ஆங் : வாட் நான்சென்ஸ்! யார், யார் அடிமை?...

தமி : வேண்டாம் நண்பர்களே, சண்டை வேண்டாம். ஆங்கிலத்திற்காகவும், இந்திக்காகவும் சண்டை போடும் நீங்கள் தமிழை மறந்துவிட்டீர்களே! இது முறையா?...உலகமொழி யென்றும், பொது மொழி யென்றும் போராடித் தாய்மொழியாகிய தமிழைப் புறக்கணிக்க முயல்வது தவறல்லவா?

இந் : தமிழ் என்ன பாபு! ஊட்லே தினமும் பேசறது தானே. தானா வருது...இந்தி நம்ம பரதகண்டத் துக்கே பொது பாஷை. அதைப் படிக்கலேண்ணா இந்தியன்னு எப்படி பாபு சொல்லிக்கறது?

ஆங் : நோ...நோ...தட் ஈஸ் ராங்க். இங்க்லீஷ் படிக்கலேன்னா அப்பறம் லைப்லே என்ன இருக்கு? நமக்கு நாகரிகங் கத்துக்குடுத்ததே இங்க்லீஷ்தானே...

இங் : பாபு! இப்பவே சொல்றேன். நீங்க புரியாமே பேசறீங்க...இன்னும் பத்து வருஷத்துக்குள்ளே இந்தி கத்துக்கலேண்ணா...?

தமி : என்ன நடந்துவிடும்?

இங் : என்ன நடக்குமா?...அது...அது...என்னா ஆவுமிண்ணு எனக்கே தெரியாது.

ஆங் : இங்க்லீஷை நீங்க படிக்கலே...அப்புறம் இந்த இந்தியா...?

தமி : என்ன ஆய்விடும்?

ஆங் : என்ன ஆயிடுமா?...ஊம்; என்ன ஆயிடுமுண்ணா கேக்றீங்க...அதைப்பத்தி திங்க் பண்ணவே முடியலெ.

தமி: நண்பர்களே! உங்களிருவர் கூற்றையும் நான் மறுக்க வில்லை; மறுப்பதும் என்னுடைய வேலையல்ல. ஒன்று மட்டும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், உலக உறவுக்கு ஆங்கிலமும் இந்திய உறவுக்கு இந்தியும் தேவைப்படுமானால், தமிழ் நாட்டிற்குத் தமிழ் தேவையே இல்லையா? பால் மணம் மாறாத உங்கள் பச்சிளங் குழந்தைகளுக்குத் தாய்மொழிப் பயிற்சியை, அதுவும் பிறந்த நாட்டில் கூட அளிக்காமல், பிறமொழிப் பயிற்சியளிப்பதால் என்ன பயன்?

இங் : இதுதான் த்வேஷ மனோபாவம்னு சொல்றது. இதிலேல்லாம் குறுகின புத்தி கூடாது பாபு!

தமி : நம்முடைய தாய் நாட்டில், நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் உயர்வு பெறவேண்டும் என்று நாம் விரும்புவது துவேஷ புத்தியா?

ஆங் : டீச்சர் சார்! டமில் ரூல் பண்ண முடியுமா, ரூல்?...

தமி : என்ன, டமில் ரூலா?

இங் : தேசத்தை நிர்வாகம் பண்ண தமிழ் பாஷையாலே முடியுமாண்ணு கேட்கிறார். நியாயமான கேள்வி.

தமி : ஏன் தமிழாலே நாடாள முடியாது?...நாடு ஆண்டது தமிழ் மொழிதானே! தமிழாலே நாடாள முடியுமாவென்று என்னையேன் கேட்கிறீர்கள்! கலிங்கத்தைக் கேளுங்கள்; சிங்களத்தை கேளுங்கள்; பர்மாவைக் கேளுங்கள்; மலேயாவைக் கேளுங்கள்; ஜாவாவைக் கேளுங்கள்; கங்கையைக் கேளுங்கள்; இமயத்தைக் கேளுங்கள்—அவை சொல்லும், தமிழ் நாடாண்ட வரலாற்றை.

ஆங் : இஞ்சினீரிங் ஆர்ட் தமில்லே உண்டா சார்? பில்டிங் கட்ட முடியுமா உங்க தமிழ் படிச்சுட்டு...

தமி : ஐயோ! கண்ணிருந்தும் குருடராய் வாழுகிறீர்களே! கட்டடக் கலை தமிழுக்குண்டாவென்றா கேட்கிறீர்கள்? என்னைக் கேட்காதீர்கள். வானளவ உயர்ந்து, தமிழரின் கட்டடக்கலை நுணுக்கத்தைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் கோபுரங்களைக் கேளுங்கள். ஆலயங்களைக் கேளுங்கள்...மேனாட்டார் கண்டு கண்டு வியக்கும் கல்லணையைக் கேளுங்கள்... தமிழரின் கட்டிடக் கலைத்திறனை அவை சொல்லும்.

ஆங் : சார், நீங்க என்னதான் சொல்லுங்க, ஒரு ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி...ஆஹா! பியூட்டிபுல் லிட்ரச்சர்! தமில்லே என்ன சார் இருக்கு?

தமி : தமிழில் என்ன இல்லை? எல்லாம் இருக்கிறது! நீங்கள் படிக்கவில்லை. பல மொழிகளையும் கற்றறிந்த உலக அறிஞர்களிற் பலர் தமிழைக் கற்று மிகமிகப் பாராட்டியிருக்கின்றனர். தமிழ் நன்

கறிந்த ஆங்கிலப் பேரறிஞர் போப்பையர், தான் சாகும்போது தன்னுடைய கல்லறைக் கல்லில் "தமிழ் மாணவன்" என்று எழுதும்படி வேண்டி உயிர் துறந்திருக்கிறார். தமிழ் நமது தாய்மொழி என்ற பற்றினால் மட்டும் நான் அதை உயர்த்திப் பேசவில்லை. பிற மொழிகளுக்கு இல்லாத சிறப்பு, தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டுமே இருக்கிறது. நீங்கள் அதனை விரும்பிப் படிக்க வேண்டும், உங்கள் பிள்ளைகளுக்கும் தமிழின் மூலமே எல்லாக் கலைகளையும் போதிக்க வேண்டும். தமிழை ஊன்றிப் படித்தால் பண்பு வளரும்; ஒழுக்கம் உயரும்; அடக்கம் ஏற்படும்; அன்பு மலரும்...உடைகளை மாற்றிக் கொள்ளுங்கள்; கவலையில்லை. உணவை மாற்றிக் கொள்ளுங்கள்; வருந்தவில்லை. உள்ளத்தை மட்டும் தூய தமிழ் உள்ளமாக வைத்துக் கொள்ளுங்கள். அன்பும் பண்பும், அடக்கமும் ஒழுக்கமும் உங்களிடம் இருக்கவேண்டுமானால், உள்ளத்தைப் பிற மொழிகளுக்கு அடிமைப்படுத்தி விடாதீர்கள்.

தமிழ்மக்களாகிய உங்களிடம், தமிழனாகிய நான் "தமிழைப் படியுங்கள்" என்று, அதுவும் தமிழ் நாட்டிலேயே கூறிக் கொண்டிருப்பது, தமிழ்க் குலத்திற்கே ஒரு மானக்கேடு ஆகும்.

இந் : மத்த பாஷைகளுக்கு இல்லாத ஒரு சிறப்பு தமிழுக்கு இருக்குதின்னு சொன்னீங்களே!... அது என்ன பாபு?

தமி : ஒன்று என்ன: நான்கு சிறப்புக்கள் இருக்கின்றன. முதலாவது, இனிய மொழி எளிய மொழி, சிறந்த மொழி, தனித்த மொழி, பழைய மொழி, என்ற ஐந்து அடைமொழிகளுக்கும் தமிழ் ஒன்றே தகுதி

யுடையது என்பது. இரண்டாவது, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் பெற்ற மொழி 'தமிழ்' என்பது. மூன்றாவது. தமிழில் உள்ள "அகப் பொருள் இலக்கணம்" போல இன்றைக்கும் பிற மொழிகளில் இல்லை என்பது. நான்காவது, ஒழுக்கத்தைப்பற்றி மட்டும் கூறியிருக்கிற தனி நூல் கள் பிற மொழிகளிலேயே காணப்படாமல், தமிழ் மொழியில் மட்டுமே காணப்படுவது. இவை நான்கும் தமிழுக்குள்ள தனிச் சிறப்புக்கள்.

இங் : ஒழுக்கத்தைப்பத்தி சொல்ற நூல்கள் எது?

தமி : ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி, இன்னா நாற்பது, இனியது நாற்பது, திரிகடுகம், நன்மணிக்கடிகை, நாலடியார், திருக் குறள் முதலியனவாகும். இவற்றுள் பல நூல்கள் சிற்சில துறைகளில் மட்டுமே ஒழுக்கத்தைப்பற்றிக் கூறுகின்றன. ஆனால், திருக்குறள் மட்டும் எல்லாத் துறைகளிலும் ஒழுக்கத்தை வற்புறுத்திக் கூறி, முற்றும் நிறைந்த தமிழ்ச் செல்வமாகக் காட்சி யளித்து வருகிறது.

ஆங் : இதைத் தவிர வேறே நூல்களும் இருக்குதா சார், தமிழிலே?

தமி : ஆம்; இருந்தது முன்னொரு காலத்தில். அந்நூல் களிற் பல அடுத்தடுத்துத் தோன்றிய கடற்கோள் களால் அழிந்து போயின. அதற்கும் தப்பிய நூல் களிற் சில படையெடுப்புக்களால் அழிந்தொழிந்தன. எஞ்சியுள்ள நூற்களிற் சில நஞ்சுமனங் கொண்ட மக்கள் வஞ்சகமாக உள்நுழைந்து நூல்நிலையங் களைத் தீயிட்டு அழித்ததால் சாம்பலாயின. இதற் கும் தப்பிய சில அருஞ்சுவடிகளில் உள்ள தீஞ்சுவை யை மக்கள் உண்ணாததால் கறையான்களும், செல் லுப் பூச்சிகளும் சுவைத்துத் தின்று அழித்தொழித்

தன. எல்லாவற்றிற்கும் தப்பி, ஏணி ஏறி, பரணியின்மீது வைத்து, பழம் புலவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த சில சுவடிகள்தான் மீதமாக இருந்தன. "பழைய சுவடிகளை ஆடி பதினெட்டாம் பெருக்கில் ஆற்றிலே கொட்டினால் புண்ணியம்" என்ற ஒரு கொள்கை தமிழ் நாட்டில் பரவியது. இதனால், மிஞ்சியிருந்த சுவடிகள் யாவும் காவிரிக்கு இரையாகிப் போயின. இவ்வளவுக்கும் தப்பி, இப்போது நம்மிடையே இருப்பவை விரல்விட்டு எண்ணக் கூடியவையே. அவை:

"பத்துப்பாட்டு; எட்டுத்தொகை;
பதினெண் கீழ்க் கணக்கு"

என்பன. இவற்றுள்ளும், பத்துப்பாட்டில் முதற் பாட்டுக்கே ஐயப்பாடு தோன்றியிருக்கிறது. எட்டுத் தொகையில் புறநானூறு ஒன்று. அதில்

முன்னடி யில்லாத பாட்டு இரண்டு;
முடிவடி யில்லாத பாட்டு மூன்று;
இடையடி யில்லாத பாட்டு நாற்பது;
அடியோடு இல்லாத பாட்டு இரண்டு.

ஆக மொத்தம் நானூறு என்றேயிருக்கிறது. பதினெண் கீழ்க்கணக்கில் சில நூல்களின் பெயர்கள் தானிருக்கின்றன. ஐம்பெருங் காப்பியங்களில் ஐந்துக்கு இரண்டு, அடியோடு இல்லை. இசை நூல்களோ எதுவும் முழு உருவில் இல்லை. முத்தொள்ளாயிரம் முக்காற்பங்கு இல்லை. நாடக நூல்களோ அடியோடு இல்லை. இவ்வளவும் அழிந்து, இருக்கின்ற சில நூல்களைக்கூட, தங்களைப் போன்ற தமிழர்கள் படிப்பதுமில்லையென்றால், தமிழ்தான் எப்படி வாழும்? தமிழர்கள்தாம் எப்படி வாழ்வார்கள்? இவர்களைச் சுமந்து நிற்கும் நாடு

தான் எவ்வாறு வாழும்?...இறுதியாக வந்த தமிழ்ப் புலவன் பாரதிகூடச் சொன்னான்...

''வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ;
வீட்டுப் பாஷை கற்கிலாய் போ...போ...போ''

என்று விரட்டினான் பாரதி...ஏது பயன்? தமிழர்களாகிய நீங்கள் இன்னும் உங்கள் வீட்டு மொழியைத்தானே விரட்டியடிக்கிறீர்கள்!

ஆங் : நீங்க சொல்றதைக் கேக்கக் கொஞ்சம் வெக்கமாகத்தான் சார் இருக்கு...

இந் : தப்புத்தான் பாபு! எனக்கு சாதாரணமாகப் படிக்கவரும்; இந்தக் கவி கிவீண்ணு வந்துட்டா கொஞ்சம் தகராறு தான். ஒன்னும் புரியறதில்லை...

தமி : பிற மொழிகளைப் படித்துப் புரிந்துகொள்ளும் உங்களுக்கு, உங்கள் மொழி புரியவில்லையென்பது இன்னும் தலை குனியவேண்டிய செய்தி. நீங்கள் முயற்சிக்கவில்லை; அது மொழியின் குற்றமல்ல.

உலகில் எந்த நாட்டிலும், எந்த மொழியிலும், எந்த புலவனாலும், இன்றைக்கும் கூறப்படாத பல உயர்ந்த கருத்துக்களை, நமது மொழியில், நமது புலவர்கள், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கிறார்கள். அக் கருத்துக்கள் ஒவ்வொன்றும் இலட்சம் பொன் பெறும். சுருங்கக் கூறவேண்டுமானால், நமது 'தமிழே ஒரு செல்வம்' எனக் கூறலாம்.

ஆங் : அப்படியா! இரண்டொன்றைக் கூறுங்கள் பார்க்கலாம்.

தமி : இதோ கூறுகிறேன் பாருங்கள்!...

[திருக்குறளைக் கையில் எடுக்கிறார். திரை விழுகிறது.]

நாடு

திருக்குறள்

காட்சி : 1

பாண்டிய மன்னனது அரண்மனை

[பாண்டியரும் அமைச்சரும் பிறரும் கொலு வீற்றிருக்கின்றனர். நடனம் நடைபெறுகிறது.]

தலைவணங்கிடுவாய் தமிழா—செந்
தமிழ்க்கொடி வானுயர்ந்து பறக்குது பார்—அதற்கு— (தலை)
மலைவிளக்காய் மாநில மக்களுக்கெல்லாம்—உயர்
கலைவிளக்கம் செய்யும் கன்னித் தமிழ்க்கொடிக்கே (தலை)
சிலையும் புலியும் மிக சித்தரித்தே—இமய
சிகரமதில் நெடுந்தென்னன் பாண்டியன்—இந்த
உலகமெல்லாம் வியக்க உயர்த்தியதாம்—திரு
உயர்தனிச் சிறப்பெல்லாம் உரிய தமிழ்க் கொடிக்கே (தலை)

[வாயில் காவலன் வருகிறான்.]

காவலன் : வாழ்க—மன்னர் மன்னவா...வணக்கம். தெய்வப் புலவர் திருவள்ளுவப் பெருந்தகையார் வந்துள்ளார்.

வள்ளுவர் : வாழ்க...நின் கொற்றம்!

மன்னர் : வணக்கம்...வரவேண்டும்...புலவரேறே! வர வேண்டும்.

வ : என்றும் நன்றே நிலவுக!

ம : கவியரசே, தாங்கள் இங்கு எழுந்தருளியது எங்கள் பெரும் பேறாகும். வேண்டுவது என்னவோ?

வ : வேந்தே, ஒரு நல்ல நாடு எங்கு இருக்கிறதெனத் தேடிப் பார்க்க எண்ணிப் புறப்பட்டேன். உம்மிடம் விடைபெற்றுச் செல்லவே இங்கு வந்தேன்.

ம : (வியப்போடு) ஒரு நல்ல நாடு...!

அமைச்சர் : ஒரு நல்ல நாடு...!

எல்லோரும் : ஒரு நல்ல நாடு...

வ :ஆம்.. ஒரு நல்ல நாடு, சிறந்த நாடு, உயர்ந்த நாடு!

பு : பாண்டிய நாட்டிற்குப் புறம்பாகவா...?

வ : ஆம்...

பு : புலவரேறே! தாங்கள் கூறுவதன் பொருள் என்ன?

ம : புலவர் பெருமக்களே! நமது தீந்தமிழ்ப் பாண்டிய நாட்டைவிடச் சிறந்த ஒரு நாடு இவ்வுலகின் எப் பக்கத்திலாவது இருக்கிறதா என்று தேடிப் பார்க் கவே, பொய்யா மொழியினர் புறப்படுவதாகத் தெரிகிறது? இதில் என்ன தவறு இருக்கிறது.

வ : இல்லை மன்னவா. நினது பாண்டிய நாட்டை ஒரு நிறைந்த நாடாக யான் கருதி இருந்தாலன்றோ, மற்றொரு சிறந்த நாடு என்று கூறுவதற்குப் பொருள் உண்டு. அவ்வாறன்று. யான் காண விரும்பும் ஒரு நல்ல நாடு, இன்னும் எனது கண்களிற் படவில்லை. அத்தகைய ஒரு நல்ல நாட்டினைக் காணும் நற்பேற்றினை இறைவன் எனக்கு அளிக்க வேண்டுமென்றே இறைஞ்சுகின்றேன்.

ம : தென்பாண்டி நாடு; பைந்தமிழ் வளர்க்கச் சங்கம் கண்ட நாடு; இந்த நாட்டைவிட ஒரு நல்ல நாடா? எனக்கொன்றும் விளங்கவில்லையே?

வ : வேந்தே! தமிழ் வளர்த்த பெருமை உனக்குண்டு. அதனை யான் மறுக்கவில்லை. வடவேங்கடம் குமரி யிடைப்பட்ட தமிழகத்திலே வாழும் புலவர்களெல் லாம், நினது பாண்டி நாட்டிலே வந்து, முத்தமிழை ஆராய்ந்து முடிவுகட்டச் சங்கம் வளர்க்கின்றாய். அந்தப் பெருமை நினக்குண்டு. சேர சோழ நாடு களுக்கில்லாத அந்தத் தனிச்சிறப்பு நினது பாண்டி

நாட்டிற்கு உண்டு. ஆனால், யான் காணவிரும்பும் ஒரு நல்ல நாடு மொழி வளர்க்கும் நாடுமட்டுமல்ல; வேங்கடத்திற்கு அப்பாற் சென்றேனும், கடல் கடந்து சென்றேனும், உலகிலே அத்தகைய ஒரு நல்ல நாட்டைக் காண விழைகின்றேன்.

அ : புலவர் பெரும! மன்னிக்க வேண்டும். ஒரு நல்ல நாடு எப்படியிருக்கும், எப்படி இருக்கவேண்டும் என்பது, தங்கள் கருத்து?

வ : அமைச்சரே!

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

பசியும் பிணியும் பகையும் சேராத நாடே ஒரு நல்ல நாடாகும்.

அ : இம் மூன்றும், நமது பாண்டி நாட்டில் தலை காட்டிப் பல ஆண்டுகள் ஆயினவே.

ம : அமைச்சரே! பொய்யா மொழியினர்க்கு முதலில் நமது பாண்டி நாடு முழுவதையும் காட்டுங்கள். பிறகு அவர்கள் சென்று, பிற நாடுகளையும் கண்டு வரட்டும்...

அ : மன்னர் கட்டளை...

[அழைத்துச் செல்லல்—காட்சி முடிவு]

காட்சி : 2

தெரு

[வள்ளுவரும் அமைச்சரும், ஒரு காவலரும் வருகின் றனர்.]

அ : புலவர் பெரும! வந்தவர்களுக்கெல்லாம் இல்லை யென்னாது, வாரிவாரிப் பெருஞ்சோறு வழங்கும் பேரானந்தக் காட்சியைக் கண்டீர்களல்லவா?

வ ; கண்டேன்...கண்டேன்.

வ: நகரத்தில் மட்டுமல்ல, பாண்டிய நாடு முழுவதும் ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, இவ்வாறு பெருஞ் சோறு அளித்து, மக்கள் பசியறியாது பாதுகாத்து வருகிறோம்—பாண்டி நாடு முழுவதும் ,ஒருவர்கூடப் பசியாக இருப்பதில்லை. பசி பசியென்று ஒலமிடும் குரல் கேட்கக்கூடாது என்பது மன்னரின் கட்டளை.

வ: அப்படியா...!

அ: (ஒரு புறம் கையைக் காட்டி) அதோ பாருங்கள். மருந்துச்'சாலையின் உள்ளிருந்து, நோயுற்ற மக்கள் சாரிசாரியாய் வெளிவருவதை. இத்தகைய மருந்துச் சாலைகள் நாடு முழுவதும் வைக்கப்பட்டுள்ளன. திறமையான மருத்துவர்களின் கண்காணிப்பில் பாண்டி நாட்டில் பிணி வந்தடைவதில்லை என்றே கூறலாம். இனி ஆயுதச்சாலைக்குச் செல்லுவோமா?

வ: ஆயுதச் சாலைக்கா...?

ம: ஆம். பாண்டி நாட்டின் படைப் பெருக்கத்தையும், போர்க் கருவிகளின் திண்மையையும், வீரர்களின் வலிமையையும் உலகமே நன்கு அறியும். ஆதலின், பகையென்பதே நம் நாட்டைச் சேர்வதில்லை. வாருங்கள் பார்ப்போம்...

[செல்கின்றனர்]

காட்சி முடிவு

காட்சி : 3

அரசர் கொலுவிருக்கை

[மன்னர் முதலியோர் இருக்கின்றனர். வள்ளுவர் அமைச்சர் வருகுன்றனர்.]

ம: வரவேண்டும்... வரவேண்டும்...புலவர் பெரும! பாண்டி நாடு முழுதும் பார்த்தீர்களா?

வ : நகரத்தைப் பார்த்ததே போதும் என்று வந்துவிட்டேன்; நாடு முழுதும் பார்க்க யான் விரும்பவில்லை.

ம : மக்கள் பசியற்று வாழ, தெருவுக்குத்தெரு பெருஞ்சோறு வழங்குதைக் கண்டீர்களா?...

வ : கண்டேன்! பசி பசியென்று ஓலமிட்ட மக்கள், வயிறார உண்டு, மகிழ்ச்சியடைவதைக் கண்டேன்! பிணியினால் வருந்தும் பல்லாயிரவர் மருத்துவச்சாலைகளிலே மருந்துண்பதைக் கண்டேன்! உலகமே வியக்கும் படைக்கருவிகளையுடைய நினது ஆயுதச்சாலைகளையும் கண்டேன்!

ம : தாங்கள் கூறியதுபோல், பசியும் பிணியும் பகையும் இல்லாத ஒரு நல்ல நாடு, நமது தென்பாண்டி நாடு என்பதில், இன்னும் ஐயம் உளதோ? மகிழ்ச்சி தானே!

வ : மன்னவா! அமைச்சரே! புலவர் பெருமக்களே! என் கண்கள் இத்தனை நாளும் இவைகளைப் பாராது இருந்ததுபோல, இன்றும் பாராதிருந்திருக்கக் கூடாதா என்றே ஏங்குகிறேன்...

எல் : ஹா! என்ன?

வ : இத்தகைய காட்சிகளைக் காணவா நான் புறப்பட்டேன்? இந் நகரில் சோறு வழங்கும் இடத்தைப் பார்த்தபோதே திடுக்கிட்டேன்! அமைச்சர், நாடு முழுவதும் இவ்வாறே நடைபெறுகிறது என்றதும் நடுங்கிவிட்டேன். இது பாண்டி நாட்டிலே பசியில்லை என்பதையா காட்டுகிறது? பசி, பசியென்று ஓலமிடும் பிச்சைக்காரர்களின் பெருக்கத்தையன்றோ காட்டுகிறது! தெருவுக்குத்தெரு மருந்துச்சாலைகள் என்றால், அது பிணியறியாது வாழும் மக்களின் நல்வாழ்வையா குறிக்கின்றது? எண்ணிப் பாருங்கள்.

நோயாளிகளின் பெருக்கத்தையன்றோ காட்டு கின்றது! அதுபோல ஆயுதச் சாலைகளும், படைப் பெருக்கமும், போர்க்கருவிகளின் திண்மையும் பார்க்கும்பொழுதே, இந் நாட்டிற்குப் பகைவர்கள் மிகுதியாக இருக்கின்றார்கள் என்பது புலப்பட வில்லையா? இத்தகைய காட்சிகளைக் கண்டு யான் எங்ஙனம் மகிழ்ச்சியடைய முடியும்? எனது உள்ளம் பெரிதும் வேதனைப்படுகிறது. இதுவா நல்ல நாடு? இல்லை...இல்லை!

எல் : பின்,]தங்கள் கருத்து!

வ : உழைக்கும் மக்கள் பசியால் வாடும் நிலை காணப் பட்டால், அது ஊராள்வோனின் குற்றமல்லவா? நோய்கள் உண்டாவதற் கிடமில்லாத முறையில் மக்கள் உடல்நலம் பேணி வாழ்வதற்குரிய வழி வகுத்துக் கொடுக்காமல், மருத்துவச்சாலைகளை மட்டும் அதிகரிப்பதால் யாது பயன்? அன்புவழியால் பகைவரைத் தன்வயப்படுத்தி, நட்பை வளர்த்து, போரை ஒழிக்க முயற்சிக்காமல் படைக்கருவிகளைப் பெருக்குவதால் என்ன பயன்?...ஆகவே சோறு வழங்காமல் பசியற்று வாழும் நாடாகவும், மருந்து கொடாமல் பிணியற்று வாழும் நாடாகவும், போரிடாமல் பகையற்று வாழும் நாடாகவும் உள்ள தென்பாண்டி நாட்டை யான் காணவேண்டும். சென்று வருகிறேன். யான் திரும்பி வரும்போது, இந்நாட்டை ஒரு நல்ல நாடாகக் காண்பேனாக! வாழ்க நின் கொற்றம்!

[செல்கிறார் வள்ளுவர்]

எல் : தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் வாழ்க...

காட்சி முடிவு

மக்கள்

புறநானூறு

காட்சி : 1

சோழநாடு, கரிகால் மன்னரது அரண்மனை

வாயில் காப்போன் : அரசே, வணக்கம்......தங்களைப் பார்க்க யாரோ இரண்டு பெரியவர்கள் வந்திருக்கிறார்கள்.

கரிகாலன் : எங்கே?...வரச்சொல்.

[இருவரையும் அழைத்து வருகிறான் வாயிற் காப்போன்.]

இரு : அரசே, வணக்கம்!

க : வாருங்கள்......அமருங்கள்......உங்களுக்கு என்ன வேண்டும்?

ஒ : (மற்றவரைத் தனியே அழைத்து) நண்பரே, மன்னரைப் பார்த்தீரோ...!

ம : பார்த்தேன்.

ஒ : மிகவும் சிறுவயதினராய்த் தோன்றுகிறாரே!

ம : ஆமாம் ...அதனால் என்ன?

ஒ : இல்லை. நம் வழக்கைத் தீர்க்கும் அனுபவமும் ஆற்றலும் இவர்க்கு இருக்குமா என்றுதான் சிந்திக்கிறேன்.

ம : எனக்கும் கொஞ்சம் சந்தேகமாகத்தான் இருக்கிறது. என்ன இருந்தாலும் மன்னரல்லவா? பரம்பரைப் பண்பு மறைந்துவிடுமா?

ஒ : எனக்கு என்னமோ அவ்வளவு நம்பிக்கை இல்லை. பேசாமல் திரும்பிச் செல்வதே மேல் என்று எண்ணுகிறேன்.

ம : சரி, உமக்கு விருப்பமில்லையென்றால் நான் மட்டும் நம்பிக்கை வைத்து என்ன பயன்?

[இருவரும் தயக்கத்துடன் புறப்படுகின்றனர்.]

க : பெரியோர்களே, ஆர்வத்தோடு வந்த நீங்கள் அமரக்கூட மனமில்லாமல் ஏதோ சஞ்சலப்படு கின்றீர்களே, ஏன்?

ஒ : (தயக்கத்துடன்) மன்னரைத்தான் நாடி வந்தோம். ஆனால்...

க : ஆனால் என்ன? வந்த காரியத்தைச் சொல்லுங் களேன்.

ம : சொல்லுவதற்கு மனமும் இல்லை; துணிவுமில்லை.

க : மனமில்லாதவர்கள் வந்திருக்கவே வேண்டிய தில்லையே. என்னிடம் எதனையுங் கூசாமற் கூறலாம். துணிவை இழக்கவேண்டாம்.

[வந்தவர் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து தயக்கத்துடன் விழிக்கின்றார்கள்.]

ம : எங்கள் இரண்டு பேருக்கும் ஒரு வழக்கு ஏற்பட் டுள்ளது. அதனைத் தீர்க்கவே வந்தோம். ஆனால்...

க : வழக்கைச் சொல்ல மருட்சி ஏன்?

[இருவரும் மீண்டும் தயக்கப்படுகின்றனர்.]

க : அன்பர்களே, சொல்ல வேண்டியதை அஞ்சாமற் சொல்லுங்கள். மன்னனாயிற்றே என்று மருள வேண்டாம்.

ஒ : அரசே, நாங்கள் ஊரைவிட்டுப் புறப்படுமுன் எங்கள் கற்பனையிலே காட்சியளித்த மன்னர் வேறு; இன்று நாங்கள் காணும் மன்னர் வேறு. ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்த...

க : ஓஹோ!...சரி...சரி...உங்கள் தயக்கத்தின் காரணம் நன்றாக விளங்கிவிட்டது. 'வயதிற் சிறிய மன்னனால் வழக்குத் தீர்க்க முடியுமா?' என்றுதானே கலங்கு கிறீர்கள்?

[வந்தவர் இருவரும் ஒருவரையொருவர் நோக்கி அசட்டுச் சிரிப்பும், மன்னன் வாயினாலேயே தம் கருத்து விளக்கப்பட்டது குறித்து ஆறுதலும் காட்டுகின்றனர்.]

இ : மன்னவா! மன்னிக்கவேண்டும். எங்கள் குறிப்பை எளிதில் புரிந்துகொண்டீர்கள்.

க : பெரியோர்களே! நீங்கள் நினைப்பது சரிதான். நமது அரண்மனை வழக்குமன்றத்திலே ஒரு பெரியவர் இருக்கிறார். ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்த அவரிடம் உங்கள் வழக்கைத் தெரிவிக்க லாம். நாளை வாருங்கள்.

[இருவரும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் செல் கின்றனர்.]

காட்சி : 2

தெரு

முதல்வர் : நண்பரே, மன்னரைப் பார்த்தவுடன் உண் மையாகவே எனக்குத் திகைப்பு ஏற்பட்டுவிட்டது. இவ்வளவு இளைஞர் நமது வழக்கைப்பற்றி நன்றாகப் புரிந்துகொள்ளவே முடியாதே; அப்புறம் எப்படி நியாயம் வழங்குவாரென்று நாம் துணிந்து சொல்லியது நல்லதாகப் போய்விட்டது இல்லையா?

இரண்டாமவர் : சந்தேகமென்ன? நாற்பது வயதானால் நல்ல குணம் என்பதே பழமொழியாச்சே! இளமைக்கு எப்போதும் துடிப்பு அதிகமல்லவா? எது சரி? எது தவறு? என்று நன்கு ஆராய்ந்து முடிவு செய்ய இளமை உணர்ச்சி இடமளிப்பதில்லையே. அதனால்தான் நானும் யோசித்தேன்.

மு : நம்முடைய எண்ணத்தை அறிந்த பின்னும், மன்னர் சிறிதும் வருந்தியதாகத் தோன்றவில்லை பார்த்தீரா?

[library stamp]

இ : அதுதானே மன்னருக்கும் மற்றவருக்கும் உள்ள வேறுபாடு! ஆஹா! புன்னகை அப்படியே அவரது முகத்தில் விளையாடியதே!

மு : இளைஞராயிருந்தாலும் அறிவுத்திறன் அபாரம். நமது எண்ணத்தை எவ்வளவு எளிதாகப் புரிந்து கொண்டார்! நாளை நீதிமன்றத்திற்கு அவரும் வரக் கூடுமென்று நினைக்கிறேன். வாரும், வாரும்.

காட்சி : 3

வழக்கு மன்றம்

[முதியவர் உடையில் மன்னர் இருக்கின்றார். வழக்குடைய இருவரும் மன்றத்திற்கு வந்து மூதறிஞரை வணங்குகின்றனர். அறிஞருக்கு அருகில் அமைச்சர் அமர்ந்திருக்கின்றார்.]

அமைச்சர் : வாருங்கள், பெரியோர்களே! எங்கு வந்தீர்கள்?

ஒருவர் : வழக்குரைக்க வந்தோம். மன்னர்...

மூதறிஞர் : ஓகோ! நேற்று அரசர் குறிப்பிட்ட பெரியவர்கள் நீங்கள்தாமோ?

இருவரும் : ஆமாம்...ஆமாம்...

அ : உங்களில் வழக்காடுபவர் யார்? எதிர்ப்பவர் யார்?

ஒ: நான்தான் வழக்குத் தொடுப்பவன்; இவர் எதிர்ப்பவர்.

அ : புதுமையாயிருக்கிறதே! இருவரும் சேர்ந்தே வந்திருக்கிறீர்களே? சாட்சி கூறுவது யார்?

மற்றவர் : எனக்கு அவர் சாட்சி; அவருக்கு நான் சாட்சி. தனியே ஒரு சாட்சி இவ்வழக்கிற்குத் தேவையில்லை என்றே கருதுகிறோம்.

மூ : சரி, உங்கள் வழக்கைக் கூறுங்கள்.

மு : நான் இவரிடம் சென்ற ஆண்டில் ஒரு நிலம் வாங்கினேன். அதில் வீடு கட்டுவதற்காகப் பள்ளம்

தோண்டினேன். ஒரு புதையல் தென்பட்டது. நிறையப் பொன் கட்டிகள். புதையல் யாருக்குச் சொந்தம்?

அ : ஆமாம், நீர் என்ன சொல்கிறீர்?

மு : (மற்றவரைக் காண்பித்து) அவர் நிலத்தில் கிடைத்ததால், புதையல் அவருக்குத்தான் சொந்தம் என்கிறேன் நான்.

ம : நண்பர் சொல்வது வேடிக்கையாகவே இருக்கிறது. நான்தான் நிலத்தை விற்றுவிட்டேனே! புதையலில் எனக்கு ஏது உரிமை?

மூ : உங்கள் வழக்கு உண்மையிலேயே வேடிக்கையாகத் தான் இருக்கிறது. சில நாடுகளிலெல்லாம் அடுத்தவன் பொருளை அபகரிக்கும் ஆட்களே ஏராளம். இங்கோ தங்கப் புதையலைக்கூட எனக்கு வேண்டாம், எனக்கு உரியதல்ல என்று வழக்காடுகின்றீர்கள். உங்களைப் போன்ற குடிமக்களைப் பெற்ற சோழமன்னனின் பெருமையே பெருமை!

மு : நீங்களே சொல்லுங்கள் ஐயா! அவர் நிலத்தை மட்டுந்தானே விற்றார்? புதையலுக்கு நான் எப்படி உரிமை கொண்டாட முடியும்?

ம : விற்றது நிலந்தான். ஆனாலும் அதில் உள்ள மண், கல், நீர், மரம், செடி முதலிய யாவும் சேர்ந்த ஒன்று தானே நிலம். விற்ற நிலத்தில் இருந்த புதையலை நான் எப்படித் திரும்ப ஏற்றுக் கொள்வேன்?

மு : அவர் நிலம். விற்றாரே தவிர, புதையலை விற்க வில்லை.

ம : மாடு விற்றால் கன்றும் சேர்ந்ததுதானே? மரம் விற்றால் கனியும் சேர்ந்ததுதானே?

மு : மாடு வாங்கும்போது கன்றையும் பார்க்கிறோம். மரம் வாங்கும்போது பழமும் காணப்படுகிறது. ஆகவே, அவை வாங்கியவரையே சேரும். நிலம்

வாங்கும்போது புதையல் காணப்படவில்லையே— அது எப்படி என்னைச் சேரும்?

ம : அவர் வழக்கு நியாயமல்ல. மரம் விற்றால் அதன் அடிவேர் யாருக்குச் சொந்தம்? மரம் வாங்கும்போது வேர் கண்ணுக்குத் தெரிகின்றதா?

மு : மரத்தின் அடிவேர் உண்டு என்பது கண்ணாற் காண முடியாவிட்டாலும் கருத்தால் அறியக் கூடியது தானே? நிலம் வாங்கும்போது அதில் புதையல் இருக்குமென்று எப்படிக் கருத முடியும்?

ம : இதெல்லாம் வீண் வாதம். புதையல் எனக்கு உரிய தல்ல.

மு : அறிஞர் பெரும! நான் கொடுத்த விலைக்கும் அகப் பட்ட பொருளுக்கும் கொஞ்சமும் பொருத்தமில்லை. விற்ற நண்பர் புதையல் இருப்பது தெரிந்திருந்தால் இவ்வளவு குறைநத விலைக்கு விற்றிருக்க மாட்டார். நானும் இவ்வளவு குறைந்த விலைக்கு வாங்கியிருக்க மாட்டேன். இன்னொருவர் பொருளை விலை யின்றிப் பெற என் மனம் இடங்கொடுக்காது. ஆகவே, புதையலை அவர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்யவேண்டுகிறேன்.

ம : மனமார விலைக்கு விற்றுவிட்ட ஒரு பொருளைத் திரும்பப்பெற ஒருக்காலும் என் மனம் இசையாது. புதையலை அவரே வைத்துக்கொள்ள வேண்டும்.

அ : இவ்வளவுதானே உங்கள் வழக்கு? (மூதறிஞரை நோக்கி) அறிஞர் பெரும! இவர்கள் இருவர் கூறு வதும் உண்மைதான். புதையல் இருவருக்கும் சொந்தமல்ல. அது நாடு ஆளும் மன்னனுக்கே உரியது. அவ்வாறே தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

மூ : நன்று நன்று, உம் கருத்து. இரண்டு பேரும் உரிமை பற்றி வழக்காடும்போது, புதையலை மன்னனுக்குச்

சேர்ப்பதா? நல்ல நியாயம்? அமைச்சர் காட்டும் நல் வழியா இது? மக்கள் காட்டிய பண்பு இந்த மண்டலத்தையே உயர்த்தியது. அமைச்சரின் உள்ளம் மிகமிகச் சுருங்கிவிட்டதே. ஆட்சி நடத்துவதற்கு மக்கள் மனமுவந்தளிக்கும் ஆறிலொரு கடமையே போதும். நீர் கூறியபடி கட்டளையிடுவதாயின் இவர்கள் வழக்கு இந்த மன்றத்திற்கே வராதே! (பின் முதலாமவரை நோக்கி) உமக்குக் குழந்தை யிருக்கிறதா?

மு : ஆம். ஒரு பையன் இருக்கிறான்.

மூ : (இரண்டாமவரை நோக்கி) உமக்கு?

ம : ஒரே பெண் இருக்குதுங்க.

மூ : பையனுக்கும் பெண்ணுக்கும் பழக்கமுண்டா?

இரு : ஆமாங்க...இரண்டு பேரும் உயிருக்குயிராய்ப் பழகியவங்க.

மூ : அந்த ரெண்டு பேருக்கும் திருமணம் செய்ய விரைவில் ஏற்பாடுகள் செய்யுங்கள்.

மு : என்ன இது? நாங்கள் வழக்குத் தீர்க்க வந்தால் நீங்கள் திருமண ஏற்பாடு என்கிறீர்களே!

மூ : ஆம்; நீங்கள் குறிப்பிட்ட புதையல் உங்கள் இருவருக்கும் சொந்தமல்ல. அதனை அந்தக் காளைக்கும் கன்னிக்கும் திருமணப் பரிசாகக் கொடுத்துவிட வேண்டியதே நீதியாகும். என்ன சொல்கிறீர்கள்?

ம : நல்ல ஏற்பாடுதானுங்க. எனக்கு ஏற்கெனவே இந்த எண்ணம் உண்டு. நண்பர் ஒப்புக்கொள்வாரோ என்ற ஐயத்தினால் பேசாமல் இருந்தேன். உங்கள் தீர்ப்பு எங்களுக்கு நல்ல பாதையைக் காட்டிவிட்டது. ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர் தவிர, வேறு யாராலும் இவ்வளவு துணிவான ஒரு முடிவைச் செய்ய முடியாது. உங்கள் பெருமையே பெருமை.

மூ : பெரியோர்களே, நீங்கள் நினைக்கிறபடி நான் ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவனல்ல. உங்களைப் போன்ற பண்புள்ள மக்களைப் பெற்ற நாட்டை ஆளும் நற்பேறு பெற்ற ஒரு சிறியோனே நான்.

[தாடி மீசை முதலியவற்றைக் கழற்றிவிட்டுப் புன்னகை பூக்கிறான்.]

இரு : என்ன நம் மன்னரா! அரசே, மன்னிக்க வேண்டும். தங்கள் பருவத்தையும் உருவத்தையும் கண்டு ஐயங் கொண்ட எங்களுக்கு நல்ல வழிகாட்டினீர்கள்.

மூ : மன்னர் கரிகாலர் வாழ்க! வாழ்க!

காட்சி மாற்றம்

காட்சி : 4

[சோழ மன்னரின் அரண்மனையிலிருந்து தங்கள் இருப்பிடம் வந்துகொண்டிருந்த இருவரும் தங்கள் மகனும் மகளும் உரையாடிக்கொண் டிருப்பதைப் பார்க்கின்றனர்.]

ஒருவர் : (இருவரில் ஒருவர்) அன்பரே! என்ன இது? மன்னரின் முடிவுக்கும் நமது முடிவுக்கும் முன்னே நமது மக்களின் முடிவு...?

மற்றவர் : இரும்...இரும்...அவர்கள் என்ன பேசிக்கொண் டிருக்கிறார்கள் என்பதை அறியலாம்.

[தம் மக்கள் பேசுவதைக் கேட்கின்றனர்.]

கன்னி : நமது எண்ணம் நிறைவேறத் தடையாக இருப்பது ஒன்று உண்டு.

காளை : என்ன அது?

க : தமிழ்!

கா : நான் நம்பவில்லை. தமிழ் ஒருபோதும் நம் காதலைத் தடை செய்துவிடாது.

க : இல்லை அன்பரே! உண்மை இதுதான். தமிழைப் படியாத எவரையும் மணம் செய்வதில்லை என்று உறுதி கொண்டுள்ளேன்.

கா : நான் தமிழைப் படியாதவன் என்று உன்னிடம் சொல்லியது யார்?

க : எல்லோருந்தான் தமிழைப் படிக்கிறார்கள்; எழுதுகிறார்கள். அதில் புலமையிருக்க வேண்டாமா?

கா : நான் புலவன் அல்ல என்று நீ அறிந்தது எப்படி?

க : அப்படியா? நீங்கள் யாரிடத்தில் பாடம் கேட்டுப் புலவர் ஆனீர்கள்?

கா : அதெல்லாம் எதற்கு? வேண்டியது புலமைதானே?

க : அப்படியானால் ஒரு தேர்வு நடத்தட்டுமா?

கா : அன்பே, நன்றாய் நடத்து...அறிந்தவரையில் கூறுகிறேன்.

க : எங்கே, ஒரு கிளிக்கண்ணி பாடவேண்டும். அதில் தமிழரது மலைச் சிறப்பு அமைந்திருக்கவேண்டும்.

கா : இவ்வளவுதானே! கேள்:

உலகில் உயர்ந்தமலை
ஓங்கி வளர்ந்தமலை,
வளவன் புலிபொறித்த—கிளியே!
வடஇமயத் தமிழர்மலை.

க : மலைச் சிறப்பு மிகவும் நீண்டுவிட்டது. என்றாலும், நன்றாயிருக்கிறது? காட்டுச் சிறப்பு?

கா : அச்சுறுத்தும் யானை புலி
அழகான மான்மயில்கள்
பச்சைப் பசும்புல்லிலே—கிளியே!
பரந்துவிளை யாடுமடி!

க : சரி, நாட்டுச் சிறப்பு?

கா : செந்நெல்லும் தேன்கரும்பும்.
சீனிவெல்லம் கற்கண்டும்,
பண்கலந்து விளைவிப்பார்—கிளியே
பால்வார்க்கும் கைகளினால்.

க *மிகுந்த சுவை? மிகுந்த சுவை!... நகரச் சிறப்பு?*

கா : சாவகத்தார். பாரசீகர்,
ஜப்பானியர், சீனர், நேப்பாள்,
உரோமர், யவனர், பிறர்—கிளியே!
உவந்துவந்து வாழ்ந்ததிங்கே.

க : *வீரம்?*

கா : கலிங்கத்தைச் சிங்களத்தைக்
கடல்சூழ்ந்த சிங்கை, ஜாவா
பர்மாவை ஆண்டுவந்தார்—கிளியே!
பார்புகழ்ந்த தமிழ் மன்னர்.

க : *வணிகம்?*

கா : அகில் சந்தனம் மிளகு
ஆணிமுத்து பவளம் மணி
வெளிநாடுகட் கனுப்பி—கிளியே!
வெகுபுகழ் பெற்றோமடி.

க : *அப்படியானால் நான் பேறு பெற்றவள்தான்.*

கன்னியின் தந்தை : *வெறும் பேறு பெற்றவள் அல்ல மகளே! நீ பெரும் பேறு பெற்றவள். அன்பரே! திருமணப் பரிசாக உமது கையாலேயே அச் செல்வத்தை வழங்கி மணமக்களை வாழ்த்துங்கள்.*

மற்றவர் : *ஆம்; செல்வத்தை வழங்கி நம் செல்வங்களை வாழ்த்த வேண்டியதுதான்.*

இருவரும் : *தமிழும் அதன் இனிமையும்போல வாழுங்கள்! தமிழை வாழ்த்தி வாழுங்கள்! தமிழ் வாழுங் காலம் வரை வாழுங்கள்!*

செல்வம்

திருக்குறள்

காட்சி : 1

[ஓர் ஏழைக் குடும்பத்தில் தந்தையும் தாயும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

தா : என்னங்க, நம்ம குழந்தைகளுக்கு வயது வந்து விட்டதே. எங்கேனும் பெண்களைப் பார்த்து அவர்களுக்கு நம் கண் இருக்கும்பொழுதே திருமணம் செய்துவைத்துப் பார்க்கவேண்டாா?

தந்தை : ஆம்; செய்ய வேண்டியதுதான். திருமணத்துக்குப் பிறகு, தனியே இருந்து குடும்பம் நடத்துவதற்குரிய, அறிவுவந்த பிள்ளைகளாயிருக்கிறார்களா வென்று தெரிந்துகொள்ள வேண்டாமா? அவர்கள் குடும்பத்தையும் நாம் தாங்கவேண்டிய நிலைமை வந்துவிடக்கூடாதே. அவனவன் தனது மனைவியோடு தனித்திருந்து குடும்பம் நடத்துவதற்குரிய செல்வத்தை முதலில் தேடிக்கொண்டு வரட்டும். பிறகு திருமணத்தை முடிப்போம்.

தா : அதுவும் உண்மைதான். இதோ கண்ணனும் வந்து விட்டான்.

கண்ணன் : வணக்கம், அப்பா!

த : கண்ணா, திண்ணன் எங்கே?

திண்ணன் இதோ வந்துவிட்டேன், அப்பா! வணக்கம்.

த : கண்ணா, திண்ணா! நீங்கள் இருவரும், குறைந்த காலத்திற்குள் நிறைந்த செல்வத்தைத் தேடி வர வேண்டும்.

க : அப்படியே ஆகட்டும் அப்பா. [தந்தை உட்செல்லு கிறார்] அம்மா, நாங்கள் இருவரும் சென்று வரு கிறோம். விடை கொடுங்கள்.

தா : எங்கேயப்பா?

க : செல்வம் தேட.

தா : இவ்வூரில் இருந்தே தேடக்கூடாதா?

தி : என்னம்மா! தேடி வாருங்கள் என்று அப்பா சொன்னதிலிருந்தே அவர் கருத்து விளங்க வில்லையா? அப்பாவின் கட்டளைப்படி எப்படி யாவது செல்வத்தைத் தேடி வருவோம். விடை கொடுங்கள்.

தா : அப்படியானால், விரைவில் வெற்றியோடு திரும்பி வாருங்கள்.

[சென்று விடுகின்றனர்]

காட்சி : 2

தெரு

[கண்ணனும் திண்ணனும் வருகிறார்கள்]

கண்ணன் : தம்பி, அப்பா என்ன சொன்னார்? நினை விருக்கிறதா?

திண்ணன் : நிறைந்த செல்வத்தைத் தேடி வாருங்கள் என்றார்.

க : ஆம். தேடி வாருங்கள் என்றுதான் சொன்னார். தேடிக் கொண்டுவாருங்கள் என்று சொல்ல வில்லையே?

தி : அதுதானண்ணா, எனக்கும் விளங்கவில்லை. அப்பா ஏதோ உட்கருத்துடன்தான் சொல்லி இருக் கிறார்.

க : எது செல்வம்? என்றே நமக்குத் தெரியவில்லையே! அதை எப்படித் தேடுவது?

தி : முயற்சிப்போம் அண்ணா, முயற்சிப்போம். (குப்பன் வருகிறான்) இதோ இவரைக் கேட்போமே. ஐயா, நிறைந்த செல்வமுடையவர்கள் எவரேனும் பக்கத்துச் சிற்றூர்களில் உண்டோ?

குப்பன் : நிறைந்த செல்வ முடையவர்களா?

இருவரும் : ஆம்.

கு : இங்கிருந்து மூன்று கல் தூரத்தில் முத்துப்பட்டி என்று ஒர் ஊர் இருக்கிறது. அவ்வூர் சமீந்தார் காளியப்ப ரகுநாத நாயக்கர் ஒருவர்தான் இப்பக்கத்தில் நிறைந்த செல்வமுடையவர். வாருங்கள் என்னோடு; நானும் அங்கேதான் போகிறேன். நான் அவருடைய வேலைக்காரன் குப்பன்.

க : மிக்க நன்றி ஐயா.

[போகின்றனர்]

காட்சி : 3

சமீன் அரண்மனை

[சமீந்தார் அளவுக்கு மீறி உண்டு, பெரு ஏப்பம் விட்டுத் திணறிக்கொண்டிருக்கிறார். பணியாள் ஒருவன் அவர் பக்கத்திலேயே இருந்து பணி விடை செய்துகொண்டிருக்கிறான்.]

சமீந்தார் : டே குப்பா! (குப்பன் ஓடி வருகிறான்) வைத்தியர் வந்தாரா?

குப்பன் : அரை நாழியிலே வர்ரதாச் சொன்னாருங்க எஜமான்.

ச : எழவு, எதைத் தின்னாலும் செரிமானம் ஆக மாட்டேங்குதே ஏண்டா, ஜீரணக்கருவிகள் சரியா வேலை செய்யலையோ? உம், பசியே எடுக்கமாட்

டெங்குதே. ஏண்டா குப்பா, சாத்துக்குடி கிடைக்கலையா?

கு : இது காலம் இல்லீங்களே. அதுக்குத்தான் நம்ம தோட்டத்திலேயே பத்து மரத்தை நட்டு வச்சுப் பிடலாம்னு சொன்னேன்.

ச : சரிடா. நீ போய் வைத்தியர் வராறான்னு பார்... போ.

கு : (மறுபடியும் வந்து) எஜமான், தங்களைப் பார்க்க யாரோ ரெண்டுபேர் வந்திருக்காங்க நீங்க கூப்பிட்ட அவசரத்திலே சொல்ல மறந்துட்டேன்.

ச : வரச்சொல்.

[குப்பன் போக, கண்ணன் திண்ணன் இருவரும் வருகின்றனர்.]

இருவரும் : வணக்கம்.

ச : வாங்க, என்ன சேதி?

கண்ணன் : தங்களிடம் நிறைந்த செல்வம் இருப்பதாகக் கேள்விப்பட்டோம்! அவைகளைப் பார்த்துப் போக வந்தோம்!

ச : (சிரித்தபடி) செல்வத்தைப் பார்க்கவா? அனுபவித்தாலல்லவா அதன் அருமை தெரியும்! இங்கு இருப்பதைப் பார்த்தாலே தெரியுமே! எல்லாத்தையும் பார்க்கிறதுன்னா. இன்னிக்கு ஒரு நாளிலே பார்த்துட முடியுமா...அவசியம் பார்க்கணுமோ?

க : ஆமாம்.

ச : (பணியாளைப் பார்த்து) டே, காலை எடுத்துக் கீழே வைடா. இவங்க ரெண்டு பேரையும் கூட்டிக்கிட்டுப் போய், நம்ம அரண்மனையிலுள்ள வண்டி வாகனம், ஆடு மாடு, குதிரை யானை, நஞ்சை புஞ்சை, தோட்டம் துரவு, வெள்ளிப் பாத்திரம்,

தங்கக் கட்டில், இரும்புப் பெட்டி, பொன், மணி அனைத்தையும் காட்டியனுப்பு. போங்கய்யா, பாத்துட்டுப் போங்க!

பணியாள் : ஆகட்டுமுங்க

[இருவரையும் அழைத்துச் செல்கிறான். குப்பன் வருகிறான்.]

ச : டே...இன்னும் வைத்தியர் வரல்லியா?

காட்சி : 4

வீதி

[கண்ணனும் திண்ணனும சமீந்தாரின் செல்வத்தைப் பார்வையிட்டுத் திரும்புகின்றனர்.]

கண்ணன் : தம்பி, நிறைந்த செல்வத்தைக் கண்டு களித்தோமல்லவா?

திண்ணன் : அண்ணா! இவ்விடம் செல்வமென்பதே யில்லையே! இருந்தாலல்லவோ நாம் கண்டு களிப்பதற்கு?

க : என்ன? செல்வமே இல்லையா?

தி : ஆம். அரண்மனை முழுவதும் சுற்றிச்சுற்றிப் பார்த்தோமே, எங்கேனும் ஒரு நூல் நிலையம் இருந்ததா?

இதுவா நிறைந்த செல்வம்?
இவனா நிறைந்த செல்வன்?
மதியில் சிறந்த அண்ணா
மனதைத் திறந்து சொல்வீர் (இதுவா)

புதையலைக் காக்கும் பூதம் போலே
பொருளைக் காத்து வருகின்றான்—வீண்
புகழைத் தேடித் திரிகின்றான்;
மதியை வளர்க்கும் நூல் நிலையந்தனை
வைத்துப் பேணத் தெரியாதான்—கல்வி
வாசனை ஏதும் அறியாதான் (இவனா)

க : ஆமாம் தம்பி, உண்மைதான். செல்வம் கல்விச் செல்வம், பொருட் செல்வம் என இருவகைப்படும். நமது ஆசிரியர் இதைப்பற்றி விரிவாகச் சொல்லி யிருக்கிறாரல்லவா.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.'

இவ்விடம் பொருட் செல்வத்தை மட்டும்தானே கண்டோம். கல்விச்செல்வம் அடியோடு இல்லையே! இது எப்படி நிறைந்த செல்வமாகும். வா, இன்னும் தேடிப் பார்ப்போம்.

[போகின்றனர்]

காட்சி : 5

ஒரு செல்வந்தர் வீடு

[படித்ததாகப் பாசாங்கு செய்து வாழும் செல்வர், தன் வேலையாளுடன் உரையாடிக் கொண் டிருக்கிறார்.]

செல்வர் : டே, போன வாரம் செய்யச் சொல்லியிருந் தேனே, அந்த இரண்டு அலமாரியும் வந்திட்டுதா?

வேலைக்காரன் : வந்துட்டுதுங்க.

செ : புதிய நூற்பதிப்புக் கழகத்திலிருந்து நேற்றுப் புதுசா வந்த புத்தகங்களையெல்லாம் அந்த ரெண்டு அலமாரிலேயும் வைச்சுப்புடு. அந்த ரெண்டு அலமாரியும் இதோ இப்படி இந்த ரெண்டு இடத்தி லேயும் இருக்கணும். தெரிஞ்சுதா?

வே : உத்திரவுங்க.

[கண்ணன் திண்ணன் வருகிறார்கள்.]

இருவரும் : வணக்கம் அய்யா,

செ : யார் நீங்க? எங்கே வந்தீங்க? புதுசா ஏதாவது புத்தகம் போட்டிருக்கிங்களா? அதுக்கென்ன பரவா யில்லை. ஒரு பத்துப் புத்தகம் கொடுத்திட்டுப் போங்க. ...டே, ஐயாகிட்டே பத்துப் புத்தகம் வாங்கிட்டு, பணத்தைக் கொடுத்தனுப்பு.

கண்ணன் : புத்தகம் ஒன்றும் கொண்டுவரவில்லை ஐயா.

செ : அப்புறம்? வேறு என்ன காரியமா வந்தீங்க?

க : தங்களிடம் நிறைந்த செல்வமும், பெரிய நூல் நிலை யமும் இருப்பதாகக் கேள்விப்பட்டுப் பார்த்து மகிழ வந்தோம். பார்க்கலாமா?

செ : ஆஹா, தாராளமாகப் பாருங்கள். எந்த பாஷை யிலே எந்தப் புத்தகம் வெளிவந்தாலும் உடனே நம்ம நூல் நிலையத்துக்கு ஒரு பத்துக் காப்பி அனுப்பிச் சுடறதுதான் வழக்கம். அவ்வளவு பிரசித்தம் நம்ம நூல் நிலையம். எங்கே தேடினாலும் கிடைக்காத புத்தகங்களெல்லாம் நம்ம நூல் நிலையத்திலே கிடைக்கும். பாத்துக்கோங்களேன். இந்தா பாருங்க, இந்தப் புத்தகங்களைச் சேகரிக்கறதுக்கு நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் தெரியுமா? இதெல் லாம் பணம் கொடுத்தாக் கூட இப்பக் கிடைக்காது.

திண்ணன் : அது என்ன நூல்?

செ : அதா? (தெரியாமல் சிறிது நேரத்தில் சமாளித்துக் கொண்டு) பாருங்களேன். நான் இதெல்லாம் படிச்சு எத்தனையோ வருஷமாச்சு. வாங்க நூல் நிலையத்தைக் காண்பிக்கிறேன். ரெண்டுநாள் இங்கிருந்து சௌகரியமாய்ப் பார்த்துப்பிட்டுப் போங்க.

[அழைத்துச் செல்கிறார்]

காட்சி . 6

வீதி

[கண்ணனும் திண்ணனும் திரும்புகின்றனர்]

கண்ணன் : என்ன தம்பி, இப்போது ஒப்புகிறாயா, இவரிடம் நிறைந்த செல்வம் இருக்கிறதென்று?

திண்ணன் : அண்ணா? இவருக்கும் செல்வத்துக்கும் தொடர்பேயில்லை, இவரிடம் எப்படியிருக்கும் நிறைந்த செல்வம்?

க : அதென்ன தம்பி, அப்படிச் சொல்கிறாய்?

தி : அவர் பேசியதிலிருந்தே தெரியவில்லையா? வருவார்க்கும் போவார்க்கும் காட்சிச்சாலையாக இவர் நூல் நிலையம் வைத்திருக்கிறாரே தவிர, எந்த நூலையும் படிப்பதாகவே தெரியவில்லை. படித்தவர் போல் பாசாங்கு செய்கிறார். அவ்வளவுதான்! இதுவா நிறைந்த செல்வம்?

மற்றவர் பார்த்து மதிப்பதற் காக
வகைவகையாக நூல்களை அடுக்கி,
கற்றறி வாளன் போல நடிக்கும்,
கயவன் சிறிதும் கல்லா மூடன் (இவனா)

க : ஆம் தம்பி, உண்மைதான். 'கல்வியே உயிர்க்கு உறுதுணை' என்பது இப்போதுதான் எனது நினைவிற்கு வருகிறது.

''நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு!''

கற்றறிந்த நல்லவர்களிடம் உள்ள வறுமையை விடக் கொடியது, இவனிடத்தில் உள்ள செல்வம். வா, வா இன்னும் தேடிப் பார்ப்போம்.

[போகின்றனர்.]

காட்சி : 7

மற்றொரு பணக்காரர் வீடு

[பணக்காரர் வயிறு புடைக்கப் புலால் உண்டு விட்டு, பல இடுக்குகளில் சிக்கியிருந்த இறைச் சியை ஈர்குச்சியினால் குத்திக்கொண்டு வரு கிறார். திருக்குறள் அவர் கையிலிருக்கிறது. அவரும் அவர் நண்பர் ஒருவரும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.]

பணக்காரர் : 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்'

நண்பர் : (சிரித்து) ஆமாம்...நீங்க இதை அவசியம் படிக்க வேண்டியதுதான்.

ப : ஏனய்யா...

ந : ஏன்னா, நீங்க சுத்த சைவம் பாருங்க.

ப : நீர் இப்படிக் கேப்பீருன்னு தெரிஞ்சுதானே படிச் சேன்! இப்போ உம்ம அபிப்ராயம் என்ன? திருவள்ளுவர் மாமிசம் சாப்பிடப்படாதுன்னு சொல் றாரே, நீர் இப்பத்தானே சாப்பிட்டு வந்திருக்கீர்? என்று சொல்றீரு, இல்லையா? அதுதான் புரியாத் தனம் என்கிறது, வள்ளுவர் என்னைப்போல ஆளுக்காகவா இந்தக் குறளைச் சொல்லியிருக்காரு?

ந : பின்னே யாருக்கு? எல்லாருக்கும் பொதுவாகத் தான் சொல்லியிருக்கு.

ப : அதான் இல்லை. இதைத் தெரிஞ்சுக்காமெத்தான் ஒவ்வொருத்தனும் பேசறான். வள்ளுவர் குறளைப் படிக்கும்போது, எந்தக் குறளை, எந்தப் பால்லே, எந்த இயல்லே, எந்த அதிகாரத்திலே, எதுக்காக எழுதப்பட்டிருக்குன்னு பார்த்து, அதற்குத் தகுந்த மாதிரி அர்த்தம் பண்ணிக்கணும். தெரியுதோ?

ந : ஓகோ!

ப : இப்போ, இத்தக் குறள் வந்து, துறவற இயல்லே சொல்லியிருக்கு, அப்போ,

> 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்.'

அப்படின்னு, உம்மைப்போல என்னைப்போல சாதாரண மக்களுக்கா சொல்லி இருக்கு?

ந : அப்போ, தேவர்களுக்காகச் சொல்லியிருக்கோ?

ப : பார்த்தீரா? இதானே வேணடாங்கறது! முற்றும் துறந்த முனிபுங்கவர்களுக்கையா...சன்யாசிகளுக்கு துறவிகளுக்கு.

ந : அப்படியா?

ப : பின்னே!

ந : நேற்று நம்ம மடத்திலே மெய்ஞ்ஞான பண்டிதர் இதே குறளுக்கு விளக்கம் சொன்னாரு; என்ன அழகாயிருந்தது தெரியுமா?

ப : யாரு? மெய்ஞ்ஞான பண்டிதனா? என்ன சொன்னான்?

ந : புலால் மறுத்தல் இங்கிறது, துறவற இயல்லே வந்தாக்கூட, எல்லாருக்கும் பொதுவான நீதி; எல்லாரும் அதைப் பின்பற்றணும்; அப்படின்னு சொன்னாரு.

ப : ஊம்...அப்புறம்?

ந : அதுமட்டுமில்லைங்க, அதுக்கு ஓர் உதாரணமும் சொன்னாரு, ஜனங்கள்ளாம் அப்படியே அசந்து போயிட்டாங்க. 'கல்வியைப்பற்றி அரசியல்லே தானே சொல்லியிருக்கு? அதனாலே துறவிகள்ளாம் முட்டாளாயிருக்கணும்னு அர்த்தமா?' அப்படீன்னு கேட்டாரு. எனக்கும் அது நியாயமாத்தான் பட்டுது.

ப : அடபோய்யா; மகா உதாரணம் சொல்லிட்டான். அவனுக்கென்னய்யா தெரியும். நேத்துக் கத்துக்

குட்டி. நான் குறளுக்குப் பதிமூணு உரை வச்சிருக்கேன். பதினெட்டு மொழியிலே குறள் எங்கிட்டே இருக்கு. நான் படிக்காத நூலா? எனக்குத் தெரியாத பொருளா? மெய்ஞ்ஞான பண்டிதன் சொல்லி விட்டானாம். அதைக் கேட்டுட்டு வந்துட்டாரு இவரு. எவனய்யா, அவனுக்குப் பண்டிதன் பட்டம் கொடுத்தான்?

[கண்ணன திண்ணன் வருகின்றனர்]

இருவரும் : வணக்கம்.

ப : வாங்க, நீங்க யாரு?

கண்ணன் : ஐயா! தங்களிடம் நிறைந்த செல்வமும், சிறந்த நூல்நிலையமும், உயர்ந்த கல்வியும் இருப்பதாகக் கேள்விப்பட்டு, பார்த்துப்போக வந்தோம்.

ப : ஓகோ இந்தப் பக்கம் வருகிறவர்கள் யாவரும் நம்மைப் பார்க்காமல் போவதில்லை. என்னையே ஒரு நடமாடும் நூல்நிலையம் என்று இங்குள்ளோர் சொல்வது வழக்கம். ஏனென்றால், அத்தனையும் நமக்கு மனப் பாடம்.

க : ஆம். அப்படித்தான் கேள்விப்பட்டோம்.

ப : இங்கேயே இரண்டொரு நாள் தங்கி, சாவகாசமாக யாவையும் பார்த்துப் போகலாம்; வாருங்கள்.

[அனைவரும் போகின்றனர். போகும் பணக்காரர் தம் நண்பரைப் பார்த்து]

ஓய், வருகிறவனெ எல்லாம் என்னைத் தேடித்தானே வருகிறான். மெய்ஞ்ஞான பண்டிதனைத் தேடி எவன் போறான்?

ந : சரி சரி, வாரும்.

காட்சி : 8

வீதி

[கண்ணனும் திண்ணனும் அவருடன் தங்கிப் பழகி, அவர் நூல் நிலையத்தைப் பார்வையிட்டுத் திரும்புகின்றனர்.]

கண்ணன் : தம்பி, இப்போது உனக்கு மகிழ்ச்சிதானே? நிறைந்த செல்வத்தைக் கண்டுவிட்டோமல்லவா?

திண்ணன் : அண்ணா, மன்னிக்கவேண்டும். இவரிடம் செல்வம் அடியோடு இல்லை என்பது நன்றாகப் புரிந்து விட்டது.

க : என்ன தம்பி! எனக்கொன்றும் விளங்கவில்லையே?

தி : இவர் நன்றாகப் படித்திருக்கிறார். எப்போதும் புத்தகமும் கையுமாக இருக்கிறார். வெறும் புத்தகப் பூச்சி. புத்தகப் பூச்சிகள் தம் கைகளை மட்டுமல்ல, உடம்பையே புத்தகத்தில் வைத்திருக்கின்றன. வைத்துப் பலன்? கற்றாரே தவிர, கற்றறிந்த அறிஞர்களிடம் கேட்டு அறியவேண்டும் என்ற எண்ணம் இவரிடம் சிறிதும் இல்லையே அண்ணா?

அட்டை போலப் புத்தகத்தில்
ஒட்டிப் போனவன்—எல்லாம்
அறிந்தவன்போல் வீம்புபேசும்
ஆணவக் காரன்,
மட்டமாக அறிஞர் தம்மை
வைது வாழ்பவன்—அறிவு
வளரக் கேள்விச் செல்வந்தேட
வகையி லாதவன் (இவனா சிறந்த செல்வன்)

க : ஆம் தம்பி; உண்மை; முற்றும் உண்மை! அகந்தை கொண்டவராகத்தான் இருக்கிறார். இவரிடம் கேள்விச் செல்வமே இல்லை.

'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை.'

சரி சரி, வா; இன்னும் முயன்று பார்ப்போம்.

காட்சி : 9

மிராசுதார் ஒருவர் வீடு

[இரவு நேரம். மிராசுதாரர் பெண்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டிக்கிறார். நடனம் நடைபெறுகிறது. கண்ணன் திண்ணன் வந்த வேலையாளைப் பார்த்து, மிராசுதாரைப் பார்க்க வேண்டும் எனக் கூறுகிறார்கள்.]

வேலைக்காரன் : எஜமான், யாரோ இரண்டு இளைஞர்கள் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்.

மிராசுதார் : இந்த நேரத்திலா? காலையில் வந்து பார்க்கச் சொல்.

வே : சொன்னேன். வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறார்களாம். அவசியம் பார்க்கணுமாம்.

மி : யார்? எப்படி இருக்கிறார்கள்?

வே : படித்தவர்கள் போல் தெரிகிறது.

மி : சரி. நடனத்தை நிறுத்து. அவர்களை வரச்சொல்.

[கண்ணனும் திண்ணனும் வருகின்றனர்.]

மி : வணக்கம். வாருங்கள், வாருங்கள். உட்காருங்கள். நீங்கள் யார்? எந்த ஊர்? எதற்காக இந்த இரவில் இங்கு வந்தீர்கள்? என்னால் ஆகவேண்டியது ஏதாவது உண்டா? என் கடன் பணிசெய்து கிடப்பதே!

க : இந்த இரவு நேரத்தில் உங்களுக்குத் தொந்தரவு கொடுத்ததற்காக மன்னிக்க வேண்டும்.

மி : தொந்தரவா? அடாடா! செல்விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருப்பதல்லவா என்னுடைய கடமை! நல்லாரைக் காண்பதுவும் நன்றே என்று நம் பாட்டி பாடியிருக்கிறாளே!

க : ஆஹா! எவ்வளவு உயரிய பண்பு!

மி : தங்களைப் போன்ற அறிவாளிகள் நேரம், காலம் பார்த்தா வரவேண்டும்? எப்பொழுதும் எனது அரண்மனை திறந்தே கிடக்கும். 'அடையா நெடுங் கதவுடையோன்' என்று இப்பக்கம் என்னைச் சொல்வது வழக்கம். என்ன காரியமாக வந்தீர்கள்?

க : தங்களிடம் நிறைந்த பொருட் செல்வமும், சிறந்த நூல் நிலையமும், உயர்ந்த கல்வியும், முதிர்ந்த கேள்வியும் ஆகிய அனைத்தும் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். பார்த்துவிட்டுப் போகலா மென்று வந்தோம்.

மி : அப்படியா? நிரம்ப நல்லது. ஏதோ என்னால் இயன்ற பணியைச் செய்து கொண்டிருக்கிறேன்.

'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.'

என்ற வள்ளுவரின் வழிப்படி நடப்பதே எனது குறிக் கோள். அருகில் நம்முடைய விருந்து மாளிகை இருக்கிறது, அங்கே தங்கி, இரவைக் கழித்து, விடியற் காலையில் வாருங்கள். சாவகாசமாகப் பேசலாம்.

க : மகிழ்ச்சி. வருகிறோம். (போகின்றனர்).

[போவதற்கு முன்னரே மிராசுதாரர் இருந்த தடுமாறிய நிலையையும் முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் தென்னன் அறிந்து கொள் கிறான்.]

காட்சி : 10

தெரு

[கண்ணனும் திண்ணனும் வருகின்றனர்.]

திண்ணன் : புறப்படுங்களண்ணா, ஊர்போய்ச் சேரு வோம்.

கண்ணன் : ஏன் தம்பி, நாம் கேள்விப்பட்ட யாவும் உண்மையா என்று நேரில் கண்டறிய வேண்டாமா?

தி : அவை யாவும் உண்மையென நன்கு விளங்கி விட்டது.

க : அப்பாடா, அரும்பாடுபட்டுக் கடைசியாக நிறைந்த செல்வத்தைக் கண்டுவிட்டோம்.

தி : எங்கே கண்டோம் அண்ணா? செல்வத்தை இவ்வூர்ச் செல்வர் சிறிதும் அறியார். நாம்கூடச் செல்வத் தைத் தேடும் பாதையில் நடக்கவில்லை. அந்த வழியைவிட்டு வெகுதூரம் விலகி இங்கு வந்துவிட் டோம். புறப்படுங்கள், நேரமாகிறது.

க : (வியப்படைந்து) நீ கூறுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே. இவரைப்பற்றி நாம் கேள்விப் பட்டது பொய்யா?

தி : நாம் கேள்விப்பட்டது யாவும் உண்மைதான். இரவு விருந்து மாளிகையிலும் அவரைப்பற்றிப் பல செய்திகள் கேள்விப்பட்டேன். இவர் பொருட்செல் வம், கல்விச்செல்வம், கேளவிச் செல்வம் எல்லாச் செல்வமும் உடையவர்தான். அதிலொன்றும் ஐய மில்லை. இத்தகைய செல்வம் இருந்தும் பய னென்ன? இவை யாவும் அவருடைய ஒழுக்கத்துக் குத் துணை செய்யவில்லையே அண்ணா? சொல் வேறு, செயல் வேறு—நாம் கேள்விப்பட்டதெல்லாம் பகல் விளையாட்டு. இரவிலோ நல்லொழுக்கத்துக் குப் புறம்பான நடத்தை. இவனிடம் ஏது செல்வம்?

ஒழுக்கத்தை இழந்தவன், அனைத்தையும் இழந் தவன்தானே?

க : ஆம் தம்பி, ஆம். ஒழுக்கம் விழுப்பம் தரும். ஒழுக்கம் உயர்வளிக்கும். ஒழுக்கம் உயிரினும் மேலானது. நீ கூறியது உண்மை, தவறான பாதையில் நடந்துதான் இங்கு வந்துவிட்டோம். இனியேனும் நேரான பாதையில் நடந்து செல் வோம் வா.

'ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.'

[போகின்றனர்.]

காட்சி : 11

கண்ணன் திண்ணன் வீடு

[தாய் தந்தையர் இருக்கின்றனர், கண்ணன், திண்ணன் திரும்பி வருகின்றனர்.]

கண்ணன் : அம்மா, அப்பா! வணக்கம்.

தந்தை : நிறைந்த செல்வத்தைத் தேடி வந்தீர்களா?

திண்ணன் : இல்லையப்பா. அது இருக்குமிடம் தெரிய வில்லை.

க : நிறைந்த செல்வத்தைக் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்துவிட்டேனப்பா.

தாய் தந்தையர் : எங்கேயது?

க : இதோ... (திண்ணனைக் காட்டி) ஒழுக்கம்தான் உயர்ந்த செல்வம் என்பதை எனக்குத் தம்பி எடுத்துக் காட்டினான். ஆகவே தம்பிதான் செல்வம்.

தி , இல்லையப்பா, "ஒழுக்கம் இல்லாதவன் நிறைந்த செல்வமுடையவனா?" என்று சந்தேகித்த என்னை

ஒழுக்கம்தான் செல்வம் என்பதைக் கண்டுபிடிக்க வைத்த அண்ணன்தான் செல்வம். இளையவன் ஏதோ உளறுகிறான் என்று என்னை வெறுத்துவிடாமல். உண்மைக்கு உயர்வளித்த அந்த உள்ளமிருக்கிறதே, அந்த உள்ளம்தான் நிறைந்த செல்வத்தின் ஊற்று. ஆகவே, அண்ணன்தான் உண்மைச் செல்வம்,

தாய் : என் கண்மணிகளே! நீங்களிருவருமே செல்வங்கள். அறிவு நிறைந்த உங்களைவிட எங்களுக்கு வேறு செல்வம் ஏது?

[மக்களைத் தழுவுகிறாள்.]

தந் : ஆம்; ஆம்.

'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.'

என்பது பொய்யாமொழி அல்லவா? அறிவும் ஒழுக்கமும் உள்ள பிள்ளைகளைவிட இவ்வுலகில் நிறைந்த செல்வம் வேறு எதுவாக இருக்க முடியும்?

[காட்சி முடிவு]

காதல்

பன்னூற்றிரட்டு

[தலைவி, ஓர் மேடையின்மீது தலைவன் வரவை எண்ணி வருந்திக் கொண்டிருக்கிறாள்.]

தலைவி : சங்கு முழங்கும் தமிழ்நாடன்
தன்னை நினைந்த போதெல்லாம்
பொங்கு கடலும் உறங்காது,
பொழுதோர் நாளும் விடியாது;
திங்க ளுறங்கும், புளளுறங்கும்,
தென்ற லுறங்கும், சிலகாலம்;
எங்கு முறங்கும் இராக்காலம்
என்கண் இரண்டும் உறங்காதே!

[தோழி வருகிறாள்]

தோழி : (தனக்குள்) ஐயோ பாவம்! இளவேனிற்காலம், இனிய தென்றல், இன்ப இரவு, எழிலார் நிலவு, துடிக்கும் இளமை, துணைவன் பிரிவு, எப்படி உறக்கம் வரும் அம்மா?

த : யாரது கிள்ளையா?

தோ : ஏனம்மா, அப்படிக் கண் விழித்துக்கொண்டு காத்திருந்தால், உடம்பு என்னத்துக்காகும்?

த : உடம்பா? (பெருமூச்சு விடுகிறாள்; தோழி சிரிக்கிறாள்.)

த : என்னடி சிரிப்பு?

தோ : ஒன்றுமில்லையம்மா—அந்த முல்லைப்பூ என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. அதுதான் எனக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

த : முல்லைப்பூ உன்னைப் பார்த்துச் சிரிக்கவில்லையடி—முல்லை மணம் வீசும் முன்னே வருவதாகச் சொன்

னாரே, என் தலைவர், அவர் சொன்னபடி வர வில்லையே என்று, என்னைப் பார்த்துச் சிரிக்கிறதடி.

தோ : ஆமாம்; நான்தான் கேட்கிறேன், ஏனம்மா இன்னும் அவர் வரவில்லை?

த : நல்ல கேள்வியடி இது? நானும் அதைப்பற்றித் தானே சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். ஒன்றும் புரியவில்லையே?

தோ : அவர் சொல்லிச் சென்ற கெடுவும் தாண்டி விட்டதே? ஒரு வேளை, சொன்ன வார்த்தையை மறந்துவிட்டாரோ, என்னவோ?

த : போடி போ...கண்டபடி உளறாதே...மறப்பதாவது என் கண்ணாளர், என்றைக்கும் சொன்ன சொல் தவறவே மாட்டாரே!

தோ : அப்படியானால், போன இடத்தில் அவருக்கு ஏதாவது துன்பம்...?

த : ஊஹும். அவருக்கா? எந்தத் துன்பம் வந்தாலும், ஒரு சிரிப்பினால் அதை மறந்துவிடும் தீரரடி அவர்.

தோ : சரி. அப்போ, துன்பங்கள் எதுவும் அவர் வரவைத் தடை செய்ய முடியாது. பின் ஏன் வரவில்லை?

த : அதுதானே தெரியவில்லை!

தோ : ஏனம்மா, ஒருவேளை, வரும் வழியில் அடர்ந்த காடு இருக்கிறதே, ஏதேனும் கொடிய விலங்குகளின் ......

த : போதும் நிறுத்தடி! ஏதேதோ சொல்லி மனத்தைக் குழப்பாதே. என் தலைவர் கோழையல்லடி, கோழையல்ல. அவருடைய சீற்றத்தைக் கண்டால், சிங்கமும் புலியும்கூடத் திணறி ஓடுமடி.

தோ : அம்மா! அம்மா! இப்பொழுதுதான் எனக்கு உண்மையான காரணம் புரிகிறது.

த : என்னடி?

தோ : உங்களிடத்தில் சொன்ன சொல்லை அவர் மறந்துவிடவும் இல்லை; வரும் வழியில் அவருக்கு எந்தவிதமான துன்பமும் ஏற்படவில்லை, காரணம் இதுதான்.

த : எது?

தோ : கலிங்கத்தில் கண்ணைக் கவரும் அழகியர் பலர் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களில் யாராவது ஒரு வேல்விழியாளிடம் தஞ்சம் புகுந் திருப்பார்.

த : வாயை மூடடி வம்புக்காரி! என் உள்ளத்தைக் கலைக்கப் பார்க்கிறாயோ? சிந்தையாலும் பிற மாதரைத் தொடாத என் காதலரைப் பற்றியா, இப்படிப் பேசுகிறாய்?

தோ : அதுவும் இல்லையானால், இவர் இன்னும் வராத தற்கு என்ன தான் காரணம் சொல்ல முடியும்? எனக்கென்னவோ நம்பிக்கை இல்லையம்மா!

த : ஏண்டி, கலிங்க மன்னரின் அரண்மனையில் தமிழ்ச் சுவடிகள் ஏதும் இருக்குமோ?

தோ : சுவடிகளுக்கென்னம்மா குறைவு? ஒரு பெரிய தமிழ்க் களஞ்சியமே அங்கு இருக்கிறதாமே!

த : அப்படியா?

தோ : ஊம்.

த : ஐயையோ! இப்போதுதானடி புரிகிறது. என் காதலர் இன்னும் வராத காரணம். அவர் தமிழ்ச் சுவடிகளிலே புகுந்துவிட்டால், என்னை மட்டு மென்ன, உலகத்தையே மறந்துவிடுவாரே அவர்... என் இன்னுயிர்த் தலைவா! தமிழ்க் காதலில் இறங்கி விட்டீர்களா? மீண்டு வர, இனி எத்தனை நாட்கள் ஆகுமோ? ஐயோ! நான் என்ன செய்வேன்?

தோ : அம்மா! அம்மா! அதோ விரைந்து வரும் தேரின் ஓசை கேட்கிறது. அவராகத்தான் இருக்கவேண்டும்.

த : ஆ! என் காதலர் வந்துவிட்டாரா? எங்கேயடி?

தோ : பொறு, மனமே பொறு.

த : என்னடி விளையாடுகிறாயா?

தோ : இனிமேல் நான் ஏன் உங்களுடன் விளையாட வேண்டும்? அதற்குததான் வந்துவிட்டாரே அவர்! அதோ, அவரேதான்!

த : போடி போடி, விரைந்துபோய் வெளிக்கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போடு.

தோ : என்னம்மா இது? இத்தனை நாட்களாக ஏங்கி அழுது கொண்டிருந்தீர்கள்! இப்பொழுது, அவர் வந்தவுடன்...

த : போடி. நான் சொன்னபடி செய். குறித்தபடி வராமல், என்னை எவ்வளவு வேதனைக்குள்ளாக்கினார்? நிற்கட்டும் அங்கேயே!

தோ : சரியம்மா!

[தோழி தாள் இடுகிறாள். தலைவன் வந்து வீட்டிற்கு முன் தேரை நிறுத்தி இறங்குகின்றான்.]

தலைவன் : என்ன இது, திறந்திருந்த கதவு திடீரென்று அடைபட்டுவிட்டது? ஓ! குறித்தபடி நான் வரவில்லையென்ற கோபமோ?...கண்ணே குழலி! பூங்குழலி! கதவைத் திற. (மீண்டும் தட்டுகிறான்).

தோ : ஐயோ பாவம்!

த : ஹூம், இத்தனை நாட்களாக என் மனம் என்ன பாடு பட்டிருக்கும்?

தலைவன் : கனிமொழிச் செல்வியே! உன் காதலன் வந்திருக்கிறேன். கதவைத் திற. (மீண்டும் தட்டுகிறான்) என் உயிருக்குயிரான அமுதே! தாமரை

யனைய உன் கைகளால் தாளைத் திறக்கமாட்டாயா? பொற்கொடியே! பூந்திருவே!

த : என்னடி, இரக்கமில்லா அரக்கிபோல் நிற்கிறாயே?

தோ : என்னம்மா?

த : எவ்வளவோ தொலைவிலிருந்து, எத்தனையோ நாட்களுக்குப் பின், அலுத்துக் களைந்துப்போய் வந்திருக்கிறார். மரம்போல் நிற்கிறாயே! திறடி கதவை!

தோ : இதென்னம்மா, என்மேல் பழியா? நீங்கள் தானே...

த : நான்தான் ஏதோ பிணங்கி நிற்கிறேனென்றால் உனக்கென்னடி? போடி, போடி. கால் கடுக்க நிற்கிறார். கதவைத் திற. (தோழி கதவைத் திறக்கிறாள்.)

தோ : (தொலைவில்) நான் போகிறேனம்மா (போகிறாள்)

தலைவன் : என்ன கண்ணே! என்மீது கோபமா? பேசமாட்டாயா? பேசா மடந்தையா நீ? சரி. அப்படியானால் நான் மட்டும் ஏன் பேசவேண்டும்? (தனக்குள்) சரி. ஒரு பொய்த் தும்மல் போட்டுப் பார்ப்போம். அப்பொழுதாவது, வழக்கம்போல், 'ஆயுசு நூறு' என்று தலையிலே தட்டுவாளல்லவா? தும்முகிறான்.)

த : "நூறு" (தேம்பி அழுகிறாள்.)

தலைவன் : கண்ணே! ஏன் அழுகிறாய்?

த : இல்லை; உங்களை எந்தப் பெண் நினைக்கிறாள்? இப்போது யார் நினைத்துத் தும்மினீர்கள்?

தலைவன் : வேறு யார் என்னைப்பற்றி நினைக்க முடியும்? இல்லை, நான்தான் யாரைப்பற்றி நினைக்க முடியும்: எல்லாம் உன்னைப்பற்றித்தான்.

த : தெரியும், தெரியும். பேச்சிலேயே ஆளை மயக்கப் பார்க்கிறீர்களே!

[தலைவன் உண்மையிலேயே வரும் தும்மலை அடக்க முயலுகிறான்.]

த : பார்த்தீர்களா! பார்த்தீர்களா! எந்தப் பெண்ணோ நினைக்கிறாள். அதனால்தான் அடிக்கடி உங்களுக்குத் தும்மல் வருகிறது. நீங்கள் வேண்டுமென்றே அதை அடக்குகிறீர்கள்—அப்படித்தானே? (அழுகிறாள்)

தலைவன் : சரிதான், தும்மினாலும் குற்றம், தும்மலை அடக்கினாலும் குற்றமா? முதலில் உன்னைப் பேச வைக்க வேண்டுமென்றுதான் பொய்யாகத் தும்மினேன். இப்பொழுது உண்மையாகவே தும்மல் வந்துவிட்டது. நீ வேறுவிதமாக எண்ணுகிறாயே என்று அடக்கினேன். நான் என்னதான் செய்யட்டும்?

த : குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது.

தலைவன் . ஆருயிரே! என்மீது வீணாகக் குற்றம் சொல்லாதே. நான் எந்தப் பெண்ணையும் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை. கலிங்கத்தில் இருந்தபோதெல்லாம் உன் நினைவுதான். கானகத்தில் வரும்போதெல்லாம் உன் நினைவுதான். பிரிந்தது முதல் இதுவரை உன்னையே நினைத்துக்கொண்டு ஓடிவந்திருக்கிறேன், கண்ணே!

த : என்ன? என்னை நினைத்துக்கொண்டு வந்தீர்களா?

[மீண்டும் அழுகிறாள்.]

தலைவன் : என்ன இது? மீண்டும் அழுகிறாய்?

த : என்னை நினைத்தேன் என்றால் என்ன பொருள்?

தலைவன் : ஏன்? அதில் என்ன தவறு?

த : நினைவு என்பது எப்பொழுது வரும்? மறந்த பிறகுதானே? நீங்கள் என்னை மறந்துவிடுகிறீர்கள்.

அப்புறம் திடீர் திடீரென்று நினைப்பு வரும்—அப்படித்தானே? என்னை மறக்காமல் இருந்தால், நினைப்புக்கே இடமில்லையே. என்னை மறந்த சமயத்தில் யாரை நினைத்தீர்களோ, என்னென்ன செய்தீர்களோ?

தலைவன் : அடி அன்னமே, உன்னை மறப்பதா? அது என் உயிரையே மறப்பது போலல்லவா? உலகில் உன்னையே நான் அதிகமாக நேசிக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா?

த : உன்னையே அதிகமாக நேசிக்கிறேன் என்றால், கொஞ்சமாக நேசிப்பது யாரையோ? அவர்கள் எத்தனை பேரோ? எங்கிருக்கிறார்களோ? (அழுகிறாள்)

தலைவன் : தங்கமே! இப்படிக் குற்றம் கண்டுபிடித்தால், நான் என்ன செய்வது? என் உள்ளத்தில் உன் ஒருத்திக்குத்தானே இடமுண்டு! இந்த உடலிலே உயிர் இருக்கும் வரையில், இந்தப் பிறவியில் நான் உன்னைக் கைவிடவே மாட்டேன்—இது உறுதி. நம்பு.

த : கண்ணாளா, நான் என்ன குற்றம் செய்தேன்?

தலைவன் : குற்றமா? ஏன்? ஏன் இப்படித் தேம்பித் தேம்பி அழுகிறாய். சொல்லு கண்ணே! என் கண்ணல்ல!

த : இந்தப் பிறவியில் என்னைக் கைவிடுவதில்லையென்று சொன்னீர்களே! அப்படியானால், அடுத்த பிறவியில் யாரை அடையத் தவம் செய்கிறீர்களோ?

தலைவன் : அடாடாடா! வார்த்தைகளைப் பன்னிப் பன்னி, என்னைத் திணற அடித்துவிடுகிறாயே! எப்படிச் சொன்னாலும், தவறாகப் பொருள் கொண்டுவிட்டால் நான் என்ன செய்ய முடியும்?

இதோ பார், இந்தப் பிறவி மட்டுமல்ல, ஏழேழு பிறவியிலும்...

த : என்ன?

தலைவன் : இல்லையில்லை. ஏழேழு பிறவி மட்டுமல்ல! எத்தனை பிறவி யெடுத்தாலும் உன்னைக் கைவிட மாட்டேன். சரிதானா—இப்போது மகிழ்ச்சி தானே! எங்கே கொஞ்சம் சிரி.

த : ஊஹும்.

தலைவன் : அதோ, அந்தக் கனி இதழ்களில் சிரிப்பு எட்டிப் பார்க்கிறதே!

த : ஊஹும்.

தலைவன் : எங்கே, சிரி, சிரி! (சிரிக்கிறாள்) சிரிப்பே ஓடிவா, ஓடிவா, இதோ. அதோ, வந்துவிட்டது.

[கலகலவென்று நகைக்கிருள்.]

தலைவன் : ஆஹா!

த : சரி, நேரமாய்விட்டது. வாருங்கள் உணவருந்தப் போகலாம்.

தலைவன் : நல்ல வேளை! உணவு என்றதும், எனக்கு ஒரு அருமையான நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. அதை உன்னிடம் சொல்லவேண்டுமென்று ஆவலாக வந்தேன்.

த : அப்படியென்ன அதிசயமான நிகழ்ச்சி?

தலைவன் : ஆமாம். அதிசயமானதுதான்—இரண்டு நாட்களுக்கு முன், கடும்பகலில் காட்டு வழியே வந்துகொண்டிருந்தேன்—நாக்கு வரண்டுபோயிற்று. எங்கேயாவது தண்ணீர் கிடைக்காதா வென்று ஏங்கிக்கொண்டே வந்தேன். நல்ல வேளையாக ஓர் இடத்தில் ஒரு சிறிய சுனை தென்பட்டது. என்ன தென்பட்டது

த : சுனை...அப்புறம்?

தலைவன் : அதில், தரையோடு தரையாய்க் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. மகிழ்வுடன் சென்று நீர் அருந்தினேன். மிகுதியிருந்த தண்ணீரை என் குதிரையும் மண்டிக் குடித்தது. மிச்சமிருந்த தண்ணீர் மிகவும் கொஞ்சம். தண்ணீர் குடித்தபின் ஒரு மரத்தடியில் களைப்பாறிக் கொண்டிருந்தேன்.

த : கடும்பகலில் வரண்ட பாலையில், எவ்வளவு களைப்பாயிருக்கும்!...அப்புறம்!

தலைவன் : களைப்பாறிக் கொண்டிருந்தேனா? அப்போது இரண்டு மான்கள் நீர் வேட்கையால் விரைந்து ஓடி வந்தன; சுனையருகில் சென்றன. சுனையிலிருந்த நீர் ஒரு மானுக்குத்தான் போதும் போல் தோன்றிற்று. எனவே, ஆண்மான் சற்றுத் தொலைவிலேயே நின்றுகொண்டது. பெண்மான் நீர்குடிக்க வேண்டும் என்பதில் ஆண் மானுக்கு மிகுந்த ஆசை. பிறகு பெண்மான் நீரண்டை சென்றது. எந்த மான்?

த : பெண் மான்?

தலைவன் : சென்றதா? ஆண்மான் நீர் அருந்த வேண்டுமேயென்ற எண்ணத்தால், பெண் மான் பின் வாங்கிக்கொண்டது. ஆண் மான் கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்து நீர் அருந்தச் சென்றது. அதைக் கண்டு, பெண்மானும் நீரண்டை சென்றது, ஆண் மான், தண்ணீரில் வாயை வைத்து, நீர் அருந்துவதுபோல் பாசாங்கு செய்து, தண்ணீர் முழுவதையும் பெணமானே குடிக்கும்படி செய்தது. இதையெல்லாம் நான் குறிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஆண்மானின் அன்பைப் பார்த்தாயா? பெண்மையைப் பேணுவதில் கானகத்து விலங்குகளுக்கும் எவ்வளவு ஆசை பார்த்தாயா?

த : அப்பாடா! வர்ணனை முடிந்ததா? ஆண் மானின் பெருந்தன்மையைப் புகழ்வதற்குத்தான், இவ்வளவு அற்புதமான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டீர்களாக்கும்? பெண்குலத்தின்மீது பழிசுமத்தப் பார்க்கிறீர்களா? நிரம்ப அழகுதான்! அந்தப் பெண்மான் ஏதோ தந்நலம் வாய்ந்ததுபோலக் கதையை முடித்து விட்டீர்களே?

தலைவன் : என்ன இது? நான் அன்பின் பெருமையைச் சொன்னால், நீ ஏதோ தவறாகப் பொருள் கொள்கிறாயே?

த : இல்லை. நான்தான் கேட்கிறேன்—இரண்டு மான்களும் தண்ணீரில் வாயை வைத்துக் குடித்தன என்பதைத்தானே பார்த்திருப்பீர்கள் அவற்றில் ஆண் மான் தான் குடிப்பதுபோலப் பாசாங்கு பண்ணிற்று என்பது உங்கள் கற்பனைதானே ஏன், பெண்மான் தான் ஆணுக்காக அப்படிப் பாசாங்கு செய்தது என்று சொல்லக் கூடாதோ. உள்ளபடியே ஆண் உண்டு களிக்க வேண்டுமென்பதில் பெண்ணுக்குத் தான் ஆசையும், அன்புள்ளமும் உண்டு; தெரியுமா?

தலைவன் : ஆம் கண்ணே! நீ சொல்வதும் உண்மையாகத்தான் தோன்றுகிறது. எனது கண்ணோட்டத்தில், ஆண் மான் தியாகம் செய்ததுபோல் தோன்றிற்று; உனது கண்ணோட்டத்தில் பெண்மான்தான் தியாகம் செய்திருக்கும் என்று தோன்றுகிறது. எப்படியோ— இரண்டு மான்களும் ஒன்றையொன்று பேணிநின்றன என்பது மட்டும் உண்மை!

த : பார்த்தீர்களா! பார்த்தீர்களா! அந்தக் காட்சியைக் கண்ணாரக் கண்ட உங்களை, காணாத நான் ஏமாற்றி விட்டேனே! வெற்றி எனக்குத்தான்.

தலைவன் : என் கண்மணி, நீ வெற்றி பெற்றாலென்ன, நான் வெற்றி பெற்றாலென்ன? இரண்டும் ஒன்றுதான்.

[இருவரும் சிரிக்கின்றனர்.]

த : மிகவும் களைத்திருக்கிறீர்களே! உட்காருங்கள். முதலில், பாலும் பழமும் கொண்டு வருகிறேன்.

தலைவன் : வேண்டாம் கண்ணே! பழமும் வேண்டாம். பாலும் வேண்டாம்.

அன்றிலடி நாமிருவர், பழமும் பாலும்
யாருக்கு வேண்டுமடி, என்ற னாசைக்
குன்றத்தில் படர்ந்த மலர்க் கொடியே! மண்ணில்
குவிந்திருக்கும் சுவையுள்ள பொருட்க ளெல்லாம்
ஒன்றொன்று மறுநாளே பழமை கொள்ளும்;
ஒன்றொன்றும் சிலநாளில் தெவிட்டிப் போகும்;
அன்றன்று புதுமையடி தெவிட்ட லுண்டோ,
ஆருயிரே! நீகொடுக்கும் இன்பம் தானே!

தலைவன்: அன்பே ஆசைக் கிளியே—நான்
அமுதம் கேட்டேன் வா வா! (அன்பே)

த : அமுதமா! அமுதமா!
கனிவாய்ச் சொல்வீர் கண்ணாளா—நீர்
கருதும் அமுதம் எதுவோ? (அன்பே)

தலைவன் : நின் கனிவாய் அமுதம் தானே!
என் காதல் பேணும் தேனே!
'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்'
எனச் சாலப் பொருத்தமா வள்ளுவன்
இனிய தமிழிற் சொன்னது போலே (நின்கனி)

கொடை

காட்சி : 1

புலவர் வீடு

[புலவர் மனைவி. தன் குழந்தையைத் தாலாட்டிக்கொண்டிருக்கிறாள். குழந்தை அழுகிறது.]

மனைவி: தூங்கா மணி விளக்கே—ஆசை
தூண்டிடும் பூங்கொடியே!
ஏங்கி யழும் குரலை—இனி
எவ்விதம் நான் சகிப்பேன்?
கண்ணே பெண்மயிலே கண்ணுறங்காயோ!

சோழன் அரண்மனையில் நீ
தோன்றிட வேண்டியவள்—இந்த
ஏழை வயிற்றினிலே—வீணில்
ஏன் பிறந்தாய் மகளே?
கண்ணே பெண்மயிலே கண்ணுறங்காயோ?

தந்தையும் யாது செய்வார்?—அவர்
செந்தமிழ் கற்றதனால்
நொந்தஎன் வாழ்வினிலே—பசி
நோய் வந்து சூழ்வதுவோ?
கண்ணே பெண்மயிலே கண்ணுறங்காயோ?

பாட்டின் மகிமையினால்—ஒரு
பால்பசு உண்டாக்கிக்
காட்டிடும் வித்தையினை—தந்தை
கற்றிட வில்லையடி!
கண்ணே பெண்மயிலே கண்ணுறங்காயோ!

[குழந்தை ஓயாமல் அழுகிறது.]

புலவர் : என்னடி இது? பெருந்துன்பமா யிருக்கிறது. உணவுதான் வயிற்றுக்கு இல்லை; உறங்கவாவது கூடாதா? எப்பொழுது பார்த்தாலும் குழந்தையை அழவிட்டுக் கொண்டேயிருக்கிறாயே? பசியால் அழுங் குழந்தை உன் இசையைக் கேட்டால் சிரித்து விடுமா?

ம : என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

பு : அழுகிற பிள்ளைக்குப் பாலைக் கொடுக்கவேண்டும். இதுகூட நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா?

ம : பால் கொடுக்காமலா இருக்கிறேன். கொடுத்துத் தான் பார்க்கிறேன்; குழந்தையும் சுவைத்துத்தான் பார்க்கிறது. ஆனால்... ட்டிலே அடுப்பு நெருப்பைக் கண்டு ஆறு நாள் ஆகிறது. அரை வயிறு உணவு உண்டு ஐந்து நாள் ஆகிறது. பிள்ளைக்குப் பால் எப்படி இருக்கும்

பு : மெய்தான்; மெய்தான். கொண்ட மனைவியையும் குழந்தையையும் பசி நோயிலிருந்து காப்பாற்ற வழி தெரியாமல் திண்டாடுகிறேன். நான் என்ன செய்வேன்?

ம : என்ன செய்வேன், என்ன செய்வேன் என்று சொல் லிக்கொண்டு இருந்தால், உலையிலே அரிசி முளைத்து விடுமா? எவரிடமாவது சென்று, எதை யாவது பாடி, ஏதாவது பரிசு பெற்றுவரக் கூடாதா? ஏதாவது பெற்று வந்தால்தானே, அடுப்பைப் பற்றவைக்க முடியும்.

பு : எங்கே போய்ப் பெற்று வருவது? போகாமலா இருக் கிறேன் வஞ்சகம் பேசும் மக்களிடம் நடந்துநடந்து என் கால்களெல்லாம் புண்ணாகிவிட்டன. செல்வர் வீட்டு வாசல் தோறும் சென்று முட்டி முட்டி, என் தலை யெல்லாம் புண்ணாகிவிட்டது. இன்று வா,

காலை வா, மாலை வா என்று சொல்லும் சொற்களை நினைத்து நினைத்து, என் நெஞ்சமெல்லாம் புண்ணாய்விட்டது. நான் என்னதான் செய்ய?

ம : இந்த நாட்டில் எத்தனையோ தொழில்கள் இருக்க, போயும் போயும் தமிழை ஏன் படித்தீர்கள்?

பு : தமிழைப் படித்தது குற்றமா! தாயைப் போற்றுவது குற்றமா?

ம : போற்றுங்கள், நன்றாய்ப் போற்றுங்கள்...யார் வேண்டாமென்றது? தமிழைப் படித்ததோடு வேறு ஏதாவது ஒரு தொழிலையும் மேற்கொண்டிருக்கக் கூடாதா! பாடிப் பிழைக்கும் இந்தப் பரிசிற்றொழில் தானா உங்களுக்குக் கிடைத்தது? முப்பது ஆண்டுகள் தமிழை ஆராய்ந்து, மூன்று நாழிகை நேரம் மூச்சு விடாமல் கத்தினாலும், முக்கால் காசுக்கு வருமானம் உண்டா? சொல்லுங்கள்...

பு : நீ கூறுவது உண்மைதான். ஆனால், அது தமிழைப் படித்தவர்கள் குற்றமல்ல—அதை ஆதரிக்காதவர்கள் குற்றமடி, ஆதரிக்காதவர்கள் குற்றம்!

ம : 'கல்வியும் செல்வமும் ஒருவரிடம் நில்லாது. கற்றவர்களைவிட்டு வறுமை அகலாது' என்று சொல்கிறார்களே, அது எவ்வளவு உண்மை!

பு : உண்மையே; அது தமிழைப் பொறுத்த வரையில் முற்றிலும் உண்மையே. அன்பே! தமிழ் இருக்கிறதே, அது தேன். அதைச் சுவைத்தவர்கள், ஈ எறும்புபோல அதனுடன் ஒட்டிக் கொள்வார்களேயன்றி, அதைவிட்டு மீளமுடியாது. வேறு எந்தத் தொழிலுக்கும் அவர்கள் திரும்புவதில்லை. வறுமை வராமல் பின் என்ன செய்யும்! இதனை

அறிந்துதான், தமிழ் மன்னர்களும், தமிழ் வளர்த்த வள்ளல்களும், தமிழறிந்த செல்வர்களும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தார்கள். பொன்னி! கன்னித் தமிழின்மேல் காதல் கொண்டு விட்டால், அப்புறம் இந்த உலகமே தெரியாதடீ!

தமிழ்க் கன்னி தமிழ்க்கன்னி—பெருந்
தகைமேவும் நல்ல இனியாளே—என்
உளம் வாழும் மா தவள்தானே—செந் (தமிழ்க்)

அமிழ் தீவாள் என தாவியவள்
என்றும்—அழி விலாதவள்
எழிலொடு கனிவு நிறைவு மவளே (தமிழ்க்)

வீர மங்கையவள் விரிபுவி போற்றும்—மா
சீருடை யாவினும் சிறந்தவ ளாமே
தாரணிமே லின்பம் தருவா ளவளே
தமி ழென் னுள்ளம்
தனிலுறை கருணை தவழுமவளே. (தமிழ்க்)

[*புலவர் கிழார் பல்லக்கில் வருகிறார். பல்லக்குத் தூக்குவோரின் சப்தம் கேட்கிறது.*]

கிழார் : *பல்லக்கு நிற்கட்டும்.*

பு : *வெளியே என்ன ஆரவாரம்?*

ம : *நம் வீட்டு வாசலில்தான் பல்லக்கு நிற்கிறது. யாரோ...?*

பு : *யாரது? ஆ! வரவேண்டும், வரவேண்டும். வணக்கம். எங்கிருந்து வருகின்றீர்கள்? உள்ளே வாருங்கள். உட்காருங்கள்.*

கி : *நலந்தானே? ஒன்றும் குறைவில்லையே?*

பு : *ஆம். வறுமைக்கு ஒன்றும் குறைவில்லை*

கி : *வறுமையா? வள்ளல் குமணச் சக்கரவர்த்தி இருக்கும் மண்ணிலே, வறுமையா?*

பு : குமணனா? யார்? எங்கே?...

கி : ஐயோ பாவம்...புலவரே! நீர் பெரிய தவறு செய்து விட்டீர். வள்ளல் குமணனைக் காணாமல், வறுமை வறுமை என்றால், குற்றம் உம்முடையதே.

பு : நான் கேள்விப்பட்டதே யில்லை.

கி : இங்கிருந்து பத்து காத தூரத்தில், கிழக்கே ஒரு பட்டினம். அதை யாளும் மன்னர் மன்னனே குமணன்.

பு : அப்படியா?

கி : நான் அவரிடம் சென்றுதான் ஊர் திரும்புகிறேன். அந்த வள்ளல் தந்த பரிசுகள்தான் இவை. செல்லும் வழியில், தங்களைப் பார்த்துப்போகவே இங்கு இறங்கினேன். இதோ எனது அன்புக் காணிக்கை யாக, இந்தச் சிறு தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பு : இல்லை இல்லை, வேண்டாம்.

கி : கண்டிப்பாய் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். மறுக்கக் கூடாது (பொருள் கொடுக்கிறார்.) உடனே குமணனைச் சென்று பாருங்கள். தங்கள் குறையெல் லாம் தீரும். நான் போய் வரட்டுமா?

பு . போய்வாருங்கள், மிக்க நன்றி.

[பல்லக்குப் போகிறது]

பு : பொன்னி! இந்தா, இதை வைத்துக்கொள். நான் குமண வள்ளலிடம் சென்று பரிசில் பெற்று விரைவில் திரும்புகிறேன். குழந்தையை நன்றாகப் பார்த்துக் கொள். போய் வரட்டுமா.

ம : உடனே புறப்பட வேண்டுமாக்கும்? இரண்டு நாள் இருந்து, வயிறார உண்டு, உடல் நலம் பேணி, அதன் பிறகு செல்லக் கூடாதா?

பு: அடி பைத்தியக்காரி! 'தமிழ்ப் புலவனை ஆதரிக்கும் வள்ளல் ஒருவன் இருக்கிறான்' என்று கேட்ட வுடனேயே, என் பசி போய்விட்டதடி. இனி, பசி யேது? களைப்பேது? கவலையில்லாமல் இரு. சென்று வருகிறேன்.

காட்சி : 2

அரண்மனை வாயில்

பு: ஐயா, மன்னரை பார்க்கவேண்டும்.

மு—கா: எந்த மன்னரை?

பு: எத்தனை மன்னர்கள் உண்டு இங்கே? வரையாது வழங்கும் வள்ளல் குமணச் சக்கரவர்த்தியைத்தான்.

இ—கா: ஐயா, நீர் ஒரு தமிழ்ப் புலவரோ?

பு: ஆம்.

இ—கா: உங்களால்தானையா, மன்னருக்கு இந்தக் கதி நேர்ந்தது.

பு: ஏன்? என்ன நேர்ந்தது? மன்னருக்கென்ன?

மு—கா: மன்னர் இங்கில்லை ஐயா. காட்டிற்குப் போய் விட்டார்.

பு: ஏன், துறவியாய்விட்டாரோ?

இ—கா: அவர் செய்த தவறுக்கு ஏற்ற தண்டனை!

பு: என்ன தவறு செய்தார் மன்னர்?

இ—கா: உம்மைப்போல் வந்து கேட்கும் புலவர்கட் கெல்லாம், செல்வத்தை வாரி வாரி இறைத்தார். நல்லிசைத் தமிழ்ப்புலவர் என்றால், அள்ளி அள்ளிக் கொடுப்பார். கோடி கோடியாய்க் கொட்டினார். இன்னும் சில நாட்கள் அவர் இங்கிருந்தால், அரண் மனைக் களஞ்சியமே காலியாய்ப் போயிருக்கும்.

பு : ஆஹா! என்ன வள்ளற்றன்மை! அதற்காக என்ன நடந்தது?

மு—கா : அவருடைய தம்பி இளைய குமணன் அண்ணனிடம் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. படைத் தலைவர்களுடன் சதியாலோசனை செய்து, அண்ணனைக் கொன்று விட்டு, நாட்டை அபகரிக்க எண்ணினார். இதைக் கேள்விப்பட்டார், குமண மன்னர். "சதி செய்ய வேண்டாம் தம்பி; எல்லாவற்றையும் நீயே ஒப்புக்கொள்; எனக்குக் காடே போதும்" என்று சென்று விட்டார்.

...-106

பு : (துடித்து) ஐயோ! அப்படிப்பட்ட மன்னனுக்கு, இப்படிப்பட்ட ஒரு தம்பியா? என்ன கொடுமை! இளையவரைப் பார்ப்பதால் எனக்கென்ன பயன்? பாராமற் செல்வதே சாலச் சிறந்தது ஆம்; அந்த வள்ளலைக் காணவேண்டும். காட்டிற்குச் சென்றேனும், அந்தக் காவலனைக் கண்ணாற் காண வேண்டும்.

காட்சி : 3

காடு

[குமணன் பாடிக்கொண்டிருக்கிறான்.]

குமணன் :

இன்ப நடம் புரிந்திடும் மாஎழில் மேவும்
இயற்கை தனைக் காண—உள்ளத்தில் (இன்ப)
அன்பு தவழ் சோலை அழகினிலே என்றும்
அறியா அமைதி நிலவு முள்ளம் தன்னில் (இன்ப)
மாங்குயில் கூவிடும் தீங்குரலால் இசைக்கும்
மணமலர்த் தேனுண்டு மதுகரமே (இன்ப)
மான்களோடு கிள்ளை மழலை மொழி பேசி
மகிழும் அழகின் நிலை கண்டுள்ளம் தன்னில் (இன்ப)

[புலவர் யாரையோ தேடித் திரிவதைப் பார்க்கிறான்]

கு : (கை தட்டிக் கூப்பிட்டு) ஐயா! ஐயா! நேற்றும் நீங்கள் இங்கே அலைந்து கொண்டிருந்ததைக் கண்டேன். இன்றும், ஒரு நாழிகையாகத் தங்களைப் பார்க்கிறேன். எதையோ, யாரையோ, ஆவலோடு காண விரும்புபவர்போல் தோன்றுகிறது. தங்களுக்கென்ன வேண்டும்? தாங்கள் தேடும் பொருள் என்ன?

பு : ஐயா! இந்தக் காட்டில் குமண வள்ளல் இருக்கிறாராமே! எங்கிருக்கிறார்? யாரைக் கேட்டாலும் தெரியாதென்கிறார்களே? தாங்கள் அறிவீர்களா?

கு : நன்றாயறிவேன். தாங்கள் யாரோ?

பு : நான் ஒரு தமிழ்ப் புலவன்.

கு : அப்படியா! வரவேண்டும், வரவேண்டும்.

கு : குமணச் சக்கரவர்த்தி எங்கே இருக்கிறார்? அந்தக் கொடை வள்ளல் எங்கே இருக்கிறார்?

கு : இதோ இருக்கிறேன். வாழ்ந்தும், பிறருக்கு வாழ்வளிக்க வகையில்லாக் குமணன், இதோ இருக்கிறேன்.

பு : ஆ! தாங்களா? பெறும்பேறு பெற்றேன். வறுமையென்று வந்தோர்க்கெல்லாம் வரையாது வழங்கிய கரங்களா இவை? கொடையால் நாடிழந்த கோவே! தங்கள் திருமுகத்தைக் கண்டதே போதும். தங்கள் அறம் வாழட்டும்; நான் சென்று மீண்டும் வருகிறேன்.

கு : புலவர் பெருமானே! நில்லுங்கள். எதற்காக என்னைத் தேடி வந்தீர்கள்? ஒளியாமற் சொல்லுங்கள்.

பு : வேண்டாம் மன்னா! வேண்டாம்; அன்பு நிறைந்த தங்கள் உள்ளத்திற்கு, இனியும் துயரத்தை உண்

டாக்கமாட்டேன். வறுமையென்று வந்தவர்க் கெல்லாம் வாழ்வளித்த தங்கள் வாழ்வு பறிபோயி ருக்கும் இந் நிலையில்...

கு : என் வாழ்வு பறிபோகவில்லை. வாழ்கிறேன். ஆனால் பயனற்ற வாழ்வு. இருந்தாலும், புலவரே! தாங்கள் என்னை நாடி வந்த காரணமென்ன? சொல்லுங்கள்! தங்கள் நிலையென்ன? உண்மையைச் சொல்லுங்கள்.

பு : என்ன சொல்வேன்? எப்படிச் சொல்வேன்?

ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பசி யுழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறும் பால்காணாமல்
குழவி தாய்முகம் நோக்க, தாய் என் முகம் நோக்க,
யான் நின்முகம் நோக்கி வந்தனன் குமணா.

கு : ஆஹா! புலவரே, என்ன சுவை! என்ன சுவை! வறுமையில் வாடிமெலியும் உமது நிலையை, இவ்வளவு சுவையோடு சொல்லும் உமது கவிதைத்திறன் எத்துணை பெரிது! ஐயோ! நான் மன்னனாய் வாழ்ந்த காலத்தில் நீர் வரவில்லையே! கன்னலைக் கவிதையாக்கி தரும் உம்மைப் பொன்னாற் போற்றியிருப்பேனே! வைர மணிகளைக் கொட்டி உம்மை வாழ வைத்திருப்பேனே! வாழ்விழந்த இந் நாள் வந்து, உமது வறுமையையும் போக்கிக் கொள் ளாமல், என் உள்ளத்தையும் வருத்திவிட்டுச் செல் கிறீரே! ஐயோ! உமது தமிழ்ப்புலமைக்கு யான் என்ன பரிசு தரமுடியும்? இனிய தமிழால் உமது நிலையை எடுத்துக் கூறியும், செயலற்று நிற்கிறேனே! என் செய்வேன்! எளியவர்க் கீயாத நிலையில், என் உயிர் இன்னும் இருககிறதே! பூமிக்குப் பாரமாய், இந்தப் பொய்யுடலைச் சுமந்து நிற்கிறேனே! (சிறிது

யோசித்து)......ஆ! கொடுப்பேன்; கொடுப்பேன். கொடுக்க முடியும். என்னால் ஒன்று தர இயலும். என்னை வளர்த்த அன்னைக்கு அதைக் கொடுப்பேன். என்னைப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிய பைந்தமிழ்ச் செல்விக்கு அதைக் கொடுப்பேன். யான் போற்றும் தமிழ்த் தாய்க்கு என் தலையைக் கொடுப்பேன்.

பு : (திடுக்கிட்டு) மன்னா!...

கு : நாடாளும் என் தம்பி, காடாளும் என் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு, ஆயிரம் பொன் பரிசு வழங்குவதாகப் பறையறிவித்திருக்கிறானாம். என் தலையைக் கொண்டுபோய்த் தம்பியின் கைக் கொடுத்து அருங்குரிய விலையைப் பெற்று, உமது வறுமையை ஒழிந்து மகிழலாம். இதுதான் தமிழ்ப் புலமைக்குக் குமணன் வழங்கும் இறுதிப் பரிசு! ஏற்றுக் கொள்ளும்.

[வாளை உருவுகிறான்]

பு : மன்னர் மன்னவா! வள்ளற் பெருந்தகையே! என்ன செயல் செய்தீர்கள்! தமிழுக்குத் தலை கொடுக்க முன் வந்த தந்தையே! நன்று! நன்று! இச்செயலால் எனது வறுமை சில காலம் ஒழியலாம். எக்காலமும் பழி ஒழியுமா? அதுவும், இப்பழி தமிழுக்கல்லவா உண்டாகும்? உமது சிறந்த கொடைக்கும், குணத்திற்கும், அன்பிற்கும் எனது நன்றி! படர்வதற்குக் கொழுகொம்பில்லாமல் ஊசலாடிக் கொண்டிருந்த முல்லைச் செடியின் துன்பத்தைச் சகியாமல், தன் பொற்றேரை அதற்குப் படர்வதற்காகத் தந்துதவிய பாரி வள்ளலின் கொடையைப் பார்த்திருக்கிறேன்; நெடுங்காலம் உயிர்வாழப் பலநாள் காத்திருந்து பெற்ற ஒரே நெல்லிக் கனியை ஔவைக்கு அக மகிழ்ந்து அளித்துப் பெரும் பெயர் பெற்ற, அதிய

மானின் கொடைத் திறனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன்; பத்துப் பாட்டில் பல புலவர்கள் பாடிய பாடல்களுக்கு. மலையின் உச்சியின்மீது ஏறி, கண்களுக்கெட்டிய தூரம் நிலங்களையும், பல பொற் குவியல்களையும் பரிசாக வழங்கிய வள்ளல்கள் பலரைப்பற்றிப் படித்து மிருக்கிறேன் ஆனால், தமிழுக்காகத் தன் தலையைக் கொடையாக வழங்கிய மன்னனைப்பற்றிக் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை, படித்ததுமில்லை. வருகிறேன், மன்னவா! போய்வருகிறேன் —தம்பியைக் காண்பேன். மீண்டும் வருவேன். தாங்கள் வாழ வேண்டும். தமிழ் வாழ்வதற்காகத் தாங்கள் வாழ வேண்டும். தங்கள் வாழ்நாள் பெருகவேண்டும். வாழ்க தங்கள் கொடைத் தன்மை! வாழ்க மன்னர் மன்னவா, வாழ்க!

வீரம்

காட்சி : 1

தெரு

[சேரரின் போர்ப்பறை முழங்குகிறது.]

பறை அறிவிப்போன் : வளமுயர் சோழ நாட்டு மக்களே! கேளுங்கள்: இன்றைக்கு ஏழாம் நாள் எங்கள் சேரர் படை இந் நாட்டின்மீது போர் தொடுக்கப் போகின்றது. ஆதலால் பசுக்கள், பெண்கள், குழந்தைகள், துறவிகள், பிணியாளர்-ஆகியோர் அனைவரும் போர்க்களத்தை விட்டு ஒரு காததூரம் போய் விட வேண்டும், இது எங்கள் சேரமன்னனின் ஆணை கலந்த வேண்டுகோள்.

[மீண்டும் பறை முழக்கம்.]

ஒ-வது வீரன் : அடடா! என்ன கருணையப்பா சேரமன்னனுக்கு! போர் தொடுக்கப் போகிறானாம். குறிப்பிட்ட சிலர் வெளியேறிவிட வேண்டுமாம்!

[நகைக்கிறான்].

இ-வது வீரன் : சிரிக்காதேயப்பா! பலவீனர்களைக் கொல்லக்கூடா தென்பதற்காகத்தான் முன்னறிவிப்புச் செய்கிறான்.

மூ-வது வீரன் : மற்றவர்களை மட்டும் கொல்லலாமா?

இ-வீ . நமக்கு ஏன் இந்த வம்பு? இப்படிச் செய்வது அரச நீதி.

மூ-வீ : நீதியுள்ள அரசன், போர் தொடுக்காமலே இருக்கலாமே?

இ-வீ : சேரன் சிறந்த அறிவாளி. போர் நேராமல் தடுக்கவே முயற்சித்திருப்பான். நமது சோழ மன்னரும் நேர்மை தவறாதவர். எப்படியோ, இவர்களுக்குள் பேச்சு முறிந்து போர் மூண்டு விட்டது. நாம் என்ன செய்ய முடியும்?

ஒ-வீ : போர்! இப்போதுதானே போர் நடந்து முடிந்தது! மறுபடியுமா போர்?

மு-வீ : ஆமப்பா, ஆமாம். சேரனுக்கு வரவரப் பேராசை பெருகிவிட்டது. அந்தப பேராசைதான் பெரும்படையைத் திரட்டச் செய்துவிட்டது. படைக்கருவிகளும் பெருகிவிட்டன. அடுத்து நடக்கவேண்டியது போர் தானே?

ஒ-வீ : முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும் வைரத்தை வைரத்தால்தான் அறுக்கவேண்டும். வெறியைப் போரிட்டே ஒழிக்கவேண்டும். சோழ வீரர்கள் கோழைகளல்லர்.

இ-வீ : ஆமாம்; வலியச் சண்டைக்குப் போகக்கூடாது; வந்த சண்டையை விடக்கூடாது. ஒழியட்டும் சேர மன்னனின் போர் வெறி.

எல்லோரும் : உயரட்டும் புலிக்கொடி! கிளம்பட்டும் சோழர்படை!

[சோழனின் போர்ப்பறை முழக்கும்.]

பறை அறிவிப்போன் : வாழப் பிறந்த சோழ மக்களே சேரமன்னன் இந்நாட்டின்மீது படையெடுத்து விட்டான். வேற்று மன்னனின் வெறியை முறிக்க வீட்டுக்கு ஒரு ஆள் தேவை. போர்க் கருவிகளுடன் புறப்படுங்கள். வீட்டுக்கொரு ஆண்மகன் நாட்டைக் காக்கப் புறப்படுக! இது சோழமன்னரின் கட்டளை!

எல்லோரும் : போர்! போர! உயரட்டும் புலிக்கொடி.

[பறை முழக்கும்]

காட்சி : 2

ஒரு குடும்பம்

கணவன் : மைத்துனரே! போர் என்றதும், தங்கள் புயம் வீங்குகிறதே!

மைத்துனன் : தங்கள் தோள்களும் விம்மிப் புடைக்கின்ற வேகத்தையல்லவோ காண்கிறேன்!

க : ஆம்; போர்ப்பறை ஒலியைக் கேட்டதும், நமக்கு உண்மையிலேயே ஒரு தெம்பு உண்டாகிறதல்லவா?

மை : அது இந்த நாட்டு மண்ணின் இயல்பு அத்தான்! இப்போது போர்ப் பறை ஒலித்தது; இன்னும் சற்று நேரத்தில் போர் முரசு முழங்கப் போகிறது, பாரும். போர் முரசு கேட்டதும், நமக்குள்ளேயே ஒரு துடிப்பு வெறி உண்டாகும்.

க : முரசொலி வெறியைக் கிளப்புமா? அதற்கு அவ்வளவு வன்மை உண்டா?

மை : ஆமாம்; அந்த முரசு, எருமைக்கடாத் தோலினால் செய்யப்பட்டது. தெரியுமா? சாதாரண எருமையல்ல. சண்டையில் உயிர் போகும் அளவுக்குப் போரிட்டு, எதிரியைக் கொன்று வெற்றிமாலை சூடி மகிழ்ந்து, வீறுடன் போர்க்களத்தை விட்டு வெளியேறும்போது, எந்த எருமை உயிர்விடுகிறதோ, அந்த வீர எருமைக்கடாவின் தோலைக் கொண்டுதான் போர்முரசு கட்டுவார்களாம். அந்த முரசை வைப்பதற்கு ஒரு கட்டில் உண்டு. அரசு கட்டிலுக்கும் முரசு கட்டிலுக்கும் ஒரே மரியாதைதான்.

[முரசொலிக்கிறது.]

க : அப்படியா? அதோ போர் முரசு.

இருவரும் : போர்! போர்!

க : மைத்துனரே! போர் முரசு கொட்டிவிட்டது. இன்றைய முறைக்கு நான் போர்க்களம் புறப்படு கிறேன். செல்லம்! எடு வாளை.

மை : இல்லை அத்தான். இன்றையப் போருக்கு நான் முதலில் போகிறேன். தங்கைக்குத் துணையாக நீர் வீட்டில் இரும்.

க : இல்லை இல்லை; நான்தான் போகவேண்டும்.

மை : முடியாது; ஒரு நாளிலேயே சேரர் படை சின்னா பின்னப்பட்டு ஓடினாலும் ஓடிவிடும். பிறகு எனக்குப் போரிடும் வாய்ப்புக் கிடைக்காது.

க : சொல்வதைக் கேளுங்கள். கண்டிப்பாக நான்தான் போர்க்களம் போகவேண்டும். செல்லம், இன்றைக்கு யார் போருக்குப் போக வேண்டும்? நான்தானே? நீயே சொல்.

மை : இல்லை, நான்தானே?

க : இல்லை இல்லை; செல்லம், நான்தானே! உன் அண்ணனாயிற்றே என்று சொல்லாதே.

மை : உன் கணவனாயிற்றே என்று சொல்லாதே, செல்லம்! நான்தானே?

செல் : (சிறிது யோசித்து) எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. உங்களில் யார் முதலில் வாளை எடுத்துக் கொண்டு வருகிறீர்களோ, அவர்தான் இன்று போருக்குச் செல்ல வேண்டும்.

இருவரும் : சரி.

செல் : ஒன்று, இரண்டு, மூன்று.

[இருவரும் ஓடுகின்றனர். மைத்துனர் வாளை முதலில் எடுத்து வருகிறார்.]

மை : எப்படி? வெற்றி எனக்குத்தான் அத்தான்.

செல் : பார்த்தீர்களா! என் அண்ணன்தானே வெற்றி பெற்றார்?

க : ஆஹா! ஓட்டத்தில் உன் அண்ணன் பெரிய சூரன்தான்.

செல் : எங்கள் பரம்பரைக்கே என்றும் தோல்வி கிடையாது. இன்று அவர்தான் போருக்குச் செல்வார். போய் வாருங்கள் அண்ணா,

மை : என்ன அத்தான், சோர்ந்து இருக்கிறீர்? போய் வரட்டுமா?

க : (பெருமூச்சு விட்டு) போய் வாரும்.

மை : வாழட்டும் சோழ நாடு!

இருவரும் : வாழட்டும் சோழ நாடு!

காட்சி : 3

தெரு

[முதல் நாள் போர்முடிந்து படைவீரர்கள் வீடு திரும்புகின்றனர்.]

செங்கமலம் : அதோ போருக்குச் சென்றவர்கள் திரும்பி வருகிறார்கள்.

மு-வீ : அப்பா! போர் என்றால் இதுவல்லவா போர்!

இ-வீ : என் வாளுக்கு இன்று நல்ல வேட்டை கிடைத்தது.

மு-வீ : இறுதியில் வெற்றி தோல்வியின்றி முடிந்ததே! அதுதான் எனக்கு வருத்தம்.

செல்லம் : ஐயா! என் அண்ணன் இன்னும் வர வில்லையா?

மு-வீ : யாரு, அம்பலவாணனா?

செல் : ஆமாம்.

மு-வீ : ஐயோ! அவனுடைய வாள் வலிமையும் தோள் வலிமையும் கண்டு எதிரிகள் சிதறியோடிய காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. குதிரைப் படைகளுக்குள் புகுந்து, பல குதிரை

களின் கால்களையும், தலைகளையும் வெட்டி வீழ்த்தினான். இன்று அவன் போராடிய ஆற்றலை, நம் தளபதியே வியந்தார்! ஆனால், சற்று முன்தான் பகைவரது வாளால் அவன் வெட்டுண்டு போனான்.

செல் - ஆ! அண்ணா!

[சோகமுற்று உட்கார்ந்துவிடுகிறாள். விடியும் மட்டும் அதே நினைவால் வருந்துகிறாள். கோழி கூவுகிறது. செல்லம் அழுதுகொண்டிருக்கிறாள்.]

செங் : அழாதே செல்லம், இனி அழுது பயனென்ன? தன் கடமையை நிறைவேற்றி, அழியாப் புகழ் பெற்றான் உன் அண்ணன்.

செல் : அக்கா! தனி மரமாகிவிட்டேனே! பாவி எவ்வளவுதான் துயரத்தை அடக்க முயன்றாலும், கண்ணீர் பொங்கி வந்துவிடுகிறதே. நான் என்ன செய்வேன்!

[இரண்டாம் நாள் போரைப்பற்றி முரசொலிக்கிறது.]

பறையறைவிப்போன் :

வீட்டுக்கொரு ஆண்மகன்
நாட்டைக் காக்கப் புறப்படுக!
வீட்டுக்கொரு ஆண்மகன்
நாட்டைக் காக்கப் புறப்படுக!

க : செல்லம், செல்லம்!

செல் : இதோ வந்துவிட்டேன் அத்தான்.

க : எடு வாளை! போருக்குச் சென்று வருகிறேன்.

[வாள் எடுத்து வருகிறாள்.]

செல் : ஆஹா! மகிழ்ச்சியோடு சென்று வாருங்கள். வெற்றி நமதே! வாழட்டும் சோழ நாடு!

க : வாழ்க சோழ நாடு!

மகன் : அப்பா! அப்பா!

க : வாடா என் கண்ணே!

மகன் : நானும் வருகிறேன் அப்பா!

க : கண்ணே! நான் போர் முனைக்குச் செல்கிறேன்; அம்மாவோடு விளையாடிக்கொண்டிரு.

[முத்தம் கொடுக்கிறான்.]

காட்சி : 4

தெரு

[இரண்டாம் நாள் போர் முடிந்து, படைவீரர் திரும்புகின்றனர்.]

மு-வீ : என்னப்பா கையிலே?

இ-வீ : ஒன்றுமில்லை; ஒரு சிறு காயம்.

மு-வீ : எங்கே? அட பாவி! படுகாயமல்லவா ஏற்பட்டிருக்கிறது. அதுவும் வலது கையில். த்சு த்சு...

இ-வீ : வெட்டியவனை அந்த இடத்திலேயே பழி வாங்கிவிட்டேன். இருந்தாலும், நாளைப் போரில் கையில் வாளேந்த முடியாத நிலை ஏற்பட்டு விட்டதே என்றுதான் கவலையாய் இருக்கிறது.

செல் : (தனக்குள்) எங்கே என் கணவர்? இன்னும் வரவில்லையே? அண்ணா, அவர் வரவில்லையா?

இ-வீ : உன் கணவரா அம்மா?

செல் : ஆமண்ணா.

இ-வீ : அம்மா! அவர் இன்று போரிட்ட வீரத்தை நினைத்தாலே புல்லரிக்கிறது. அவர் யானைப் படைகளுக்குள்ளே புகுந்து, பல யானைகளின் கால்களையும், துதிக்கைகளையும் வெட்டி வீழ்த்தினார். ஆனால் இறுதியில், அவரையும், எதிரியின் வாள் வெட்டி வீழ்த்திவிட்டதம்மா!

செல் : ஐயோ! என் அன்பே' நான் என்ன செய்வேன்?

[மூர்ச்சிக்கிறாள். விடியுமட்டும் அதே நினைவால் வருந்துகிறாள். செல்லம் அழுது கொண்டிருக்கிறாள். கோழி கூவுகிறது. தோழி செங்கமலம் தேற்றுகிறாள்.]

செங் : அழாதேயம்மா! நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

செல் : அக்கா! இந்தப் பாவியின் உயிர் இன்னும் இருக்கிறதே! நேற்று அண்ணன் இறந்தார்! இன்று ஆளனும் மறைந்தார். பிறந்த இடமும், புகுந்த இடமும் என்னைக் கைவிட்டுவிட்டதே அக்கா' வெற்றியோடு திரும்பும் அவருக்கு, என் கையால் வீரவாகை சூட்டி மகிழலா மென்றிருந்தேனே! இன்பக் கனவெல்லாம் மணற்கோட்டையாகி விட்டதே!

செங் : களத்தில் குதித்த பிறகு, வாழ்வும் சாவும் நம் கையிலா இருக்கிறது? எழுந்திரம்மா, எழுந்திரு. முகத்தைக் கழுவிக்கொள்.

செல் : உயிரைப் பிரிந்து உடல் மட்டும் வாழ முடியாது.

செங் : என்ன? இதென்னம்மா விபரீதமான முடிவு. கணவனை யிழந்த துயரத்தில் உன் கண்ணான செல்வனை மறந்துவிட்டாயே! செல்லம், உன் வாழ்வின் மணி விளக்கல்லவா இவன்? அணைந்துபோன இந்தக் குடும்பத்தில், ஒளி பரப்ப இருக்கும் அவனுக்கு, உன்னைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்? அவன் முகத்தைப் பார்த்தாவது உன் மனத்தை மாற்றிக் கொள். எழுந்திரம்மா.

[மூன்றாம் நாள் போர்பற்றிப் பறையறைவிப்போன் தெரிவிக்கிறான். முரசு ஒலிக்கிறது.]

பறையறைவோன் :

வீட்டுக்கொரு ஆண்மகன்
நாட்டைக் காக்கப் புறப்படுக!
வீட்டுக்கொரு ஆண்மகன்
நாட்டைக் காக்கப் புறப்படுக!

செல் : மணிவண்ணா! மணிவண்ணா!

மணி : அம்மா!

செல் : இங்கே வாடா! என் கண்ணே!

மணி : ஏனம்மா?

செல் : விடிந்ததும் விடியாததுமாக எங்கே போய் விட்டாயப்பா.

மணி : விளையாடப் போனேனம்மா.

செங் : ஐயோ! பாவம் ஒன்றுந் தெரியாத பிள்ளை!

செல் : விளையாடும் நேரமா இது? போர்க்களத்தில் விளையாடவேண்டிய நேரத்தில், புழுதியிலா விளையாடுவது? மாற்றானுடன் விளையாட வேண்டிய நேரத்தில், மண்ணிலா விளையாடுவது? என் செல்வமே! இப்படி வா; உட்கார்; எண்ணெய் பூசி, தலைவாரி முடிக்கிறேன்.

மணி : ஏனம்மா?

செல் : என் செல்வமே! நீ உடனே போருக்குச் செல்ல வேண்டும்!

செங் : ஹா! என்னம்மா இது?

செல் : உன் மாமாவையும், அப்பாவையும் கொன்று வீழ்த்திய சேர வீரர்களைப் பழிக்குப்பழி வாங்க வேண்டும். குலப்பெருமையைக் காப்பாற்ற வேண்டும், தெரியுமா?

மணி : அப்படியே ஆகட்டும் அம்மா! நேற்றே அப்பா வுடன் போகவேண்டுமென்று புறப்பட்டேனே. அப்பாதான் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார்.

இன்றைக்குத்தான் என் மனம் நிம்மதி அடைந்தது. எதிரிகளின் படைக்கு எமனம்மா, எமன்.

[முத்தம் கொடுக்கிறாள்.]

செல் : அப்படிச் சொல்லடா என் செல்வமே!

செங் : அடி பாவி! என்னடி இது? உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? முந்தா நாள் அண்ணனைப் பறி கொடுத்தாய்; நேற்றுக் கணவனை இழந்தாய்; இன்று உனக்கென்றிருக்கும் ஒரே மகனைப் போருக்கு அனுப்பத் துணிகிறாயே! போர்க்களத்திற்குப் போகும் பருவமா இது?

செல் : அக்கா, நம் நாட்டிற்காகப் போராட வேண்டிய இந்தச் சமயத்தில் எனக்கிருக்கும் ஒரே மகன், வீட்டுக்குள்ளிருந்து விளையாடுவதா? பகைவர் நம்மை நெருங்கி நிற்கும்போது படுகளத்துக்குச் செல்ல இயலாவிட்டால், என் மகன், ஆண்மகன் என்று யாருக்காக வாழவேண்டும்? இந்தா, இந்த வேல் உன் கையில் உள்ளளவும், நாட்டுக்காகப் போராடு மகனே! வாழ்க சோழ நாடு!

செங் : கண்ணே மணிவண்ணா! வேண்டாமடா! உன் தாய் ஏதோ வெறிகொண்டு பிதற்றுகிறாள். உன்னைத் தவிர அவளுக்கு வேறு யாருமில்லை. எப்படியும் நமது மன்னர் இன்று வெற்றி பெறுவார்; நீ போக வேண்டாம், போர்க்களத்தைப் பார்த் தாலே...

மணி : என்னைக் கோழையென்றா எண்ணிக் கொண் டீர்கள். வீரர் குடியில் பிறந்த வீரனம்மா நான்! படுகளத்தைக் கண்டு பயந்தா ஓடிவிடுவேன்? விலகுங்கள் அப்புறம். வாழ்க சோழ நாடு!

[மூன்றாம் நாள் போர் முடிந்து வீரர் திரும்புகின் றனர்.]

மு—வீ : இன்னும் ஓரே நாள். நமது மன்னர் வெற்றி வாகை சூடிவிடுவார்.

இ—வீ : அதில் ஐயமென்ன? இன்றே சேரர் படை சிதறுண்டு விட்டதே! மன்னனே முனைமுகத்தில் நின்று போராடியும், வெற்றி நம் பக்கம்தானே நின்றது.

மு—வீ : சேரனும் நல்ல சூரனப்பா! திறமையாகத் தான் போராடினான். என்ன இருந்தாலும், நம் மன்னருக்கெதிரே நிற்க முடியுமா?

செல் : ஐயா! என் மகன் இன்னும் வரவில்லையே! அவனைப் பார்த்தீர்களா?

இ—வீ : ஏனம்மா, உனக்குக் கொஞ்சமாவது முன் யோசனை வேண்டாமா? சிறு குழந்தையைப் போருக்கனுப்பி விட்டாயே! அவன் என்ன செய் வான்? பாவம் எதிரியின் வேலைக் கண்டு பயந்து போயிருப்பான். அந்த வேல் அவனது முதுகில் தாக்கிக் கொன்றிருக்கும்.

செல் : என்ன? என் மகன் முதுகில் காயம் பட்டு இறந்தானா? இல்லை; பொய்! இப்படி நடந்திருக்க வே முடியாது. என் மகன் கோழையல்ல. கொடுங் கள் அந்த வாளை. (வீரனிடமிருந்து வாளை உருவி) இதோ... போர்க்களம் சென்று பார்கிறேன். என் மகன் முதுகிற் காயம்பட்டு இறந்திருந்தால் அவனுக் குப் பாலூட்டிய உறுப்பை இன்றே அறுத்தெறி கிறேன்.

[ஓடுகிறாள்.]

மு—வீ : ஆஹா! மறக்குடி மடந்தையப்பா இவள்! முந்தா நாள் அண்ணனைப் பறிகொடுத்தாள். நேற்றுக் கணவனை இழந்தாள். இன்று தன் ஒரே செல்வன் இறந்தானென்று கேட்டும், அவள் மனம்

கலங்கவில்லை. முதுகிலே காயம் என்றதும், அவளுக்கு வந்த ஆவேசத்தைப் பார்த்தாயா; இத்தகைய தாய்மார்களால்தான் தமிழ்க் குலம் தழைக்கிறது.

காட்சி : 5

போர்க்களம்

[போர்க்களத்தில், ஒரு கையில் தீவட்டியுடனும், ஒரு கையில் வாளுடனும் செல்லம் தன் மகனைத் தேடுகிறாள்.]

ஒ—வீ : யாரது?... ஆ! ஒரு பெண், ஒரு கையில் தீப் பந்தம்; மற்றொரு கையில் வாள். எதைத் தேடு கிறாள்? பிணங்களைப் புரட்டிப் பார்க்கிறாளே! ஏன் இப்படித் தலைவிரிகோலமாய் ஆவேசங் கொண்ட வளைப்போல் அலைகிறாள்? ஐயோ பாவம்! யாரைப் பறி கொடுத்தாளோ?...அம்மா! அம்மா! யாரைத் தேடுகிறீர்கள்?...உங்கள் உறவினர்கள் யாராவது...?

செல் : என் மகன்! என் மகன்!

ஒ—வீ : மகனா? த்சு த்சு...எத்தனை வயதிருக்கும் தாயே? அடையாளம் சொல்லுங்கள். நானும் தேடிப் பார்க்கிறேன்.

செல் : பத்தாண்டுப் பாலகன் என் மகன்.

ஒ—வீ : ஓ! அந்த இளங் குழந்தையை ஈன்ற தாய் நீங்களா? ஆஹா! தாயே! நீங்கள் செய்த பாக்கியமே பாக்கியம்! இன்றையப் போரில் அந்தப் பாலகன் காட்டிய வீரம்—அப்பப்பா! குழந்தையா அவன்? இல்லை இல்லை! கூற்றுவன் போல் நின்றான், எதிரிகள் முன். மன்னரும் மாற்றாரும் அந்த இளம்

பிள்ளையின் இணையற்ற வீராவேசத்தைக் கண்டு, வியப்பே வடிவாக நின்றார்கள், தாயே!

செல் : ஆ!

ஒ—வீ : 'இத்தகைய வீரமகனைப் பெற இவன் தாய் என்ன நோன்பு நோற்றாளோ' என்று, எல்லோரும் வாய்விட்டுக் கூறினர், தாயே! ஆனால் இன்றைய வெற்றிக்குக் காரணமாயிருந்த அந்த இளஞ்சிங்கம், இறுதியில், வீரசுவர்க்கம் அடைய நேரிட்டது.

செல் : எங்கே அவன் உடல்? எங்கே என் மகன்?

ஒ—வீ : சிறப்பான முறையில் தங்கள் வீரத்திருமகனின் உடலை அடக்கம் செய்ய வேண்டுமென்பது மன்னரின் கட்டளை. அதற்குக் காவலாகத்தான் நான் நிற்கிறேன். இதோ, இப்படி வாருங்கள் தாயே!

[துடிதுடித்துச் செல்கிறாள்.]

செல் : ஆஹா! மார்பிலே காயம்! கையிலே வாள்! என் குலக்கொழுந்தே! நீயே வீரன்! நீயே வீரன்! சிங்கத்தின் வயிற்றிலே நரி பிறக்காது. நான் பெற்ற மகனே! உன்னைக் கோழையென்று சொன்னானே —ஒரு கயவன்—அவன் அழிந்து போகட்டும்! என் வயிற்றில் பால் வார்த்தாய் செல்வமே! உன்னைப் பெற்றபோது நான் அடைந்த மகிழ்ச்சியைவிட, இப்போது பெருமகிழ்ச்சி அடைகிறேனடா கண்ணே, என் மகன் வீரன்! அவனுக்கு நான் ஊட்டியது வீரப் பால்! வாழட்டும் வீரர் பரம்பரை வாழ்க சோழ நாடு!

காட்சி : 6

சோழர் பாசறை

(வெற்றி முழக்கம்)

எல்லோரும் : வாழ்க சோழ நாடு! வாழ்க சோழமன்னர்,

ஒற்றன் : மன்னர் பிரான் வாழ்க! சோழர் பெரும! சேர மன்னர் உடனே போரை நிறுத்தும்படி தம் படைக்குக் கட்டளை இட்டுவிட்டாராம்.

சோழ : ஏன், தோல்வியை ஒப்புக் கொள்கிறாரா?

ஒற் : காரணம் புதுமையானது மன்னவா! நேற்று நடந்த போரில் சேரமன்னரின் முதுகில் சிறிது காயம் பட்டு விட்டதாம். முதுகில் காயம் ஏற்பட்டது சேரர் பரம்பரைக்கே இழுக்கு என்று சேரமன்னர் துடியாய்த் துடித்தாராம். அந்தப் பழியைப் போக்கிக்கொள்வதற்காக, அவர் உணவும் நீரும் அருந்தாமல், வடக்கு நோக்கியிருந்து உயிர் விடத் துணிந்து விட்டாராம். இச்செய்தி சேரர் பாசறையில் ஒரே பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

[வெற்றி முழக்கம்]

ஒரு வீரன் : வெற்றி! வெற்றி! சோழ மன்னருக்கு வெற்றி! இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்! வாழ்க சோழ மன்னர்!

எல் : வாழ்க! வாழ்க!

சோழ : நிறுத்துங்கள்; நிறுத்துங்கள்! ஏன் இந்த ஆர்ப்பாட்டம்? எதற்கு இந்த வெற்றி முழக்கமெல்லாம்? இதுவா வெற்றிச் செய்தி? சேரன் நம்மிடம் சரணடைந்துவிட்டானா? இல்லை, சேரர் படைதான் தோற்றதா? பின், ஏன் நீங்கள் மகிழ்ச்சிக் கூத்தாடு

கிறீர்கள்? அமைச்சரே, வருந்துகிறேன். சோழர் பரம்பரை தோன்றிய காலந்தொட்டுப் போரில் புறங் காட்டி ஓடுபவர்மீது அம்பு எய்ததே இல்லை. நேற்றுச் சேரனும் புறங்காட்டி ஓடவில்லை. அவரது முதுகில் நம் அம்பு எப்படிப் பாய்ந்தது? எதிரியின் முதுகில் காயப்படுத்தியது நமது வீரத்துக்கு இழுக் கன்றோ? இந்த பெரும் பழியைத் துடைக்கா விட்டால், சோழர் பரம்பரையின் புகழெல்லாம் மண்ணாகிவிடுமே! இது எனக்கும் பழி! என் பரம் பரைக்கும் இழுக்கு! அமைச்சரே! சேரனை முதுகிற் காயப்படுத்திய பழியைப் போக்க, நானும் வடக்கு நோக்கியிருந்து உயிர்விடத் தீர்மானித்து விட்டேன்.

[வடக்கு நோக்கி உட்காருதல்.]

அமைச் : மன்னவா! இதென்ன முடிவு?...ஓடுங்கள் ஓடுங் கள்! நம் புலவர் பெருமானை அழைத்து வாருங்கள். சேரர் உயிரும், சோழர் உயிரும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. சேரமன்னர் தம் முதுகில் காயம்பட்டது தன் பரம்பரைக்கு இழுக்கென்று உயிர்விடத் துணிந்தார். நம் சோழ மன்னர் சேர மன்னரை முதுகிற் காயப்படுத்தியது, தன் வீரத்திற்கு இழுக்கென்று உயிர்விடத் துணிந்து விட்டார். இது வன்றோ தமிழர் வீரம்! இந்த வீர மன்னர்களைக் காப்பாற்றினால்தான் தமிழ்நாடு வாழும். ஓடுங்கள்! நம் புலவர் பெருமானால்தான் இவர்களைக் காப் பாற்ற முடியும். விரைந்து செல்லுங்கள். வாழ்க தமிழ் நாடு! வாழ்க தமிழரின் வீரம்!

இழிவு

புறநானூறு

காட்சி : 1
செல்வர் வீடு

[செல்வரும் அவர் கணக்கரும்.]

செல்வர் : என்ன கணக்குப்பிள்ளை!

கணக்கர் : இதோ வந்துட்டேனுங்க!

செ : நெல் அறுவடையெல்லாம் முடிந்து விட்டதா?

க : ஆமாங்க.

செ : எல்லாக் கிராமங்களிலிருந்தும் குத்தகையயெல்லாம் சரியா வந்திடுச்சா? இல்லை, 'எவனாவது பாக்கி கீக்கி வச்சிருக்கானா!

க : கஞ்சம் பட்டியிலும் கடனூரிலுந் தவிர மற்ற ஊர்க் குத்தகைகாரனெல்லாம் குத்தகைப்படி சரியா நெல் அளந்துட்டானுங்க.

செ : ஏன்? அவங்க ரெண்டு பேருக்கும் என்ன கேடு?

க : மழை பெய்யலையாம்! விளைச்சல் கம்மியாம்! குத்தகையைக் கொஞ்சம் குறைத்துத்தான் அளக்க முடியுமாம். ஐயா உத்தரவு இல்லாமே குத்தகையைக் குறைச்சு வாங்க மாட்டேன்னு நான் வந்துட்டேனுங்க.

செ : போக்கிரிப் பசங்க! நல்லா மழை பேஞ்சு அதிகமா நெல் விளைஞ்சப்போ குத்தகையைக் கூட்டிக் கொடுத்தானுங்களா? ஏய்க்கப் பார்க்கிறானுங்க! குத்தகை பூராவையும் உதைச்சு வாங்கு! இவர்களுக்கெல்லாம் தயவு தாட்சண்யங் காட்டுவது கூடாது. தெரியுதா?

க : சரிதாங்க.

செ : ஆமா...பிச்சைமுத்து எங்கே வந்தான்?

க : அவனுக்கு 100 ரூபாய் கடன் வேணுமாம்! ஒண்ணு வட்டிக்கு நோட்டு எழுதித் தருவானாம்.

செ : ஒண்ணு வட்டிக்கு நோட்டெழுதி நாக்கு வழிக்க வா? அரை வட்டிக்கு நோட்டெழுது. ஒண்ணு வட்டி விதம் 3 வருஷத்திற்கு வட்டியைப் பிடிச்சிக் கிட்டு பாக்கியைக் கொடுத்தனுப்பு!

க : சரிங்க! மூணு பனிரெண்டு முப்பத்தாறு போகப் பாக்கி 64 ரூபாய் கொடுத்தனுப்புகிறேனுங்க.

செ : சரி; நெல்லையெல்லாம் களஞ்சியத்திலே குவிச் சிட்டீங்களா!

க : ஆமாங்க.

செ : எத்தனை கலம்!...

க : மொத்தம் 86879 கலமுங்க!

செ : சரி; பத்திரிகையை எடு.

[கணக்குப்பிள்ளை ஒரு பத்திரிகையைக் கொண்டு வந்து கொடுக்கிறான்.]

செ : ஏங்காணும் பத்திரிகை பிரிச்சிருக்கு! நீ கூடப் பத்திரிகை படிக்கிறதுண்டோ?

[கணக்குப்பிள்ளை தலையைச் சொரிந்துகொண்டு நிற்கிறான்.]

செ : (கொஞ்சம் கிண்டலாக) பத்திரிகை படிப்பதிலே உனக்கென்னப்பா அவ்வளவு அக்கறை?

க : எங்கள் குடும்பத்திலே அஞ்சி பேரு இருக்கோமுங்க! நான் ஒருவன் தான் சம்பாதிக்கிறேன். என்னுடைய சம்பளம் எல்லோருடைய வயிற்றுக்கும் போதுங் களா? என் தம்பி ஒருவன் படிச்சிக்கிட்டு இருக்கான். அவனுக்கு ஏதாகிலும் வேலை கிடைக்குமான்னு பார்க்கிறேன். தினம் 'ஆள் தேவை' என்ற விளம் பரத்லைத, ஒண்ணு விடாமப் படிக்கிறேனுங்க....

செ : சரி. சரி! உன் குடும்பக் கதையைக் கொஞ்சம் நிறுத்து. இனிமேல் பத்திரிகை படிக்கும் வேலையும் எனக்கு வேண்டாம். முக்கியமான விஷயங்களையெல்லாம் நீரே படிச்சுச் சொல்லும். உணவு ஜீரணமாகி வயிறு பசியெடுக்க ஏதேனும் 'மருந்து கிருந்து,' 'அல்வா கில்வா,' 'லேகியம் கீகியம்' இந்த விளம்பரம் வந்தால், மறக்காமப் பார்த்துச் சொல்லும்.

க : சரிதாங்க.

[செல்வர் உள்ளே செல்கிறார்.]

க : (தனியே) நானும் பத்திரிகை படிக்கிறேன். ஐயாவும் படிக்கிறாரு. நான் பசிபோக ஏதாவது வழியிருக்கான்னு படிக்கிறேன்; ஐயா, பசியெடுக்க ஏதாவது மருந்து இருக்கான்னு பார்க்கச் சொல்றாரு. நல்ல உலகமையா இது!

[தலையிலடித்துக் கொள்கிறான்.]

செ : (மீண்டும் வெளியே வந்து) கணக்கப்பிள்ளை, இன்னொரு சங்கதி-இந்த மாதிரி உடை உடுத்திக்கிட்டு என்னிடம் வேலை பார்க்கக்கூடாது தெரியுமா? என் அந்தஸ்தைக் காப்பாத்த மாட்டேங்கிறீரே?

க : என்னங்க? நான் வாங்குகிற சம்பளத்திலே, தினுசு தினுசா உடையுடுத்த முடியுங்களா? ஏதோ கிடைச்சதை உடுத்திக்கிட்டு வரவேண்டியது தானுங்களே!

செ : இனிமேல் கிடைச்சதை உடுத்திக்கிட்டு இங்கே வேலை செய்யவேண்டாம். நானே உமக்குத் துணி வாங்கித் தருகிறேன். இங்கே வந்த பிறகு அதைக் கட்டிக்கொள்ளும். வீட்டுக்குப் போகும்போது இங்கேயே அதை அவிழ்த்து வைத்துவிட்டு, உம் பழைய உடையை உடுத்திக்கிட்டுப் போம். தெரியுதா!

க : சரிதாங்க!

செ : சரி, புறப்படும். துணிக்கடைக்குப் போகலாம்.

காட்சி : 2

தெரு

[உறுப்பினர், பிச்சையெடுக்கும் சிறுவன், அவனது பெற்றோர், செல்வர், கணக்கர்.]

சிறுவன் : ஏதுக்கு நான் பிறந்தேன்?—உலகில்
ஏதுக்கு நான் பிறந்தேன்?
எங்கும் நிறைந்த ஈசன்
எந்தக் கருணையினால்
எதற்காக என்னைப் படைத்தான்?—ஈசன்
எதற்காக என்னைப் படைத்தான்? (ஏதுக்கு)

வாழ வேண்டாமா?—நாங்கள்
வாழ வேண்டாமா?—அதற்கொரு
வழியும் இல்லையா?
தாழவைத்து வாழ்பவரே
தயவும் இல்லையா?—ஐயா
தயவும் இல்லையா?

தந்தை : டேய் தம்பி, இந்த செல்வரிடம் கேள்; ஏதாவது கொடுப்பார்.

செல்வர் : என்னடாது! என்னா கேட்கிறது?

சிறுவன் : ஏழை ஜாதி செல்வர் ஜாதி
இரண்டு உண்டாமே?
இரந்து உண்ணும் ஜாதி யொன்று
இருக்க வேண்டுமா?—ஐயா
வாழ வேண்டாமா?—அதற்கொரு
வழியுமில்லையா?

செ : போ போ, தூரப்போ. சில்லறையில்லை. எங்காகிலும் போய் உழைத்துச் சாப்பிடு.

(கிளிக்கண்ணி)

சிறுவன் : உழைக்க இடமுமில்லை
உடம்பில் வலுவுமில்லை
பிழைக்க வழியில்லையே—செல்வரே
பெருந் துயரம் தீரலையே!

பிச்சைக் : ஐயா, புண்யவானே! குழந்தைகள் பசியால் துடிக்குதுங்க! ஒரு காலணாவாவது போடுங்க. இட்டிலி வாங்கிக் கொடுக்கணும் ஐயா!

செ : உங்க பிச்சைக்காரப் புத்தியைக் காண்பிச்சிட்டியே. சில்லறை யில்லைன்னா போகவேண்டியதுதானே? வேலையத்த பசங்க வீம்பு பிடிக்கிறானுங்க.

சிறுவன் : ஐயா! நாங்கள் எங்கே போவது? திரும்பத் திரும்பப் பணக்காரங்க கிட்டத்தானே போக வேண்டியிருக்கிறது. உங்களைப் போன்ற பணக்காரர் கள்தான், எங்களைப் பயன்படுத்திக் கொள்ளணு முங்க.

செ : சரியாப் போச்சு! பயன்படுத்தணுமாம். உங்களை என்னடா பயன்படுத்தறது? என்னடா உளறுரே? சோம்பேறிப் பயலே!

சிறுவன் : கோவிச்சுக்காதீங்க, ஐயா. எங்களைப்போல ஏழைகளுக்குக் கொடுத்தால் உங்கள் செல்வம் குறைஞ்சு போயிடாதுங்க. உங்களுக்குப் புகழ் உண்டாகுமுங்க. தங்களைப்போல் பணக்காரங்க வாழும் நாட்டில், எங்களைப்போல் பிச்சைக்காரங்க வாழ்வது அவமானச் சின்னமில்லிங்களா? ஐயா! நீங்கள் எல்லோரும் மனம் வைச்சா, இந்த இழி தொழிலை விட்டு, நாங்களும் மனிதராக வாழ முடியுமல்லவா? இல்லேன்னா, இவ்வளவு செல்வ மிருந்தும் தங்களுக்கு என்ன பயன்? தங்களால் எங்களுக்குத்தான் என்ன பயன். நம் இருசாராரா லும் நாட்டிற்குத்தான் என்ன பயன்?

செ : ஓஹோ! பயல் பிரசங்கமே பண்ண ஆரம்பிச்சுட்டானே! கணக்கப்பிள்ளை, பையன் பேச்சைப் பார்த்தீரா? இந்தப் பயலுக பிச்சைக்காரப் பயலுக மட்டுமல்ல; மோசக்காரப் பயலுக. அங்கம் குறைஞ்சவங்க மாதிரிப் பாசாங்கு பண்ணுவானுங்க. இவங்களை நம்பவே கூடாது.

சிறுவன் : ஆம், ஐயா! அப்படிச் செய்பவர்களும் இருக்கத்தான் செய்யறாங்க. பணக்காரங்க எல்லாம் நேர்மையாக நடக்கறாங்களா? பாவம்! பிச்சைக்காரங்க என்ன பண்ணுவாங்க! ஆனா, என்னைப்பற்றித் தவறாக நினைக்காதீங்க. உண்மையிலேயே எனக்குக் கால் ஊனம் தானுங்க.

செ : இந்தப் பயல் உன் மகனா? ஏது, ரொம்பத் துடுக்குக்காரன் போலிருக்கே?

பிச் : சாமி! அவன் அறியாச் சிறுவனுங்க. இளங்கன்று பயமறியாது என்பதுபோல், ஏதோ வயிற்றுப் பசியின் வாதையால் அப்படிப் பேசுறானுங்க. அரையணாக் கொடுங்க சாமி. குழந்தை துடிக்குது.

செ : ஓஹோ! சரிதான். காலணாக் கேட்டது போய் இப்போ அரையணாக் கேட்க ஆரம்பிச்சிட்டியோ? எது பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தால் பேரம் வளர்ந்து கொண்டே போகும் போலிருக்கிறதே. சரி சரி. காசு இருந்தாக் கொடுக்கமாட்டேனா? போ, போ, வேறே எங்கேயாவது போய்க் கேளு. (கணக்குப்பிள்ளையை நோக்கி) கணக்குப்பிள்ளை, சகுனம் சரியாயில்லை. இன்னொரு நாளைக்குப் போய்த் துணி வாங்கிக் கொள்ளலாம். இப்போது வீட்டுக்குத் திரும்ப வேண்டியதுதான். சனியன்கள் மாதிரிக் குறுக்கே வந்து நேரத்தை வீணாக்கிப் போட்டாங்க. திரும்பு.

காட்சி : 3

செல்வர் வீடு

[செல்வரின் மகள், தமிழ் ஆசிரியர், செல்வர், கணக்குப் பிள்ளை. தமிழாசிரியர் செல்வரின் மகள் காமாட்சிக்குப் பாடம் கற்பிக்கிறார்.]

ஆசிரியர் : அம்மா காமாட்சி! இன்று ஒரு புறநானூற்றுப் பாடலைப் படிப்போம். எங்கே, இந்தப் பாடலைப் படி.

காமாட்சி : "ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று."

ஆசி : போதும், கொஞ்சம் நிறுத்திக்கொள். இந்தப் பாடலின் ஆரம்பத்தில் எது இழிவு என்பதுபற்றி கவிஞர் சொல்கிறார். பாட்டின் கருத்தை விளக்கு முன் உன் கருத்தைச் சொல் பார்க்கலாம். எது இழிவு? உன் மனத்திற் பட்டதைக் கூசாமற் சொல்.

காமா : எப்படி ஐயா திட்டமாகச் சொல்வது? ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு காரியம் இழிவாகத் தெரியும். உலகம் முழுவதிலும் தங்கள் கொடி பறக்காவிட்டால் அது இழிவு என்று ஒரு தேசத்தவர் நினைக்கின்றனர். மற்றொரு தேசத்தவர் தங்களுக்கென ஓர் ஆட்சி இல்லாதது இழிவு என்கின்றனர். அப்புறம்...

ஆசி : போதும் போதும். ஒரு சாதாரண விஷயத்தைப் பற்றி வேடிக்கையாகக் கேட்டால், நீ உலக விவகாரங்களையெல்லாம் இழுத்துவிட்டாயே! இந்தக் காலத்து மாணவ மாணவிகளுக்குத் தங்கள் பாடத்தைவிட அரசியல் விஷயம் நன்றாகப் புரிகிறது.

காமா : என்ன ஐயா! நீங்கள் என் கருத்தைக் கேட்டீர்கள், எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். புறநானூற்றுக் கவிஞர் என்ன சொல்லுகிறார் என்பதை நீங்கள்தான் கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்களேன்.

ஆசி : ஈயென இரத்தல் இழிந்தன்று...அதாவது, 'அம்மா! தாயே பிச்சை போடு' என்று யாசிப்பது இருக்கிறதே, அது இழிவானது என்கிறார் கவிஞர்.

காமா : இதை இரத்தினச் சுருக்கமாய் 'ஏற்பது இகழ்ச்சி' என்று ஔவைப்பாட்டி மிக அழகாகச் சொல்லியிருக்கிறாளே!

[இதைக் கேட்டுக்கொண்டிருந்த செல்வர்]

செல்வர் : கணக்குப்பிள்ளை கவனிச்சீரா! பிச்சை யெடுப்பது இழிவுன்னு பெரியவங்களெல்லாம் சொல்லியிருக்காங்க. யார் சொல்லியிருக்காங்கன்னு தெரியுமா கணக்குப்பிள்ளை!

கணக்குப்பிள்ளை : தெரியாதுங்களே.

செ : வாத்தியாரையா? யாரு சொல்லியிருக்காங்க?

ஆசி : புறநானூறு சொல்லுதுங்க.

செ : புறநானூறு. ஆகா இதுக்காகத்தானய்யா பழைய நூல்களைப் போற்றிப் படிக்கணும்னு சொல்றது. இதை இங்கே வருகிற பிச்சைக்காரங்களுக்கெல்லாம் சொல்லியனுப்பும் கணக்குப்பிள்ளை! இதை இங்கே வாசலிலும் எழுதிக் கட்டும்! தெரிகிறதா!

கண : சரி தாங்க!

[பாடம் தொடர்ந்து நடக்கிறது.]

ஆசி : பிச்சை எடுப்பது இழிவுதான். அதனினும் இழிவான செயல் என்று ஒன்று இருக்கிறதாம். அதையும் கவிஞர் சொல்கிறார்.

[அடுத்த அறையில் செல்வரும் கணக்குப்பிள்ளையும் கூர்ந்து கேட்கின்றனர்.]

காமா : அது என்ன ஐயா?

ஆசி : "ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று."

தெரிகிறதா? மானங்கெட்டுப் பல்லைக்காட்டி, இழிவையும் கருதாமல் பிச்சையெடுப்பவர்களை நோக்கி, "இல்லை; போ" என்று கையை விரித்து அனுப்புவது இருக்கிறதே, அது பிச்சையெடுப்பதை விட மிகவும் இழிவானது என்கிறார் இப் பாடலாசிரியர்.

காமா : கருத்து ரொம்ப நல்லாயிருக்கு ஐயா? "ஈயேன் என்றல் அதனினும் இழிந்ததன்று," ரொம்ப சரி.

[செல்வருக்கு இச்சொற்கள் சுருக்கென்று தைக்கின்றன.]

செ : கணக்குப்பிள்ளை! இந்தப் பாடத்தையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தால், மூளை குழம்பிப் போகும். பேசாமே எழுந்து போய் வேறே வேலையிருந்தால் கவனியும்.

[வாசலில் "அம்மா! தாயே! பிச்சை போடுங்க அம்மா!" என்ற குரல் கேட்கிறது.]

செ : பொழுது விடிஞ்சா இதே தொல்லைதான். போ போ, போ.

[பக்கத்து அறையில்]

காமா : ஐயா! கொஞ்சம் பொறுங்கள், பிச்சைக் காரனுக்கு ஒரு பிடி அரிசி போட்டு வருகிறேன்.

கண : (தனக்குள்) கவிதை காமாட்சியம்மாவின் கண்ணைத் திறந்து விட்டிருக்காப்போலிருக்கு. இந்தத் தயாளகுணம் நீடூழி வாழணும்! அவ்வளவு தான் என் ஆசை.

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று."

சிறப்பு

திருக்குறள்

காட்சி : 1

காடு

[*உறுப்பினர்: வேட்டுவக் குடியான வேடர் தலைவன் காடன், நாகன் முதலியோர். வேடர்கள் கூத்து நடைபெறுகிறது.*]

வேங்கை புலி, வெங்கரடி வேட்டையாடுவோம்—நாங்கள்
வேலெடுத்துப் போர்புரிந்து வெற்றி காணுவோம்
அலறிவரும் சிங்கத்தையும் அடித்து வீழ்த்துவோம்
வில்லால் அடித்து வீழ்த்துவோம்—அதன்
பிடரிமயிர் பிடித்துலுக்கிப் புரட்டித் தள்ளுவோம்
நாங்கள் புரட்டித் தள்ளுவோம் — அதன்
குடல் கலங்கி உடல் பதறக் குத்தி வீழ்த்துவோம்!
கையால் குத்தி வீழ்த்துவோம்
கண்ணிற்பட்ட பறவையெல்லாம் மண்ணில் விழச்செய்வோம்
நாங்கள் மண்ணில் விழச்செய்வோம்
விண்ணில் தைக்கும் குறியை வைத்து வில்வித்தைக் கற்போம்
நாங்கள் வில்வித்தை கற்போம்.

நாகன் : *அதோ, தலைவர் வருகிறார். அமைதியாக இருங்கள்.*

காடன் : *நாகரே! நம் தலைவர் எதற்காக இவ்வளவு அவசரமாக வருகிறார்?*

நாக : *காலையில் சொல்லியிருந்தார், நம் எல்லோரையும் சந்திக்க வேண்டுமென்று. வந்துவிட்டார்... வேடர் தலைவர் வாழ்க!*

அனைவரும் : வாழ்க!

வேடர் தலைவர் : வேடர் குலத்தின் வீரர்களே! கோலாகலத்தில் மூழ்கிக் கூத்தாடும் உங்களைக் காணும் போதும் என் உள்ளமும் ஆனந்தக் கூத்தாடுகிறது. எனினும், வாய்விட்டு மனதாரச் சிரித்து மகிழக் கூடச் சக்தியில்லாமல் தளர்ச்சியடைந்துவிட்டேன். வயது முதிர்ந்த எனக்கு, அயராது வேலை செய்யும் ஆற்றல் குன்றிவிட்டது. இனிமேல் உங்களில் ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதே சிறப்பாகும்.

காட : எங்களுக்குள்ளே தலைவரா? ஏன்? தங்களுக்குப் பின் எங்கள் தலைவராயிருக்க வீரம் செறிந்த இரு மக்களைத் தந்திருக்கிறீர்களே? வழக்கப்படி, அவர்களில் ஒருவரே தலைவராக வரவேண்டும்.

தலைவன் . காடரே! வழக்கத்தை நான் மறந்துவிடவில்லை. என்றாலும், வனவிலங்குகளிடையே கலந்து உறவாடி வீர வாழ்க்கை நடத்தும் நமது குலத்தினருக்குக் கோழையொருவன் வழக்கம் என்ற பெயரால் தலைவனாக வந்துவிடக்கூடாது என்பதே என் எண்ணம்.

நாக : தலைவரே! தாங்கள் கூறுவதைப் பார்த்தால், தங்கள் வீரப் புதல்வர்களைக் கோழைகள் என்றல்லவா கருதியிருப்பதாகத் தோன்றுகிறது! அப்படித் தங்கள் திருவுள்ளம் நினைத்திருந்தால், அது தவறு என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறோம். தங்களுக்குப்பின், எங்களுக்குத் தலைவராய் இருக்கும் ஆற்றல் தங்கள் மைந்தர் இருவரிடமும் உள்ளது.

தலை : உங்கள் அனைவருடைய எண்ணமும் அதுவானால், அப்படியே ஆகட்டும். என் மக்கள் இரு

வரில் தலைமைக்குத் தகுதியுடையவன் எவன்? தெரிந்து கொண்டீர்களா?

காட : இருவரும் தகுதியுடையவர்கள்தான். ஆனால் வழக்கப்படி மூத்தவரே தலைமையை ஏற்கவேண்டும்.

தலை : அது கூடாது. இருவரில் வீரன் எவனோ, அவனே தலைவனாக வேண்டும்.

காட : அதைப்பற்றி எங்களுக்கு இப்போது என்ன கவலை!

நாக : தலைமைக்குத் தகுதியுடையவரை, இப்போதே நமது தலைவர் முன்னே தேர்ந்தெடுத்துவிடலாமே?

எல்லோரும் : ஆம் ஆம். அப்படியே செய்யலாம்.

தலை : எவ்வாறு தேர்ந்தெடுப்பது?

நாக : நமது பரம்பரை வழக்கப்படி, அவர்கள் இருவரையும் இன்றே வேட்டைக்கனுப்புவோம். வெற்றியோடு வரும் வீரனுக்கே பட்டயம் கட்டுவோம்.

தலை : சரி, அப்படியே செய்வோம். பொன்னப்பனையும் சின்னப்பனையும் அழைத்து வாருங்கள்.

காட : இதோ அவர்களே வந்துவிட்டார்கள்.

[பொன்னப்பன் சின்னப்பன் வந்து வணங்குகின்றனர்]

இரு : அப்பா வணக்கம்.

தலை : மக்களே! உங்கள் வீரத்தின் உச்சநிலையைக் கண்டறிய, எங்களுக்கு இப்போது ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எங்கே பார்க்கலாம்: நீங்கள் இருவரும் உங்களுக்குப் பிடித்தமான கருவிகளை இப்போதே எடுத்துக் கொண்டு, தனித்தனியே சென்று வேட்டையாடி, வெற்றியோடு வந்து சேர வேண்டும். தெரியுமா?

இரு : அப்படியே ஆகட்டும் அப்பா! போய் வருகிறோம்.

காட்சி : 2

பொன்னப்பன் குடிசை

பொன்னப்பன் : வள்ளி! வள்ளி! என் அம்பு எங்கே?

வள்ளி : அம்பு ஏன்? போரிடப் போகிறீர்களா?

பொ : இல்லை கண்ணே! எனது வீர வேட்டையைப் பரீட்சை செய்ய விரும்புகிறார் என் தந்தை!

வள்ளி : வேடன் மகன் வேடனுக்கு வேட்டைப் பரீட்சையா?

பொ : இதில் என்னோடு போட்டியிடுபவன் தம்பி.

வள்ளி : இருவரில் யார் திறமைசாலி என்பதை அறிவதற்கா?

பொ : மைந்தர்களின் திறமையை அறிய வேண்டியது தந்தையின் கடமைதானே?

வள்ளி : தாங்கள்தான் இதில் வெற்றி பெறுவீர்கள் என்று நினைக்கிறேன். தாங்கள் குறிவைத்த எதுவும் தப்புவதில்லையே? இதோ ஈட்டி.

பொ : ஈட்டி! ஈட்டி எதற்கு? வேண்டாம். எனக்குக் கைத்திறனைவிட வில்திறன்தான் அதிகம். ஒரே அம்பில் ஒரு பிராணியைக் கொன்று, கொண்டு போய்ச் சேர்க்கிறேன் தந்தையிடம்.

வள்ளி : அப்படியானால், வில்லும் அம்பும் கொண்டு வருகிறேன்.

பொ : ஆம்; கூர்மையான அம்பில் ஒன்றே ஒன்று போதும்.

வள்ளி : வெற்றிச் செய்தியை விரைவினில் வந்து தெரிவியுங்கள்..

பொ : ஆஹா! ஓடோடியும் வருவேன்.

வள்ளி : அதோ பாருங்கள்.

பொ : என்ன?

வள்ளி : தங்கள் தம்பி சின்னப்பன், தெற்கு மலைக் காட்டை நோக்கித் தனியாக ஓடுகிறார்.

பொ : களைத்துப் போய்த் திரும்புவான். ஓடுகிற வன விலங்குகளை ஒரே அம்பால் வீழ்த்த முடியுமா அவனால்?

வள்ளி கையில் வில்லும் அம்பும் இல்லையே. வேலை எடுத்துக் கொண்டல்லவா ஓடுகிறார்?

பொ : வேலை எடுத்துக்கொண்டா ஓடுகிறான்? எந்த விலங்கைக் குத்தப் போகிறான்? வீணாக அலைந்து திரும்புவான் பார்.

வள்ளி : ஓடும் விலங்குகளை அம்பு கொண்டு எய்வது தான் எளிது. அப்படியிருக்க, வேல் எடுத்துப் போய்ப் பயனென்ன? பாவம்! வயதிலும் அனுபவத்திலும் அவர் உங்களுக்குச் சிறியவர்தானே! சென்று வரட்டும், தம் தோல்வியைத் தெரிய.

பொ : ஆம்; நான் இரண்டே வினாடியில் எனது வெற்றி வேட்டையை முடித்துத் திரும்புகிறேன்.

[போகிறான்.]

காட்சி : 3

காடு

[காட்டிலே குருவியின் சப்தமும் யானையின் அலறல் ஒலியும்]

ஒருவன் : ஏய், தம்பி! எங்கே ஓடுகிறாய்?

சின்னப்பன் : யாரது?

ஒரு : நான்தானப்பா மரத்தின் மேலே இருக்கிறேன். ஓடிவந்து இதிலேயே ஏறிக்கொள்...

சின் : ஏன்?

ஒரு : இப்பொழுதுதான் ஒரு யானை அடிபட்டுக் கதறிக் கொண்டு இந்தக் காட்டுக்குள் ஓடிவந்தது. அதன் கண்ணிற் பட்டால் உன்னைத் தொலைத்துவிடும்.

சின் : அதிருக்கட்டும். அந்த யானை எந்தப் பக்கம் போயிற்று?

ஒரு : அடே! எந்தப் பக்கம் போனால் என்ன? முதலில் மரத்தின்மீது ஏறு. கொஞ்சம் பொறுத்திருந்து அப்புறம் செல்.

சின் : நான் அந்த யானையைக் காணவேண்டும்.

ஒரு : காணவேண்டுமா?

சின் : ஆம். நான் அதை வேட்டையாட வந்தேன்.

ஒரு : என்னப்பா! வேடிக்கையாக இருக்கிறதே, நீ சொல்வது? யானை வேட்டைக்குத் தனியாகவா வந்தாய்? கையில் ஒன்றுமில்லையே?

சின் : கையிலிருந்த வேலை அதன்மீது வீசினேன். அதனோடு ஓடிவிட்டது யானை.

ஒரு : என்ன! நீ எறிந்த வேலா அதன் துதிக்கையில் பாய்ந்திருப்பது?

சின் : ஆம்; வயிற்றில் பாய்ந்திருந்தால் யானை அங்கேயே விழ்ந்திருக்கும். குறி சிறிது தவறி, துதிக்கையில் பாய்ந்துவிட்டது. இப்போதும் என்ன? எளிதாகச் சென்று வேலைப் பிடுங்கி மறுமுறையும் குத்தினால் யானை வீழ்ந்துவிடும்.

ஒரு : தம்பி! இனி அது முடியாது. புண்பட்ட யானை புலிபோலச் சீற்றம் கொள்ளும். ஓரிடத்திலும் தங்காமல் ஓடிக்கொண்டேயிருக்கும். அதைத் தேடி அலைவது வீண் வேலை.

சின் : உங்களோடு இவ்வளவு நேரம் பேசியதுதான் வீண் வேலை. நான் வந்த வேகத்தில் ஓடியிருந்தால் அந்த யானையை இதற்குள் பார்த்திருப்பேன். இந்த நேரத்திற்குள் அது எங்குச் சென்றதோ தெரியவில்லை!

ஒரு : நான்கு காதம் சென்றாலும் அதைக் காண்பது அரிது. ஒரு வேளை, திரும்பவும் வழிதவறி இந்தப் பக்கம் வந்தாலும் வரக்கூடும். தேடிப்போ. ஆனால் உன் உயிருக்கு அபாயம் உண்டு. அதில் எச்சரிக்கையாயிரு.

சின் : உங்கள் ஆலோசனைக்கு நன்றி. உயிர் தமிழல்ல. இதுவரை யானையின் காலடியைப் பின்பற்றி இங்கு வந்து சேர்ந்தேன். இக்காட்டில் யானையின் காலடி பதியவில்லை. இங்கிருந்து யானை எந்தப் பக்கம் போயிற்று என்பதைமட்டும் சொல்லுங்கள். உதவியாக இருக்கும்.

ஒரு : சரியப்பா சரி! அதோ அந்தத் தேக்குத் தோப்புத் திடலின் பக்கம்தான் ஓடிற்று. போய்ப் பார்.

காட்சி : 4

குடிசை

[வேடர் தலைவன் முதலியோர்]

தலை : காடரே! இருவரில் யார் வெற்றி பெறுவர் என்பது உமது எண்ணம்?

கடா : முதல்வரே வெற்றி பெறுவார், இதிலென்ன தடை?

[பொன்னப்பன், முயலைப் பிடித்தவண்ணம் வந்து தந்தையை வணங்குகிறான்.]

பொ : அப்பா! இதோ இந்த முயல் என்னை ஏமாற்றி விட்டு ஓட எவ்வளவோ முயற்சித்தது. ஓரே அம்பில் வீழ்த்தினேன். பொன்னப்பன் குறிக்குத் தப்ப முடியுமா என்ன?

தலை : (மகிழ்ச்சியோடு தலையைத் தடவிக் கொடுத்து) தம்பி சின்னப்பன் எங்கே?

பொ : நான் அவனைப் பார்க்கவே இல்லையே! இன்னும் வரவில்லையா?

[சின்னப்பன் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு வாடிய முகத்துடன் வருகிறான்.]

நாக : இளையவர் ஏன் இப்படி வாடிய முகத்துடன் வருகிறார்?

தலை : சின்னப்பா! என்ன செய்தி?

சின்ன : அப்பா? யானை வேட்டையாட எண்ணி யானைக் காட்டிற்குச் சென்றேன். வேட்டையும் கிடைத்தது. வேலையும் வீசினேன். குறி தவறிப் போய்விட்டது. யானையும் பிழைத்து ஓடிவிட்டது. நான் வேலையும் இழந்துவிட்டு, வெறுங்கையோடு வந்திருக்கிறேன். அப்பா மன்னிக்கவேண்டும். நான் தோல்வியடைந்து விட்டேன்.

எல் : த்சு...ஆஹா!

தலை : (தன் மகனை மார்போடு அணைத்து) மகனே! இதுவா தோல்வி? அல்ல அல்ல! யானை வேட்டைக்கா சென்றாய்? நீயே வீரன்! என் வாழ்நாளிலே நான் ஒரு நாளும் தனியே யானை வேட்டைக்குச் சென்றதில்லை. உன் பாட்டனும் தனித்துச் சென்றதில்லை. அவ்வளவு துணிவு எங்களுக்கு ஏற்பட்டதில்லை. செயற்கரிய செய்தாய் நீ! சிறிய செயலில் முனைந்து வெற்றி பெறுவதைவிட, பெரிய செயலில் முனைந்து தோல்வியடைவது சிறப்பு. வேட்டை என்றதும் உள்ளத்தில் உயர்வை எண்ணினாய்; பெரிதை ஒண்ணினாய்; முயற்சி செய்தாய். தோல்வியடைந்தாய் என்றாலும், நீயே சிறந்தவன்; நீயே வீரன்!

காட : சின்னப்பன் வீரன் மட்டுமல்ல, தலைவரே! வீரர்களின் தலைவன்!

எல் : தலைவர் சின்னப்பன் வாழ்க!

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது.

கற்பு

சிலப்பதிகாரம்

காட்சி : 1

ஆய்ச்சியர் குரவை

[மதுரை நகரில் இடைக்குல மகளிர் பலர் கண்ணகி காணும்படி குரவை பாடி ஆடிக் கொண்டிருக்கின்றனர்.]

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம்மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி!
பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்கு நம்மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி!
கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லை நம்மானுள் வருமேல் அவன் வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி!

உள்வரி வாழ்த்து

(பாண்டியன்)

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்.

(சோழன்)

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன் [டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையான் என்பரால்.

(சேரன்)

முந்நீரின் உள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோன் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோன் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில் தோளோச்சிக் கடல்நடைந்தான் என்பரால்.

(படர்க்கைப் பரவல்)

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுங் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!

[மாதரி மகள் ஓடிவருகிறாள்.]

மாதரி : (பதறி) என்ன மகளே! ஏனிந்த அலங்கோலம்?

ஐயை : இது என்ன, இங்கு கூத்தா? இன்னும் செய்தி அறியீரா?

எல் : என்ன செய்தி? என்ன செய்தி? உடனே கூறு.

ஐயை : என்னால் சொல்ல முடியவில்லை. என் நாவும் எழவில்லை? பாவம் கண்ணகி...

கண்ணகி : தோழி! நான் என்ன செய்தேன்? அல்லது எனக்கு என்ன நேர்ந்தது? எவர் என்ன சொன்னார்? விரைவில் சொல்லு.

ஐயை : நான் என்ன சொல்ல? (அழுகிறாள்).

கண்ணகி : தோழி! என் நெஞ்சம் உலதுலை தோற்கும் படி அனல் கக்கி உயிர்க்கிறது. நண்பகலிலிருந்தே என் நெஞ்ச நடுங்கிக் கொண்டிருக்கிறது. விரைவில் வருவதாகச் சொல்லிச் சென்ற என் கணவன் இன்னும் வரவில்லை. ஏதோ வஞ்சம் நடந்திருக்க வேண்டும் என்றே எண்ணுகிறேன். ஒன்றும் விளங்க வில்லையே! அம்மா! என்ன நடந்தது? சொல்லுங்கள்.

ஐயை : நான் வைகைக்கு நீராடப் போயிருந்தேன். அங்கு, அரசியின் காற்சிலம்பைத் திருடியவன் கோவலனே எனக் கருதி, அவரைக் கொலை செய்து விட்டதாகக் கேள்விப்பட்டேன்.

கண்ணகி : தெய்வமே! இது உண்மையா?

[நிலத்தில் விழுகிறாள்.]

பலரும் : ஐயோ, பாவம்!

கண்ணகி : ஐயோ! நான் என்ன செய்வேன்? நாதா! உமக்கா இக்கதி? இனி என் கதி? என்னைத் தனித்து விட்டு எங்குச் சென்றீர்? இனி நான் எப்போது காண்பேன்? 'பாடுபட்டுப் பிழைக்கலாம்' எனக் கூறி, நாடுவிட்டு நாடு அழைத்து வந்ததெல்லாம் கூடு விட்டுப் போகத்தானா? அன்பரே, இனி யான் என்ன செய்வேன்?

[அழுகிறாள்; அமைதி.]

(பொங்கி எழுந்து) ஆம்; இனி நான் என்ன செய்வேன்? கணவனோடு தீயிடை மூழ்கி வெந்து அழிவேனா? அல்லது கைம்மை நோற்றுப் பல துறைகளிலும் நீராடி அலைந்து திரிந்து அழுது ஒழிவேனா? மன்னவன் நெறி இழந்தான்; அன்பனை நான் இழந்தேன்; உள்ளம் கொதிக்கிறது; உயிர் துடிக்கிறது... (உறுதியோடும்) அறக் கடவுள்! (இம்) அறக்கடவுள் எனப்படும் அறிவற்றவனே! பாவத்தைப் பின்பற்றிச் செல்லும் பாண்டியன் தவறு செய்தலால் யான் அழுதழுது ஒழிய வேண்டுமா? இல்லை; ஒருபோதுமில்லை! நெறிக்கு நெறி! பழிக்குப் பழி'...குரவைக் கூத்தினுள் வந்து திரண்ட இடைக்குல மகளிரே! எல்லோரும் கேளுங்கள். ஆயர் மகளிரே! அனைவரும் கேளுங்கள். இவ்வுலகுக்கு ஒளிவீசும் கதிரவன் அனைத்தையும் அறிந்திருப்பான், கேளுங்கள்.

''காய் கதிர்ச் செல்வனே! நீஅறிய
என் கணவன் கள்வனோ? சொல்.''

ஒரு குரல் : ''மாதே! நின் கணவன் கள்வனல்லன். அவனைக் கள்வனென்ற இவ்வூரைத் தீ உண்ணும்.''

கண்ணகி : கேளுங்கள்; நன்றாகக் கேளுங்கள். நீதிமுறை பிறழ்ந்த பாண்டிய நாட்டில் வாழும் பத்தினிப் பெண்டிரே, கேளுங்கள். என் கணவன் கள்வனல்லன். இதோ இச்சிலம்பு அச்சிலம்பின் இணை. சிலம் பொன்றை விற்று இன்புற்று வாழ எண்ணிய எங் காதலர் அவ்வழியிலேயே துன்புற்று மாள நேர்ந்தது. இவ்வுலகில் எவரும் பெறாத துயரத்தை இன்று நான் பெற்றுவிட்டேன். விலை கொடாமல் சிலம்பைக் கைப்பற்ற எண்ணியே எங்காதலர்க்குக் கள்வன் என்ற பெயரையுமிட்டுக் கொன்றிருக்க வேண்டும். இதோ செல்லுகிறேன். என் காதற் கணவனைக் காண்பேன். கண்டு, அவன் வாயில் தீதற்ற நல்லுரையைக் கேட்பேன், அவ்வாறு கேளேனாயின், நீங்கள் என்னை இகழுங்கள்.

[எனக் கூறிக் கண்ணகி விரைந்து செல்கிறாள்.
பலர் தொடர்ந்து செல்லுகிறார்கள்.]

காட்சி : 2

வீதி

[மதுரை வீதி, மக்கள் கூட்டம்]

பெண்_1 : ஐயோ! அம்மா! என்ன அலங்கோலமாய் ஓடுகிறாள்?

பெண்_2 : பாவம்! இப்பெண்ணுக்கா நேர்ந்தது இக் கொடுமை? பிழைக்கவந்த நாட்டில் சாவு! யாரால் சகிக்க முடியும்?

பெண் - 3 : அயல் நாட்டிலிருந்து இந்நாட்டிற்கு வந்த பெண்ணுக்கு இன்று நாம் விளைத்த துன்பம் எவரா லும் களைய முடியாதது.

பெண் - 1 : அம்மம்மா! ஆம்; ஆம்! களையாத துன்பத் தைக் கண்ணகிக்குக் காட்டி, வளையாத செங்கோல் வளைந்தது இந்நாட்டில்! என்ன செய்வது?

பெண் - 2 : செம்பொன்னாற் செய்த சிலம்பொன்றைக் கையேந்தி நம்மைக் கெடுப்பதற்கு ஒரு புதுத் தெய் வம் வந்திருப்பதுபோலத் தோன்றுகிறது. நம் நாட்டிற்கு இதனால் என்னென்ன கேடு விளையு மோ? யாரறிவார்?

காட்சி : 3

கொலைக்களம்

கண்ணகி : எது? எந்தவிடம்?

சிலர் : அதோ அந்த மரத்தடியில்தான், தாயே!

கண்ணகி : எங்கே? எங்கே? அந்தோ! கொடுமை கொடுமை! ஆ... நாதா! இதுவரை உமது துன்பத் தைக் கண்டு கொண்டிருந்த சூரியன், இனி என் துன்பத்தைக் காண விரும்பாமல்தான் மலையேறிச் சென்றுவிட்டானா! உமது முகஒளியைச் சரியாகக் கூடக் காண முடியவில்லையே! உம்மைத் தழுவும் பேறு எனக்கு இன்றுதான் கிடைத்ததோ! காலையில் உமது அன்பொழுகும் பேச்சினைக் கேட்டு மகிழ்ந் தேன்... மாலையில் குருதி ஒழுகும் உடலைத் தழுவி அழுகிறேன்! பாவி! நான் பெற்ற பேறு இதுதானா? நாதா! மலர் மாலையிற் புரண்ட மார்பகம் மண்ணிற் புரள்வதா? கண்ணீருகுத்து நிற்கும் என் கண் முன்னே நீர் புண்ணீருகுத்துப் புழுதியிற் கிடப்பதா? பேசுங்கள் நாதா! நமக்கு ஏன் இக் கதி? என் துயரத்

தைக் கண்டு மௌனம் எதற்கு? பேசுங்கள் நாதா! பேசமாட்டீர்களா? உங்களைப் போலவே இவ்வூரும் வாய்மூடிக் கிடக்கிறதே! "பழி தூற்றும் வகையில் பாண்டியன் தவறு செய்தான்; அவனால் வந்த வினை இது" என்று ஊராரும் எவரும் சொல்லார் களா?

இவ்வூரில் பத்தினிப் பெண்டிர் உண்டா? இல்லையா?
சான்றோர்கள் உண்டா? இல்லையா?
தெய்வமும் உண்டா? இல்லையா?

[ஒரு மணி ஒலி]

கோவ : கண்ணகி! உன் மலர்முகம் வாடியிருக்கிறதே! வருந்தாமல் இரு.

கண்ணகி : என்ன இது? இது சொல்லத்தான் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்ததா? அல்லது மாயமமோ! கனவோ! அல்லது என் உள்ளத்தே தோன்றிய மயக்கமோ! ஒன்றும் விளங்கவில்லையே!... இனி எங்குச் சென்று என் கணவனைத் தேடுவேன்...? ஆ நாதா! இல்லை. இது மெய்யுரையன்று. என் காய் சினம் தணிந்தாலன்றிக் கணவனைக் கைகூடேன்...என் சினம் தணிவதற்குரிய ஒரே வழி, கொடுமை விளை வித்த பாண்டியனைக் கண்டு, குற்றம் விளைவித்த தற்குக் காரணம் கேட்பதே! ஆம்; இப்போதே செல்லு கிறேன், பாண்டிய மன்னனின் பாழ் மனைக்கு.

காட்சி : 4

பாண்டியன் அரண்மனை

கண்ணகி: (வாயில் காப்போனை நோக்கி) வாயில் காப் போனே! வாயில் காப்போனே! முறைபிறழ்ந்த மன்னனது நெறிபிறழ்ந்த அரண்மனையின் வாயிலைக் காப்போனே! கேள்; நீதி இழந்த

மன்னனிடம் கணவனிழந்த பெண் ஒருத்தி, கையிற் சிலம்பேந்தி, காண வந்திருப்பதாகக் கூறு.

வாயி : அப்படியே ஆகட்டும் தாயே! இதோ சொல்லு கிறேன்...வாழ்க! மன்னர் மன்னவா, வாழ்க! கோட்டை வாயிலின் கீழ்ப்புறத்தில் கொற்றவை போன்ற பெண் ஒருத்தி, கையிற் சிலம்பொன்றை ஏந்திக் கடுஞ்சினத்துடன் காத்திருக்கிறாள். அரச ரைக் காணவேண்டுமாம்.

நெடு : அப்படியானால், உடனே வரச்சொல்.

கோப் : நாதா! யாரை வரச்சொல்லுகிறீர்? இரவிற் கண்ட தீக்கனா இன்னும் என் உள்ளத்தை வருத்திக் கொண்டிருக்கிறது. என்ன நேரிடுமோ தெரியவில்லை!

நெடு : கோப்பெருந்தேவி! குறையொன்றுமில்லை. வருந் தாதே. கவலையை ஒழித்திரு. (கண்ணகி வருகிறாள்) இரு கண்களிலும் நீரொழுக வந்து நிற்கும் இளங் கொடியே! நீ யார்? எந்த ஊர்?

கண்ணகி : தேரா மன்னா! செப்புகிறேன் கேள்: கன்றை இழந்த பசுவொன்று கதறிப் பதறி, குற்றம் அறிவிக்கும் மணியைக் கொம்பாலாட்டி அறிவித்து, கண்ணீருகுத்து நிற்கும் காட்சி தன்னுள்ளத்தை வருத்தியதால், தானே தன் மகனைத் தேர்க்காலி லிட்டுக் கொன்று, நீதியை நிலைநிறுத்திய சோழ மன்னன் வாழ்கின்ற காவிரிப்பூம்பட்டினமே எனது ஊர். அவ்வூர் வணிகப் பெருங்குடியில் மாசாத்து வானின் மகனாகப் பிறந்து, வாழ விரும்பி, ஊழ்வினை துரத்த நின் நகர் வந்து, என் காற் சிலம்பை விலைகூறித் திரிந்து, நின்னால் கொலை யுண்ட கோவலன் மனைவி நான்; என் பெயர் கண்ணகி.

நெடு : பெண்ணணங்கே! கள்வனைக் கொல்லுதல் கடுங்கோலல்லவே?

கண்ணகி : அறத்தின் நெறியறியா அரசே! என் கணவன் கள்வனல்லன். அவன் விற்க வந்த பொற்சிலம்பு, என் காற்சிலம்பு. அதனுள்ளே ஒலியிடுகின்ற பரல்கள் மாணிக்கங்கள்.

நெடு : கண்ணகி கூறியது மிக்க நல்லது. நமது சிலம்பு முத்துக்கள் நிறைந்தது. எங்கே அச்சிலம்பைக் கொண்டு வாருங்கள். (சேவகன் கொண்டு வருகிறான்) ஆம். இதுதான் கள்வனிடமிருந்து கைப்பற்றியது கண்ணகி! இதோ சிலம்பைப் பார்.

கண்ணகி : நான் பார்ப்பதென்ன? அரசே! இதோ உடைக்கிறேன். நீரே பாரும் அதனுள்ளிருக்கும் மாணிக்கங்களை.

[சிலம்பைத் தரையில் அடித்து உடைக்கிறாள்.]

கண்ணகி : கோல் கோடிய மன்னா! உன் கையிலிருப்பதும் ஒரு செங்கோலா? (கோல் சரிகிறது).

குற்றம் புரிந்த கொற்றவனே! உனக்கும் ஒரு சந்திர வட்டக் குடையா? (குடை முறிகிறது).

முறை தவறிய மன்னா! உன்னைத் தாங்கிக்கொண்டிருப்பதும் ஒரு அரச இருக்கையா? (அரச இருக்கை ஆடுகிறது).

நெடு : யானோ அரசன்? யானே கள்வன்! பழுதற்ற மன்னவர்களால் ஆளப்பெற்று வந்த பாண்டிநாட்டு ஆட்சி, இன்று என்னால் பிழைபட்டுப் போயிற்று! யான் இனி வாழேன்! கெடுக என் ஆயுள்! ஆ...

[என்று அலறி அரச இருக்கையிலிருந்து விழுகிறான்

கோப் ஐயோ! அரசே! ஆவி பிரிந்தீரா? என்னைவிட்டு விட்டா? கணவனை இழந்தோர்கள் காண்பதற்கு

என்ன உண்டு? யானும் பின் தொடர்வேன், நின் காலடியில் வீழ்ந்து...(விழுகிறாள்.)

கண்ணகி : (சினம் தணிந்து) பாண்டிமாதேவி! நின் காற்சிலம்பு களவுபோய், என் கணவனைக் கொன்று எனக்குத் துன்பம் விளைவித்தது; என் காற்சிலம்பு உடைந்துபோய் நின் கணவனைக் கொன்று உனக்குத் துன்பம் விளைவித்தது. ஆனாலும் ஒன்று; நின் கணவன் தவறிழைத்து உயிர் துறந்தான். என் கணவனோ தவறு செய்யாது உயிர் துறந்தான். நான் தீவினையுடையவள். ஒன்றும் அறியாதவள். என்மீது குற்றமொன்றுமில்லை. முற்பகலில் என் கணவனுக்குக் கேட்டை விளைவித்த நின் கணவன், பிற்பகலில் தானே அக்கேட்டுக்கு ஆளானான். இது உலக நெறி. இதற்காக நீ என்மீது வருந்தாதே!

பணிப்பெண்கள் : ஐயய்யோ! அரசியும் இறந்துவிட்டாள்.

கண்ணகி : ஆ! அரசியும் உயிர் பிரிந்தாளா? மன்னவன் உயிரைத் தன் உயிர்கொண்டு தேடுகிறாள் போலும்! ஆ; அவள் பத்தினிப் பெண்! இறந்தான் கணவன் என்றதும், இறந்தாள்! நான் ஏன் உயிர் வாழ்கிறேன்? என் வயிறு எரிகிறது; என் நெஞ்சம் எரிகிறதே! ஆம்; அரண்மனைப்பொருள்களெல்லாம் எரிகின்றனவே; இனி இங்கு எனக்கொரு வேலையுமில்லை. வெளியேற வேண்டியதே.

[நெருப்பு நெருப்பு என்று பணிப்பெண்களின் அலறல்]

கண்ணகி : (வெளியில் வந்து) உள்ளிலும் நெருப்பு! வெளியிலும் நெருப்பு! வீதியிலும் நெருப்பு! நகரிலும் நெருப்பு! நாட்டிலும் நெருப்பா? ஓ! தீமைகளைத் தீய்க்கும் தீயே! பசு, பத்தினிப் பெண்டிர், பாலர்,

பிணியாளர், அறவோர் அனைவரையும் தீண்டாதே! தீத்திறத்தார் பக்கமே சென்று தீப்தெரி. இதோ நான் கொற்றவை கோவிலில் பொன்வளை உடைப்பேன். மேற்கு நோக்கி நடந்து, மேலை மலை மீது ஏறி, இவ்வுடலைப் போக்கிக் கணவனை அடைவேன். அந்தோ! நான் கீழ்வாயிலில் கணவனொடு புகுந்தேன்! மேல்வாயிலில் தனித்துச் செல்கிறேன்!...

காட்சி : 5

குன்றக் குரவை

[உறுப்பு, மலைவாணர்கள்]

வள்ளி : செல்வி; ஒரு சேதி கேட்டியா?

செல்வி : வா வள்ளி. என்ன சேதி?

வள்ளி : அருவியில் நீராட எண்ணிச் செங்குன்றுக்குப் போனேன். குன்றுக்கு அடியில் வேங்கைமர நிழலில் பெருந்துயரோடு பெண்ணொருத்தி நின்றாள். பூ உதிரப்பெற்றுப் பெருமூச்சுவிட்டாள். யாரம்மா? என்றேன். அவள், "சோழ நாட்டில் தோன்றி, பாண்டி நாட்டைத் தீப்த்து, சேரநாடு சேர்ந்த தீவினையாட்டி" என்று கூறினாள். அவ்வளவுதான். ஒரு பெருமுழக்கம் முழக்கி, என் கண்ணெதிரே ஓடி, குன்றேறி மறைந்தாள். நான் பயந்தோடி வந்தேன்.

செல் : வள்ளி! பயப்படாதே! அது நம்மை வாழ்விக்க வந்த தெய்வம், நாம் குரவை பாடி அத்தெய்வத்தை வாழ்த்தியாக வேண்டும். எல்லோரையும் கூப்பிடு.

வள்ளி : செல்வி! இதோ நங்கை, நாத்தி, சிவப்பாயி, கண்ணாத்தா, பாவாயி எல்லோரும் வந்துவிட்டார்கள். குரவை பாடி ஆடலாமா?

செல் : ஆம்; எல்லோரும் கைகோத்துக் கொள்ளுங்கள்

உரையினி மாதராய் உண்கண் சிவப்பப்
புரைதீர் புனல்குடைந் தாடினோ மாயின்
உரவநீர் மாகொன்ற வேலேந்தி ஏத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி!

வேறு

இறைவளை நல்லாய் இதுநகை யாகின்றே
கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க
அறியாள்மற் றன்னை அலர்கடம்பன் என்றே
வெறியாடல் தான்விரும்பி வேலன்வரு கென்றாள்.

ஒருத்தி	பலர்
இறைவளை நல்லாய்!	இது நகையாகின்றே!
ஆய்வளை நல்லாய்!	இது நகையாகின்றே!
செறிவளை நல்லாய்!	இது நகையாகின்றே!

ஆயவளை நல்லாய் இதுநகையா கின்றே
மாமலை வெற்பன் நோய்தீர்க்க வரும் வேலன்
வருமாயின் வேலவன் மடவன் அவனிற்
குருகு பெயர்க் குன்றம் கொன்றான் மடவன்!
இறைவளை நல்லாய் இது நகையாகின்றே!
ஆய்வளை நல்லாய்! இது நகையாகின்றே!
செறிவளை நல்லாய்! இது நகையாகின்றே!

வேறு

பாடுகம் வா வாழி! தோழி யாம் பாடுகம்
பாடுகம் வா வாழி! தோழி யாம் பாடுகம்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுகம்
தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே.

[குரவை முடிவில் மலைவாணன் ஒருவன் ஓடிவந்து]

வேட்டு : வள்ளி! குரவையாடினது போதும். நமது சேரர் பெருமான், அரசி, அமைச்சர், இளங்கோ, ஆகியவர்களுடன் மலைவளங் காணப் பேராற்றங் கரைக்கு வந்து, மணற்குன்றில் தங்கியிருக்கிறார் களாம். வா. ஓடிப் போய்ப் பார்க்கலாம்.

வள்ளி : ஆம்; பாவாயி! எல்லோரும் வாருங்கள். நாம் கண்ட காட்சியையும் அரசர்க்கு அறிவிக்கலாம்.

காட்சி : 6

பேராற்றங்கரையில் உள்ள மணற்குன்று

[உறுப்பு, செங்குட்டுவன், வேண்மா, இளங்கோ, வில்லவன் கோதை முதலியோர்.]

அனைவரும் : வாழ்க மன்னவா! வாழ்க நின் கொற்றம்! வணக்கம்.

செங்குட்டுவன் : வருக, மலைவாணர்களே! அனைவரும் நலம்தானே? வேண்மா! மலைவளங் காண வந்த மாதரசியாகிய உனக்கு, அவ்விடத்திலேயே பல் வளமுங் காட்டப்படுகிறது; பார் இதோ மலை வாணர்கள் கொண்டுவந்து வைத்துள்ள யானைத் தந்தம், அகிற்கட்டை, மான்மயிர்க் கவரி, சந்தனக் கட்டை, சிந்தூரக் கட்டி, நீலக் கற்கள், அழகிய கஸ்தூரி, ஏலக்காய், மிளகுக்கொடி, கூவைக்கிழங்கு, தேமாங்கனி, பலாப்பழம், கரும்பு, தேன், வாழை, பூங்கொடி, புலிக்குட்டி, யானைக்குட்டி, மான்குட்டி, குரங்குக்குட்டி, மயில், கானக்கோழி, பசிசைக்கிளி, முதலியவைகளையும் பார்! அதனோடு விளையாடி மகிழ்.

செங் : மலைவாணரே! மழைக்குறை, வளக்குறை மக்கட் குறை ஏதேனும் உண்டா?

மலைவாணர் : இல்லை மன்னவா! தெய்வக் குறைதான் இருக்கும்போலத் தோன்றுகிறது. பாண்டி நாட்டி

லிருந்து ஒரு பெண் தெய்வம் இம்மலையேறி வந்து, வேங்கை மரத்து நீழலில் நின்று, அனல் கக்கும் மூச்சோடும் துயர்ப்பட்ட மனத்தோடும் பெருமுழக்கம் முழங்கி, அதோ அக்குன்றேறி மறைந்து போயிற்று! என்ன நடக்குமோ? அஞ்சுகிறோம்.

செங் : பாண்டி நாட்டுப் பெண்...துயர்ப்பட்ட மனம்... மலையேறி வந்து குன்றேறி மறைந்தாள்...இது என்ன? என்றும் கேளாத செய்தியாக இருக்கிறதே?

[சாத்தனார் வருகிறார்.]

சாத்தனார் : ஆம் அரசே! என்றுங் கேளாத செய்திதான். வணக்கம்.

செங் : வரவேண்டும், சாத்தனாரே வரவேண்டும். ஏது இவ்வளவு தொலைவில்?

சாத் : நான் இங்கு வந்தது இளங்கோவின் தமிழ்ப் புலமையில் திளைத்துச் சுவைப்பதற்கு. ஆனால், இப்போது மலைவாணர்கள் தங்களிடம் கூறிய செய்தி எனக்கு ஒரு புதிய வேலையையும் உண்டு பண்ணிவிட்டது.

செங் : என்ன அது?

சாத் : காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகி தன் கணவன் கோவலனுடன் மதுரைக்கு வந்தாள். மனைவியின் காற்சிலம்பை விற்றுவரக் கோவலன் கடைவீதிக்கு வந்தான். அரசியின் களவுபோன காற்சிலம்புதான் இது என அரசர்க்கு வஞ்சிப்பத்தனால் அறிவிக்கப் பெற்றது. பாண்டியன் நெடுஞ்செழியன், கோவலனுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். கோவலன் கொலையுண்டான்.

செங் : பாவம்! பிறகு?

சாத் : இதை அறிந்தாள் கண்ணகி. கதறித் துடித்துக் கணவனைக் கண்டாள். அவன் உடலில் உதிரம்

பெருகிற்று. அவள் உள்ளத்தில் வீரம் பெருகிற்று. பழி போக்க எண்ணினாள். சூளுரை புகன்றாள். அதன் இணைச்சிலம்புடன் அரண்மனை சென்றாள். அரசனைக் கண்டாள்.

செங் : என்ன துணிவு!

சாத் : பாண்டியன் நெடுஞ்செழியன் கண்ணகியைக் கண்டதுமே கலங்கினான். அவளுடைய உடம்பில் படிந்திருந்த புழுதியும், விரித்துக் கிடந்த கூந்தலும், கையில் இருந்த சிலம்பும், கண்ணில் வடிந்த நீரும், அவனை நடுங்கச் செய்தன. 'தேரா மன்னா!' என்றதும் திடுக்கிட்டான். சிலம்பு உடைபட்டது. மாணிக்கப் பரல்கள் வெளிவந்து மன்னன் தவறை உணர்த்தின. கோல் வளைந்து, குடைமுறிந்து, அரச இருக்கை ஆடிற்று. நீதி பிழைத்த மன்னன் உயிர் பிழைக்க மறுத்து உயிர் நீத்தான். கோப் பெருந்தேவியும் அவனடியில் வீழ்ந்து, தன்னுயிரால் அவனுயிரைத் தழுவி மறைந்தாள்.

செங் : என்ன கோரமான விளைவு!...பின்பு?

சாத் : கற்பரசி கண்ணகி வயிறு எரிந்தது; மன்னன் மனை எரிந்தது; மதுரை நகரம் எரிந்தது. வையைக் கரையோரமே மேற்கு நோக்கி நடந்து வந்தாள். இந் நாட்டிற்குத்தான் வந்திருக்க வேண்டும்.

செங் : என்ன பிழை! என்ன கொடுமை! என்ன அநீதி! 'பாண்டி நாட்டிலும் அறம் பிழைப்பட்டது' என்ற செய்தி என் உள்ளத்தைப் புண்படுத்திவிட்டது. என்றாலும், பழி போகுமுன்னே உயிர்போக்கி மாண்ட மன்னனது செயல் ஒன்றே எனக்கு இப் போது ஆறுதல் அளிக்கிறது. மதுரைக்கூலவாணிகன் சாத்தனார் கூறியதும், மலைவாணர் கூறியதும் ஒப்புநோக்கினால், வேட்டுவச் செல்வி கண்ட பெண்

கண்ணகித் தாய் என்றே தோன்றுகிறது. இறந்தான் மன்னன் என்றதும் இறந்த கோப்பெருந்தேவியும் ஒரு பத்தினிப் பெண்ணே! வேண்மா! மலைவளங் கண்டு மகிழ்ந்தாயா? அல்லது சாத்தனார் கூறியதைக் கேட்டாயா?

வேண்மா : முன்னதைக் கண்டு மகிழ்ந்த மனம்: பின்னதைக் கேட்டு வருந்தியது.

செங் : அப்படியா! சரி; கோப்பெருந்தேவி, கண்ணகி இவ்விருவரில் சிறந்த கற்பரசி யார்?

வேண்மா : இரண்டும் வெவ்வேறு துறைகள். கணவன் மறைந்ததும் மறைந்தாள் கோப்பெருந்தேவி. கணவன் பழிபோக்கி மறைந்தாள் கண்ணகி தேவி. இருவரும் கற்பரசிகளே என்றாலும், நமது நாட்டைத் தேடிவந்தடைந்த கற்புத் தெய்வத்திற்குக் கோவில் கட்டிவைத்து, வணங்க வேண்டியதே நமது கடமையாகும்.

[ஒரு சேவகன் ஓடிவந்து]

சேவகன் : மன்னர் மன்னவா! வணக்கம்.

செங் : என்ன செய்தி?

சேவ : இமயத்தில் புலிக்கொடியும், மீனக்கொடியும் பொறித்து வந்த சோழ பாண்டிய மன்னர்களின் வீரத்தை ஆரிய மன்னர்களாகிய கனக—விசயர்கள் இழித்துக் கூறினார்களாம். தங்கள் முன்னோர்கள் வலுவிழந்திருந்த காலத்தில் வந்து இதைச் செய்து விட்டுப் போனார்கள் என்றும், இப்போது வந்தால் புறங்காட்டி ஓட வேண்டுமென்றும் பழி தூற்றினார்களாம். இச்செய்தியைச் சோழநாட்டிலிருந்து நமது ஒற்றர்கள் அறிந்து வந்து, இங்கு அறிவிக்கச் சொன்னார்கள்.

செங் : அப்படியா? என்னால் நம்ப முடியவில்லையே அமைச்சரே! ஒற்றர் கூறிய செய்தி உண்மையாக இருக்குமா?

வில்லவன்கோதை : கனக—விசயர்களின் இப்போதைய நடவடிக்கை களைக் கூர்ந்து கவனித்தால், இச்செய்தி உண்மையாக இருக்கவேண்டும் என்றே தோன்று கிறது.

செங் : அப்படியானால், வடநாட்டின்மீது படை எடுக்க வேண்டியதுதான். இழித்துரைத்த மன்னர்களின் கொட்டத்தை அடக்கியாக வேண்டும். போருக்கு ஆயுத்தம் செய்யுங்கள்! புறப்படுவோம்.

வில்ல : அரசே! வணக்கம். சினம் தணிய வேண்டு கிறேன். தங்கள் ஆற்றலைக் கனக-விசயர்கள் அறியார்களா? கலிங்கத்துப் போர் ஒன்று போதுமே காலமெல்லாம் மறவாதிருக்க. அவர் பழிதூற்றியது தங்களையல்ல; சோழ, பாண்டியரையே!

செங் : வில்லவன்கோதை! நன்றாயிருக்கிறது உமது கருத்து! தமிழகத்து மன்னர்களில் எவரை இகழ்ந் தால்தான் என்ன? அது என்னை இகழ்ந்ததாகவே கருதப்படவேண்டும். தமிழ் மன்னர்களை இழித் துரைப்பவர் எவராயிருப்பினும் சரி! அவரது தலை தமிழ் மகனின் காலை வணங்கியாக வேண்டும். இன் றேல், தரையில் உருண்டாகவேண்டும்! போரில் வெற்றிமாலை சூடி, இமயத்தில் கல் எடுத்து, கங்கை யில் நீராட்டி, கண்ணகிக்கு கல் நாட்டுவோம். விரைவில் ஏற்பாடு செய்யுங்கள். வெற்றி முழக்கு வோம். சாத்தனாரே! உமது எண்ணம்?

சாத் : ஆம்; எனது எண்ணமும் நிறைவேற வேண்டும்.

செங் : என்ன அது?

சாத் : பாண்டியனது அரண்மனையில் கண்ணகி தோன்றிய காட்சியை ஒரு வெண்பாவில் அமைக்கும்படி இளங்கோவடிகளை வேண்டிக் கொள்வதுதான்.

செங் : தம்பி இளங்கோ! சாத்தனார் பாண்டிய நாட்டுப் பெரும் புலவர்களில் ஒருவர்; அவரது எண்ணத்தை நிறைவேற்றவேண்டியது நமது கடமை.

இளங்கோ : அண்ணா! அப்படியே ஆகட்டும். கண்ணகி தேவியின் வரலாற்றை ஒரு காவியமாக அமைக்க வேண்டுமென்பது எனது ஆசை. அதற்குச் சாத்தனார் உதவி பெரிதும் தேவை. அவர் குறிப்பிட்ட காட்சி அப்படியே என் உள்ளத்தில் பதிந்திருக்கிறது. கூறுகிறேன், கேளுங்கள் :

(வெண்பா)

இளங்கோ :

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்பும் கண்ணீரும்

சாத் : ஆகா!

இளங்கோ :

—வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

சாத் : ஆகா! இளங்கோ, இன்னொரு முறை!

[மறுபடியும் பாடுகிறார்.]

சாத் : என்ன நயம்! என்ன நயம்! எவ்வளவு அருமையான சொற்கள்! காட்சி அனைத்தும் கன்னித் தமிழாலே படம் பிடிக்கப் பெற்றுள்ளது. மிகவும் மகிழ்ச்சி. அடிகளே! தாங்கள் அருள்கூர்ந்து இவ் வரலாற்றைக் காப்பியமாக்குங்கள். தங்கள் விருப்பம் போல நானும் உடன் இருப்பேன். சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் புகழைக் கல்லால் நிலை நாட்டட்டும். தாங்கள் சொல்லால் நிலை நாட்டுங்கள். வாழட்டும் கற்பரசியின் புகழ்!

காட்சி : 7

இமயத்தின் அடியில் சேரனின் பாசறை

செங் : சேனைத் தலைவரே! நீங்கள் எல்லாப் படைகளையும் கொண்டு சென்று போரிடுங்கள். கனக விசயரைக் கொல்லாமல் சிறைப்படுத்திக் கொண்டு வரவேண்டும். உடனே செல்லுங்கள்.

ஆராய்ச்சியாளர்களே! நீங்கள் கல் தச்சர்களுடன் சென்று மீனக்கொடியும், புலிக்கொடியும் எவ்விடத்தில் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து, அவற்றிற்கு மேலே நமது விற்கொடியைப் பொறித்து வரவேண்டும்.

ஆரா : அப்படியே ஆகட்டும்.

காட்சி : 8

போர்க்களம்

விஜய : கனகரே! சேரனின் படை எடுப்பைத் தடுக்க முடியவில்லையே! பேராபத்தாகத் தோன்றுகிறதே!

கனக : விஜயரே! ஊக்கத்தைக் கைவிட வேண்டாம். இயன்றவரை முழு பலத்தையும் கொண்டு தாக்குவோம்.

விஜய : கனகரே! சேர மன்னனின் படைப் பெருக்கத்தைக் கண்டு, நமது படைகள் சிதறி ஓடுகின்றன. தமிழகத்து வீரர்களின் வாள் வீச்சுக்கும், வேல் குத்துக்கும் அஞ்சி, நமது வீரர்களிற் சிலர் புலி வேடம் பூண்டு காட்டுக்கும், பெண்வேடம் பூண்டு நாட்டிற்கும், தவவேடம் பூண்டு மலைக்கும் ஓடி மறைகின்றனர். நம்மால் இப்படை எடுப்பைத் தடுக்க இயலாது. வீணாகப் போரிட்டு மடிவதைவிடச் சேனைத் தலை

வனிடம் சரண் புகுந்துவிடுவதே சரியெனத் தோன்று கின்றது.

கனக : விஜயரே! உமது விருப்பம் அதுவானால் அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

காட்சி : 9

சேரமன்னரின் பாசறை

சேனை : அரசே! வணக்கம்,

செங் : யாரது? சேனைத் தலைவரா? வரட்டும். போர் மிகவும் கடுமையோ?

சேனை : அப்படி ஒன்றுமில்லை.

செங் : யார் இவர்கள்?

சேனை : இவர்கள்தான் தமிழகத்து மன்னர்களை இழித் துரைத்த கனக விசயர்கள்.

செங் : மிகவும் வீரமாகப் போர் செய்தார்களோ?

சேனை : இல்லை, சரணடைந்துவிட்டார்கள்!

செங் : விலங்கு, வீரர்களுக்கன்றோ ஏற்பட்டது? அவிழ்த்து விடுங்கள்.

கனக விசய : மன்னர் தலைவா! மன்னிக்க வேண்டும். நாங்கள் இனி தங்கள் அடிமைகள். எங்கள் நாட்டை....

செங் : உங்கள் நாட்டைக் கொள்ளை கொள்ளவோ, உங்களை அடிமை கொள்ளவோ நாங்கள் இங்கு வர வில்லை. இனிமேல் தமிழையும் தமிழ் மன்னரையும் எந்தத் தலைமுறையிலும் இழித்துப் பேசுவதில்லை என்ற உறுதிமொழி ஒன்றை உடனே கூறவேண்டும். இது உங்கள் முதற் கடமை.

கனக விசய : அப்படியே உறுதி கூறுகிறோம். அறியாமையால் செய்த பிழைக்கு மன்னிப்பும் வேண்டுகிறோம்.

செங் : நாங்கள் இங்கு வந்தது போரிட மட்டுமல்ல. கற்பரசியாகிய கண்ணகி தேவிக்குக் கல் நாட்டவுமாகும். ஆகவே, இமயத்தின் கல் ஒன்றை நீங்கள் இருவரும் தலையில் சுமந்து வந்து, தமிழ்நாட்டில் சேர்ப்பிக்க வேண்டும்.

கனகவிசய : அரசர்க்கரசே! அவ்வாறே செய்வோம். அதை எங்கள் பெரும் பேறாகவும் கருதுவோம்.

செங் : அமைச்சரே! கயற்கொடிக்கும், புலிக்கொடிக்கும் மேலே விற்கொடியும் பொறித்தாயிற்றோ?

அமை : ஆயிற்று அரசே!

செங் : பத்தினித் தெய்வத்தின் வடிவம் அமைப்பதற்குரிய இக்கல்லைப் பாதுகாப்பாகக் கொண்டுவர வேண்டும். வரும்வழியில் கங்கையிலும், காவிரியிலும் நீராட்ட வேண்டும். கற்பரசியை வணங்குவதற்கு ஏற்ற கோவில் ஒன்று அமைக்க நான் முன்னதாகச் செல்கிறேன். நீங்கள் விரைவாக வந்து சேருங்கள்.

[குதிரை ஏறிச் செல்லுகிறார்கள்]

ஒருவர் : சேர மன்னர்!

பலர் : வாழ்க!

(எல்லோரும்)

வெற்றி முழக்குவோம்
வெற்றி முழக்குவோம்
வெற்றி, வெற்றி, வெற்றி, என்று
வெற்றி முழக்குவோம்! (வெற்றி)

நாடக முடிவு

தமிழாசிரியர் வீடு

[முதற் காட்சியின் தொடர்ச்சி]

தமிழாசிரியர் : பார்த்தீர்களா அன்பர்களே! தமிழில் உள்ள செல்வங்களை?

இந்தி நாகரிகர் : பார்த்தோம் பாபு! பார்த்தோம்! இதிலே உள்ள படா சமாச்சார் என்ன பாபு?

தமிழாசிரியர் : பிச்சையெடாமல் பசியற்று வாழும் மக்களைக் கொண்டதே நாடு! பிறர் பொருளைத் தவறியும் பெறாதவர்களே மக்கள்! ஒழுக்கம் ஒன்றே உயர்ந்த செல்வம்! உடல் பிரிந்தாலும், உளம் பிரியாததே காதல்! பழி கலந்து வாழ்வதைவிட உயிர் பிரிந்து வாழ்வதே வீரம். தமிழுக்குப் பயன் படுமானால் தலையுங் கொடுப்பதே கொடை! 'இல்லை'யென்று வருபவர்முன், 'இல்லை'யென்று கூறுவதே இழிவு! சிறிய காரியங்களில் முயன்று வெற்றி பெறுவதைவிட, பெரிய காரியங்களில் முயன்று தோல்வியடைவதே சிறப்பு! பாராட்டுதற்கு மட்டுமல்ல-வணக்கத்திற்கும் உரியது கற்பு! என்பதே. இவையனைத்தும் தமிழ் காட்டும் செல்வங்கள்.

ஆங்கில நாகரிகர் : (இந்தி நாகரிகரிடம்) என்ன மிஸ்டர் நமக்கும் பர்த்கண்ட்ரி டமில் நாட்தான். நம்பளும் டமிலியன் இன்னுதான் சொல்லிக் கொள்கிறோம், சொல்லி என்ன செய்யறது? நம்ம மதர் டங்க்லே இவ்வளவு கிராண்டு ஐடியாஸ் இருக்கும்னு அறியாமப் போனோமே!

இங்.நா. : ஆமாம்! பாபு! நம்ப பாஷையிலே இவ்வளவு படா சமாச்சார்கள் இருக்குன்னு எனக்கு இப்பத்தான் தெரியுது. வஸ்தாத்தைக் கேட்போம்... ஜி! மாப் கர்ரோ' நம்ப தமிழ்லே இவ்வளவுதான் இருக்கா? இன்னும் ரொம்ப ஜாஸ்தி இருக்கா?

தமி : அன்பரே! தமிழ் வற்றாத ஒரு பெருங்கடல். அதனுள் மறைந்து கிடக்கும் முத்துக்கள் விலைமதிக்க முடியாதவை. முத்துக்குளிக்கும் மக்கள் தம் மூச்சு வலிமைக்கு ஏற்ற அளவு கடலில் மூழ்கி அள்ளிச் செல்வதுபோல, தமிழ்க்கடலில் மூழ்கும் மக்களும் அதில் உள்ள செல்வங்களைத் தமது அறிவு வலிமைக்கு ஏற்ற அளவு அள்ளிக்கொண்டு செல்லலாம். இதனைத் தடுப்பவர்கள் எவருமில்லை. ஏனெனில், தமிழ் மொழியும், தமிழர் நெறியும் உலகத்தின் பொதுச் சொத்து.

ஆங்.நா. ரொம்ப தாங்ஸ் சார்! இனிமேலே என் சைல்டுகளுக்கெல்லாம் தமிழைப் படிக்கணும்னு அட்வைஸ் பண்றேன்.

இங்.நா. : என்ன பாபு இது—சைல்டுகளுக்குப் போய் அட்வைஸ் எண்றது? நாமே இப்போ தமிழ் படிக்கணும்னு ஆரம்பிக்கணும் பாபு!

தமி : ஆம்; அன்பர்களே! தமிழைப் படியுங்கள். நன்றாகப் படியுங்கள். அதிலுள்ள செல்வங்களை அள்ளி உங்கள் வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தமிழ் மக்களாகிய உங்களிடம், தமிழனாகிய நான், தமிழைப் படியுங்கள் என்று, அதிலும் தமிழ் நாட்டிலிருந்து கொண்டே கூறிக் கொண்டிருப்பது, தமிழ்க் குலத்திற்கே ஒரு மானக் கேடாகும்.

இங்.நா. : போதும் பாபு, போதும்! எங்களுக்கு ரொம்ப லஜ்ஜையாக இருக்குது. எங்களை மாப் செய்து ஆசீர்

வாதம் பண்ணுங்கோ. நான் இனிமேல் தமிழைப் படித்துக் கொண்டு, தமிழ்ப் பிரசார சபையில் சேர்ந்து, தமிழை அபிவிருத்தி பண்ண முடிவு செய்துவிட்டேன்.

ஆங்.நா. : எஸ் சார்! நான் கூட அப்படியே செய்ய டிரை பண்றேன். இந்த பிராமிசை எப்போதும் கீப்பப் பண்ணுவேன். எக்ஸ்கியூஸ் பண்ணணும்.

தமி : அவ்விதமாயின் மிகவும் மகிழ்ச்சி. என் உள்ளம் குளிர்ச்சியடைகிறது. தமிழ் வளர, தமிழ் மக்கள் வாழ, தமிழ்நாடு செழிக்க, நாம் அனைவரும் தமிழ்த் தாயை வாழ்த்தி வணங்குவோம். வாருங்கள்.

(அனைவரும்)

தேவி செந்தமிழ்த் தாயே பராவுதும்
ஆவி தந்தருள் வாளே பராவுதும்
தேரும் எம்பெரும் பேறே பராவுதும்—வாழ்வாயே

(கூட்டுப் பாடல்)

செல்வம் வாழ்கவே! தமிழ்ச்
செல்வம் வாழ்கவே! செந்தமிச்
செல்வம் வாழ்கவே!

பல்சுவை நல்கும் இலக்கிய விருந்தாம்
பண்பினை யூட்டும் பசுந்தமிழ் மருந்தாம்—செல்வம்

முற்றிற்று!

முத்தமிழ்க் காவலர்

கி. ஆ. பெ. விசுவநாதம் நூல்கள்

தமிழ்ச் செல்வம் (நாடகம்)

தமிழின் சிறப்பு

மும்மணிகள்

நான்மணிகள்

ஐந்து செல்வங்கள்

ஆறு செல்வங்கள்

திருக்குறள் புதை பொருள்—I

திருக்குறள் புதை பொருள்—II

வள்ளுவர் உள்ளம்

வள்ளுவரும் குறளும்

திருக்குறள் கட்டுரைகள்

எண்ணக் குவியல்

தமிழ் மருந்துகள்

வானொலியிலே

அறிவுக்கு உணவு

நல்வாழ்வுக்கு வழி

நபிகள் நாயகம்

திருச்சி விசுவநாதம் (வரலாறு—தொடர்பன்)

முத்தமிழ்க் காவலர்

கி. ஆ. பெ. விசுவநாதம் நூல்கள்

மும்மணிகள் ....
நான்மணிகள் ....
ஐந்து செல்வங்கள் ....
ஆறு செல்வங்கள் ....
எண்ணக குவியல் ....
அறிவுக்கு உணவு ....
தமிழ் மருந்துகள் ....
வள்ளுவர் உள்ளம் ....
திருக்குறள் புதைபொருள் (முதற் பாகம்)
திருக்குறள் புதைபொருள் (இரண்டாம் பாகம்)
நல்வாழ்வுக்கு வழி ....
நபிகள் நாயகம் ....
வள்ளுவரும் குறளும் ....
திருக்குறள் கட்டுரைகள் ....
வானொலியிலே ....
தமிழ்ச் செல்வம் ....
தமிழின் சிறப்பு ....
மணமக்களுக்கு ....
எனது நண்பர்கள் ....
அறிவுக் கதைகள் ....
இளங்கோவும் சிலம்பும் ....
திருக்குறளில் செயல் திறன் ....
திருச்சி விசுவநாதம் ....
(மா. சு. சம்பந்தம்)

பாரி நிலையம்

184, பிராட்வே :: சென்னை-108

Wrapper Printed at Neo Art Press, Madras-14